பக்கங்கள்: 28
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 12, ஞாயிற்றுக்கிழமை 27.11.2016 | கதிர் 22

யாழ்.நகரில் புத்தம் புதிய
நவீன ஆடைத் தெரிவுகளுக்கு
Rasi Collections ராசி
கலெக்ஷன்ஸ்
இல.199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5571

# மாவீரர் தின நினைவேந்தல் மீள துயிலும் இல்லங்களில்!



## இன்று 4 இடங்களில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவம்பர் 27

**இன்று மாவீரர் தினம். எட்டு வருடங்களின் பின்னர் மீளவும் இம்முறை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.**

**கிளிநொச்சி மாவட்டம் கனகபுரம், முழங்காவில், முல்லைத்தீவு மாவட்டம் வன்னிவிளாங்குளம், யாழ்.மாவட்டம் உடுத்துறை ஆகிய இடங்களில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்திருந்த மைதானங்களில் இன்று மாலை இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறும் என சம்பந்தப்பட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

கடைசியாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னிப் பகுதி இருந்தபோது - 2008 மாவீரர் தினத்தின் போது - மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

அதன்பின்னர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டமையை அடுத்து அங்கிருந்த மாவீரர் நினைவு நடுகற்களும் புரட்டிப் போடப்பட்டன. புல்டோசர்கள் கொண்டு துயிலும் இல்லங்கள் உழப்பட்டன.

2008 இற்குப் பின்னர் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் துயிலும் இல்லங்களில் பெரும்பாலும் நடைபெறவில்லை. இம்முறை நான்கு இடங்களில் துயிலும் இல்லங்கள் அமைந்திருந்த பகுதிகளில் இன்று மாலை 6 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன.

பக்கம் 28 »

## கிளிநொச்சி கனகபுரத்தில்!

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள பகுதியில் மாலை 6.05 மணிக்கு இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வழிப்படுத்துவார்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்களும் பொது மக்களும் இந் நிகழ்வில்

பக்கம் 28 »

## முழங்காவில் நிகழ்வில் மாவை

கிளிநொச்சி மாவட்டம், முழங்காவிலில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த பிரதேசத்தில் இன்று இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பி னரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா பங்குபற்றுவார்

பக்கம் 28 »

## வன்னிவிளாங்குளத்தில்!

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளத்தில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த மையத்திலும் இன்று மாலை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசமும் மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.இங்கு நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல்

பக்கம் 28 »

## யாழ். உடுத்துறையில்!

யாழ்.மாவட்டத்தில் ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லத்தில் தான் இம்முறை நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் எனத் தெரிகின்றது.

உடுத்துறையில் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்டிருப்பதால் இங்கு நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கான

பக்கம் 28 »

# காஸ்ட்ரோ காலமானார்



கொழும்பு, நவ.27

கியூபா புரட்சியின் தந்தையும் கியூபாவின் முன்னாள் அதிபருமான பிடல் காஸ்ட்ரோ நேற்றுக் காலமானார்.அவருக்குவயது-90.

அவரது பூதவுடல் நேற்றிரவு தகனம் செய்யப்படவிருந்தது.

இறுதிச்சடங்குடிசெம்பர்மாதம் 4ஆம் திகதி கியூபாவின் தென்கிழக்கில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரமான சாண்டியாகோவில் நடைபெறும் என்றும் கியூபா அரசு தெரிவித்துள்ளது.

கியூபாவின் அரசு தொலைக்காட்சியில் காஸ்ட்ரோவின் சகோதரரும், தற்போதைய அதிபருமான ரவுல் காஸ்ட்ரோ இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பக்கம் 27 »

### அளப்பு அருணாசலம்



அவையளுக்கு அந்தக் காஸ்ட்ரோவைத் தெரியுது... நம்மட ஊர் காஸ்ட்ரோக்களை தெரியேல்லப் பாருங்கோ...!

# மீள்குடியேற்ற அமைச்சு மீது தற்போது நம்பிக்கை இல்லை

*நாடாளுமன்றில் மாவை. சேனாதிராசா எம்.பி.*

கொழும்பு, நவ.27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மீள்குடியேற்ற அமைச்சும் கூட்டு நடவடிக்கை மூலம் செயற்பட வேண்டும் என்று நாம் பல இடங்களில் வலியுறுத்திய போதிலும் இன்றுவரை அது சாத்தியப்படவில்லை. மீள்குடியேற்ற அமைச்சின் மீது நம்பிக்கை கொள்ள முடியாத நிலையே தற்போது காணப்படுகிறது.

இவ்வாறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்

பக்கம் 28 »

# காஸ்ட்ரோ மறைவுக்கு சம்பந்தன் இரங்கல்

கொழும்பு, நவ.27

கியூபாவின் புரட்சியாளர் பிடல் காஸ்ட்ரோவின் மறைவுக்குதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் இரங்கல் தெரிவித்துள்ளார். காஸ்ட்ரோ என்ற மாபெரும் தலைவனை இழந்து தவிக்கும் கியூபா மக்களுக்கு அவர் தனது அனுதாபங்களையும் தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்காலத்துக்கும் கடந்த

பக்கம் 28 »

# உள்ளூராட்சித் தேர்தல் மார்ச்சில் நடக்காது பதிலாக அச்சமயம் சர்வஜன வாக்கெடுப்பு

## அரசின் திட்டம் அதுதானாம்

கொழும்பு, நவ.27

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அடுத்த வருட முற்பகுதியில் நடத்தப்படலாம் என எதிர் பார்க்கப்பட்ட போதிலும், அதனைத் திரும்பவும் தள்ளி வைத்துவிட்டு, அதற்குப் பதிலாக வருட முற்பகுதியில் - பெரும்பாலும் மார்ச் மாதத்தில் – உத்தேச புதிய அரசமைப்புக்கு மக்கள் அனுமதியைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பைநடத்துவதுகுறித்து அரசுத் தலைமை சிந்தித்து வருகின்றதாம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது, கிராம மட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி ஒரு கட்டமைப்பாகக் காலூன்றுவதற்கு வழி சமைத்துவிடும் என்று அஞ்சும் அரச உயர் மட்டம், அரசமைப்பு மாற்றத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதாயின், கூட்டு எதிரணி அரசியல் ரீதியாகக் காலூன்றுவதற்கு இடமளிக்காமல் அதனைத் தாமதப்படுத்த வேண்டும் எனக் கருதுவதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, மேற்படி சர்வஜன் வாக்கெடுப்பு நடக்கும் வரை உள்ளூராட்சித் தேர்தலை எப்

பக்கம் 28 »

# புதிய அரசியலமைப்பு குறித்து மஹிந்தவுடன் பேசுமாறு பிரதமரை கேட்பார் ஜனாதிபதி

கொழும்பு, நவ.27

உத்தேச புதிய அரசமைப்பு திட்டத்தினை கொண்டு வருகின்றமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்களைத் தொடங்குமாறு தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்கவிருக்கின்றார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்

பக்கம் 28 »

# ஐ.நா. உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்திலிருந்து இலங்கையை ட்ரம்ப் அரசுடன் உரையாடி விடுவிப்போம்!

## காலிக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால அறிவிப்பு



கொழும்பு, நவ.27

''இலங்கைக்கு உரிய உதவிகளை வழங்கும்படி புதிய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

''ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக முன் வைத்துள்ள தீர்மான முன்மொழிவுகள் குறித்து விசேட பிரதிநிதிகள் மூலம் புதிய ட்ரம்ப் அரசுடன் உரையாடி, அந்தச் சிக்கலிலிருந்து இலங்கையை விடுவிப்போம்.''

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நேற்று முற்பகல் காலி நகர மண்டபத்தில் நடைபெற்ற காலி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்துவ மேம்படுத்தல் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிபெறும் கட்சியாக மாற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

சு.க ஆரம்பத்திலிருந்தே சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றிபெற்ற கட்சியாகும். எதிர்காலத்திலும் அவ்வாறே இடம்பெறும்.

அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் நடத்தப்படும் உள்ளூராட்சிதேர்தல்களில் சு.க வெற்றிபெற வைக்கும் பொறுப்பை உறுதியாக நிறைவேற்றுவேன்.

இனி இடம்பெற இருக்கும் தேர்தல்களில் சு.க தனது பழைய சின்னமான கை சின்னத்திலேயே போட்டியிடும்.

அனைத்து இடதுசாரி முற்போக்கு கட்சிகளையும் அணிதிரட்டிக்கொண்டு கட்சியை வெற்றியை நோக்கி இட்டுச் செல்வேன்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளின்போது ஆற்றல் குறைந்தவர்களுக்காக முன்னிற்கிறோம். மக்களுக்கு பொருளாதார நிவாரணங்களை வழங்குவதுடன், மக்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் கட்சியாக சு.கயின் பொறுப்பை நிறைவேற்றுகிறேன்.

வடக்கின் பிற்போக்குவாதத்தையும் தெற்கின் பிற்போக்குவாதத்தையும் நிராகரித்து, அனைத்து இன மக்களும் நம்பிக்கையுடன் வாழக்கூடிய நாடாக இலங்கையை கட்டியெழுப்புவதே எமது திட்டம்.

ஊழல், மோசடி, முறைகேடுகளை இல்லாதொழித்து மக்கள் பணத்தை சட்டைப்பைகளில் போடாமல், நேர்மையாக பணியாற்றுவது எப்படியென்பதனை, சுதந்திரக் கட்சி என்ற வகையில் நாட்டிலுள்ள அனைவருக்கும் புதிய பாடமாகக் கற்பிப்பது கட்டாயமானது.

கடந்த அரசாங்க காலத்தில் நில்வளகங்கை திட்டத்துக்கெனக் கூறி 400 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டது.

எமது நாட்டின் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால செயற்பாடுகளுக்காக அமெரிக்க உதவிகளைவழங்குமாறு புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கைக்கு முன்வைத்துள்ள முன்மொழிவுகளை அவருக்கு அனுப்பி விசேட பிரதிநிதிகள் ஊடாக கலந்துரையாடி இந்த நிலையிலிருந்து நாட்டை விடுவிக்க நடவடிக்கை எடுத்து, அவற்றில்வெற்றிபெற முடியுமென உறுதியாக நம்புகிறேன் - என்றார் ஜனாதிபதி.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர, முன்னாள் அமைச்சர் பியசேன கமகே, காலி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளும் பெருமளவில் பங்குபற்றினர். (உ)

# இந்தியக் கடவுச் சீட்டுகளுடன் மகளிரை வெளிநாட்டு வேலைக்கு அனுப்பும் முயற்சி

## கட்டுநாயக்காவில் ஆறு பெண்கள் சிக்கினர்

இந்திய கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி இலங்கைப் பெண்களை வெளிநாட்டுக்குக் கடத்தும் பெரியளவிலான வியாபாரம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக இந்த தகவல் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இந்தியக் கடவுச்சீட்டுக்களுடன் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்ற ஆறு பெண்கள், தாங்கள் சுற்றுலா விசாவில் டுபாய் செல்லவுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டதால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் அவர்களைச் சோதனையிட்டனர்.

அதன்போது, அந்தப் பெண்களிடம் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 6 கடவுச்சீட்டுகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றில் இலங்கைப் பெண்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

மேலும், அந்தப் பெண்களிடம் இலங்கைக் கடவுச்சீட்டுகள் ஆறும் இருந்தன. வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளின்போது தப்புவதற்காகவே தாங்கள் இந்திய கடவுட்சீட்டுகளைப் பயன்படுத்துகின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம், இந்த வியாபாரத்தில் ஈடுபடும் நபர் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். 6 பெண்களும் குற்றப்புலனாய்வு துறையினரிடம் கையளிக்கப்பட்டனர். (ம)

# ஆட்கடத்தலுடன் தொடர்புடைய 8 பேர் மலேசியாவில் கைது!

## -கடத்தப்பட்ட 35 பேர் மீட்பு; ஐவர் இலங்கையர்-

கோலாலம்பூர்,நவ.27

மலேசியாவில் ஆட்கடத்தலுடன் தொடர்புடைய இலங்கையர் இருவர் உட்பட 8 பேரைக் கைது செய்த மலேசியப் பொலிஸார், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, அவர்களால் தடுத்துவைக்கப்பட்டிருந்த 35 பெண்களை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்டவர்களில் ஐவர் இலங்கையர் எனவும் ஏனைய 30 பேரும் இந்தியர்கள் எனவும் கோலாலம்பூர் பொலிஸ் பொறுப்பதிகாரி டட்டுக் அமர்சிங் தெரிவித்தார்.

வேலைவாய்ப்பு முகவர்கள் போல நடித்த மேற்படி 8 பேரும் மலேசியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக இலங்கை, இந்தியப் பெண்களுக்கு ஆசை காட்டி அவர்களை அங்கு அழைத்துச் சென்றனராம்.

அங்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளை வாடகைக்கு எடுத்து அவர்களைத் தங்க வைத்து பாலியல் வியாபாரம் நடத்தியுள்ளனர். கடந்த 8 மாதங்களாக இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்று வந்தன என பொலிஸ் அதிகாரி டட்டுக் அமர்சிங் கூறினார்.

இந்தக் கடத்தல் வியாபாரத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர்களைக் கைது செய்து அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகள் மூலம், அவர்களால் கடத்தப்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அந்த இடங்களுக்குள் திடீரெனப் புகுந்த கோலாலம்பூர் பொலிஸார் அங்கிருந்தவர்களை மீட்டனர்.



8 பேர் கொண்ட மேற்படி கடத்தல் குழுவுக்கு 32 வயதுடைய இலங்கையர் ஒருவரே தலைவராகச் செயற்பட்டார். இவரின் உதவியாளராக 47 வயதுடைய இந்தியப் பெண்ணொருவர் செயற்பட்டார். மூவர் சாரதிகள். ஏனைய மூவரும், இவர்களால் கடத்தப்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த மூன்று இடங்களுக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தவர்கள் எனவும் கோலாலம்பூர் பொலிஸ் அதிகாரி டட்டுக் அமர்சிங் தெரிவித்தார். (ம)

# ஆசிரியர்களுக்கு அனுமதி அட்டை

இலங்கையின் பாடசாலை ஆசிரியர்களுக்கு வகுப்பறையில் கற்பிப்பதற்கு புதிய அனுமதி அட்டையொன்றை வழங்குவதற்கு எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வித் துறையிலுள்ள பல்வேறு பிரச்சினைகள் இதன் மூலம் தீர்க்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாடு மண்டபத்தில் [illegible] நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

# 200 வருட லயன் வாழ்வுக்கு 2020 இல் முடிவு கட்டப்படும்

## - அமைச்சர் பழனி திகாம்பரம் உறுதி-

''மலையத்திலுள்ள மக்களுக்கு 25 ஆயிரம் தனி வீடுகள் அமைக்கும் பணி தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 200 வருட லயன் வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும். 2020ஆம் ஆண்டில் தனி வீடுகள் அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்''

இவ்வாறு, மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் மலையக மக்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 4000 தனி வீடமைப்பு வேலைத்திட்டம் நேற்று சனிக்கிழமை காலை நுவரெலியா - டயகம தோட்டம், டயகம மேற்கு தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு 150 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இங்கு கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர் -

மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக அமைத்துக் கொடுக்கப்படும் 7 பேர்ச் காணியுடனான தனி வீடுகளுக்கு அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதத்திற்கு முன்பதாக காணி உறுதிப்பத்திரமும், வீட்டு உரிமைப் பத்திரமும் வழங்கப்படும்.

மலையக மக்களின் வாழ்வில் எழுச்சியை கொண்டு வருவதற்காக நல்லாட்சி அரசாங்கம் இரண்டு முக்கிய அமைச்சுகளை வழங்கியுள்ளது. இதனூடாக கல்வி மற்றும் தனி வீட்டு அமைப்பு ஆகியவற்றை நிரந்தரமாக்குவதில் நாம் முக்கிய அபிவிருத்திப் பணிகளை செய்து வருகின்றோம்.

அதேபோன்று ஜனவரி மாதம் முதல் பெருந்தோட்ட பகுதிகளுக்கு மேலதிகமான அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படும். இதனடிப்படையில் அனைத்து தோட்டப்பகுதிகளிலும் கூரைத் தகடுகள் மாற்றம் செய்யப்படும்.

இவ்வாறான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல அடுத்த வருடம் பத்தாயிரம் மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கவுள்ளது. அடுத்த வருடம் இறுதிக்குள் 14ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படும். - என்றார். (ம)

# சாவைத் தழுவிய உத்தமர்களை தமிழர்கள் நினைவு கூரும் நாள்

## மாவீரர் தினம் குறித்து நாடாளுமன்றில் சிறிதரன்



சாவைத் தழுவிய தமிழ் உத்தமர்களைத் தமிழர்கள் நினைவு கூரும் நாள்தான் மாவீரர் நாள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகச் சிறிதரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நேற்றுச்சனிக்கிழமைநாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் வாழ்வில் மாவீரர் நாள் ஒரு புனித நாள். தமிழினத்தின் இருப்புக்காகத் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த உன்னதமான உள்ளங்களைத் தமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் தமிழர்கள் நினைவு கூரும் நாள். தமிழர் நிலம் சுதந்திர தாயகம் கொண்டு எழுச்சி கொள்ளும் மகத்தான நாள். தமிழர் மண்ணின் விடிவுக்காகவும் தமிழர் விடுதலைக்காகவும் தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்மினிய வீரர்களைத் தமிழர் தம் இதயக் கோயில்களில் தம் நெஞ்சுருகிப் பூசிக்கும் திருநாள்.

தமது உன்னதமான உயிருக்கும் மேலாகத் தமது தேசத்தின் விடுதலையை அதியுன்னதமாக நேசித்து அந்த உயரிய இலட்சியத்துக்காகச் சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களைத் தமிழர்கள் போற்றி வணங்கும் நன்னாள். தமிழர் நிலம் விடுதலை பெற்று தமிழ் மக்கள் சுதந்திரமாகத் தன்மானத்துடன் வாழவேண்டுமென்ற சத்திய இலட்சியத்துக்காக மடிந்த எமது தன்மான வீரர்களைத் தமிழர்கள் தம் நெஞ்சப் பசுமையிலே நிறுத்திக் கொள்ளும் தேசிய நாள். ஆயிரமாயிரம் அக்கினிப் பந்துக்களாக, எரி நட்சத்திரங்களாக எரிந்து எமது விடுதலை வானை அழகுபடுத்தி அலங்கரித்து நிற்கும் எமது சுதந்திரச் சிற்பிகளை நினைவு கூரும் புனித நாள்.

இந்த உலகத்தைத் துறந்த, இளமையின் இனிமையான உணர்வுகளைத் துறந்து, சாதாரண வாழ்வின் சகலவற்றையும் துறந்து, தமிழ் மக்களுக்காகவும் அவர்கள் உயிர் வாழ்வதற்காகவும் தமது உன்னதமான உயிர்களை உவந்தளித்த உத்தமர்களுக்கு தமிழர்கள் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்தும் நாள். சுயநல இன்பங்களைத் துறந்து பொதுநல இலட்சியத்துக்காகப் போராடி வாழ்ந்து, அந்தச் சத்திய இலட்சியத்துக்காகச் சாவைத்தழுவிய உத்தமர்களைத் தமிழர்கள் நினைவு கூரும் புனித நாள்.

விடுதலை என்பது வாழ்வின் அதி உயர்ந்த விழுமியம். அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து, அதற்காக வாழ்ந்து, போராடி, அதற்காகவே மடிந்த எமது மாவீரர்கள் மகத்தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது வீர விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள். எமது மாவீரர்களின் வீரம் செறிந்த போராட்ட வாழ்வையும் அவர்களது ஒப்பற்ற தியாகங்களையும் அற்புதமான அர்ப்பணிப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி நினைவு கூரும் இத் திருநாள் தமிழர்களின் வரலாற்றில் புனித நாள்.

நீங்காத நினைவுகளாக எம்மோடு ஒன்றிக் கலந்துவிட்ட உணர்வுகளாகக் காலத்தால் அழியாது என்றும் எம்முள் உயிர் வாழும் இம் மாவீரர்களைக் கௌரவிப்பதில் தமிழர் தாயகம் பெருமை கொள்கிறது. மாவீரர் நினைவாக ஈகச் சுடரை ஏற்றும்பொழுது அந்த எரியும் சுடரில் அந்த தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான படிமத்தில், தமிழர்கள் தங்களுக்காக ஈகம் புரிந்த பிள்ளைகளின் தரிசனத்தைக் காண்கிறார்கள்.

அக்கினியாகப் பிரகாசித்தபடி ஆயிரம் மனிதத் தீபங்கள் நெருப்பு நதிபோல ஒளி காட்டி வழிகாட்டிச் செல்லும் அதிசயக் காட்சி ஒவ்வொரு தமிழர் மனத்திரையிலும் திடீரெனத் தோன்றி மறையும்.

மானிடத்தின் விடுதலைக்காக மா பெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்றுப் பெருமை கொண்டவர்கள் மாவீரர்கள். மாவீரர்களை புனிதர்களாகத் தமிழர்கள் கௌரவிக்கிறார்கள். தாய் நாட்டின் விடுதலையென்ற பொதுமையான பற்றுணர்வால் ஈர்க்கப்படும் அவர்கள் தமது தனிமையான பற்றுக்களையும் பாசவுறவுகளையும் துறந்து விடுகிறார்கள். சுயவாழ்வின் சுகபோகங்களைக் கை விட்டுப் பொது வாழ்வின் அதியுயர் விழுமியத்தைத் தழுவிக் கொள்கிறார்கள். அந்தப் பொதுவான இலட்சியத்துக்காகத் தமது சொந்த வாழ்வையும் அர்ப்பணித்தவர்கள். இது ஒரு புனிதமான துறவறமாகும். இந்தப் புனிதத் துறவறத்துக்கு இலக்கணமாக விளங்கும் மாவீரர்களைத் தமிழர்கள் புனிதர்களாக பூசிக்கிறார்கள். என்றார்.

### பிரபாகரனின் பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாட்டம்



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் 62ஆவது பிறந்ததினம் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மாணவர்கள் கேக் வெட்டி பிரபாகரனின் பிறந்ததினத்தைக் கொண்டாடினர்.

நேற்று 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 62ஆவது பிறந்த தினமாகும்.

பிரபாகரனின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் கூடிய மாணவர்கள் பிரபாகரனின் புகைப்படங்களை வைத்து கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடியுள்ளனர்.

(ஐ-10-12)

### மதுபோதையில் வாகனம் செலுத்தியோர் ரூ.33ஆயிரம் இழப்பு

மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு மொத்தமாக 33 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று. நெல்லியடி நகர்ப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்ற நால்வரை நெல்லியடி போக்குவரத்துப் பொலிஸார் கைது செய்த நிலையில் இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

(ஐ-40)

## வடமராட்சிப் பகுதிகளில் மாவீரர் தின சுவரொட்டிகள்




மந்திகை, நவ. 27

இன்று மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் நேற்று வடமராட்சியில் பல பகுதிகளில் மாவீரர் தின சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

கரவெட்டிப்பகுதியில் சாமியன் அரசடி, விக்னேஸ்வரா வீதி, கரணவாய், துன்னாலைப் பகுதிகளிலும் மற்றும் உடுப்பிட்டி வல்வெட்டித்துறைப் பகுதிகளிலும் "யாழ் செல்லும் படையணி - தமிழீழம்'' எனும் அடிக்குறிப்புடன் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

பருத்தித்துறை - தும்பளை வீதியில் 'மாவீரர் நாள் நவம்பர் - 27' என்று வெண்கட்டியால் எழுதப்பட்டிருந்தது. அத்துடன் தேசியத் தலைவருக்கு பிறந்தநாள் வாழ்த்தும் எழுதப்பட்டிருந்தது. இதில் 'புலி மீண்டும் வருவோம்' என்ற சொல்லில் 'புலி' என்பது 'புளி' என்று எழுதப்பட்டு பின்னர் 'புலி' என மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-40)

வெல்லுங்கள் பரிசு- Rs.20,000

? குறியினால் காட்டப்பட்டுள்ள சதுரத்தினுள் வர வேண்டிய மிகச் சரியான கோலத்தை (a), (b), (c), (d) ஆகிய உருவங்களில் இருந்து தெரிவு செய்க.
(a) (b) (c) (d)
பரிசுகளை வழங்குவது கல்வியங்காட்டில்
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society
Phone : 759520941, 0212219464 Web : www.mcal.edu.lk

விரைவில்
எமது யாழ் மண்ணில்...
உங்கள் வீட்டு கூரைகளுக்கு புதிய அத்தியாயம் ஆரம்பம்...
சியன
யாழ்ப்பாணம்
Hospital Road, Jaffna.
077 9494200
jaffnasiyana

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்து வரும் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனமாக விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி இனங்காணப்பட்டுள்ளது. பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 - 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 - 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 - 222 2600


## இன்றைய நாளில் ஒரு கேள்வி

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்று மிக முக்கியமான நாள். உணர்வுபூர்வமான தினம். மனித மனங்களுக்குள் புகுந்து தடுப்புக்களையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கும் வலிமை சட்டங்களுக்கும் அதிகாரங்களுக்கும் இல்லை.

தமிழினம், தமது வீர மறவர்களை தனது நெஞ்சுக்குள் புதைத்து வைத்து பூஜிக்கிறது; போற்றுகிறது; ஏற்றுகிறது.

எனவே, அந்த நினைவேந்தலை எந்தச் சட்டத்தாலும் எந்த மேலாதிக்கத்தாலும், எந்தப் படைகளாலும் தடுத்துவிட முடியாது. அது தென்னிலங்கை ஆட்சி அதிகாரத்துக்கும் நன்கு தெரியும்.

தம் இருப்பு நிரந்தரமில்லை என்று தெரிந்தும், எம் இன இருப்புக்காகத் தம்மைத் தொலைத்தவர்கள் இந்த வீர மறவர்கள். ஆகவே, என்றும் அவர்கள் அணையா ஒளியாக - அழியாப் பேரான்மாவாக - தமிழ் இனத்துள் வாழ்பவர்கள்.

தம் உடல் சிதறும் கணங்கள் தெரிந்தும், நிதானத்துடன் நடந்து, இலக்கை நெருங்கி காற்றோடு கலந்தவர்கள்; கடலின் ஆழத்துக்குள் கரைந்தவர்கள்; நெருப்பின் சுவாலைக்குள் அக்கினியாய் புகுந்து பெரும் வெடிப்பை நிகழ்த்தியவர்கள்; வானத்தில் வல்லமை நிகழ்த்தி வரலாறானவர்கள் அவர்கள்.

ஓர் இனத்தின் விடுதலை வேண்டிய பயணத்தில் ஒப்புயர் வற்ற தியாகங்களையும் ஈகங்களையும் புரிந்துவிட்ட பெருந் தகைகளின் நினைவு நாள் இது.

எமது தமிழினம் நிம்மதியாக, கௌரவமாக, அந்நிய சக்தி களின் தலையீடோ, மேலாதிக்கமோ இன்றி சுதந்திரமாக, பாதுகாப்பாக, தன்மானத்துடனும் தனித்துவச் சிறப்போடும் வாழ வேண்டும் என்ற ஓர் உன்னத - சத்திய - இலட்சியத்துக்காகத் தங்களையே ஆகுதியாக்கிய ஒரு தலைமுறையின் தற்கொடைச் சிறப்பு இந்த சரிதத்துக்குள் விரவிக் கிடக்கிறது.

ஈடிணையற்ற ஈகங்கள் புரிந்து, அளப்பரிய அர்ப்பணிப்புக் கள் செய்து, எண்ணற்ற சாதனைகளைப் படைத்த ஒரு போராட்ட சரிதத்தின் குறியீட்டு நாள் இன்று.

அத்தகைய உயரிய போராட்டத்தின் பின்னரும், அளவற்ற தியாகங்களின் பின்பும், தமிழினத்துக்கு விடிவு கிடைக்க வில்லை.

முடிவில்லா ஒரு துன்பியல் நாடகமாக இலங்கைத் தமிழர் களின் அவல வாழ்வு தொடர்கின்றது. போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, நீடித்த தீர்வுமின்றி அரசியல் வெறுமையில் தமிழரின் நிர்க்கதி நிலை நீளுகின்றது.

யுத்த காலத்தில் தனது தனித்துவம் என்ற உயரிய பண்பியல் விழுமியத்தைத் தற்பாதுகாத்துக் கொண்ட தமிழினம், இன்று தாயகத்தைக் கற்பூரமாகக் கரைத்து இழந்துகொண்டிருக்கிறது.

ஆயுத முனையில் அடக்கப்பட்ட தமிழினத்தின் உரிமைப் போரின் இறுதியில் சமாதானம் வந்துவிட்டதாகவும், அமைதி திரும்பிவிட்டதாகவும், இணக்கத் தீர்வு இதோ வந்துவிடப் போவது போலவும் ஆசாடப்பூதிப் பிரசாரங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

அத்தகைய பிரசாரங்களுக்குத் துணைபோகும் நம்ம வர்கள், அதன் ஒரு பகுதியாக நமது வீர மறவர்களின் ஒப்புயர் வற்ற தியாகத்தை அவ்வப்போது கொச்சைப்படுத்தும் அசிங்கங் களும் இங்கு அரங்கேறாமல் இல்லை.

முன்னர் மாவீரர்தின நிகழ்வுகளின்போது முக்கியமான அம்சமாக இடம்பெறுவது தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை. அவரது கடைசி மாவீரர் தின உரை 2008 இல் நிகழ்த்தப்பட்டது. அப்போது அவர் சொல்லிச் சென்ற ஒரு செய்தியை இங்கு தொட்டு நிற்பது பொருத்தமானது.

*"…. புலிகளைத் தோற்கடித்த பின்னர்தான் தமது தீர்வுத் திட்டத்தை அறிவிப்போம் எனக் கூறிக் கொண்டு, போரை நடத்துகின்றது (சிங்கள தேசம்). தமிழர்களைக் கொடுமைப் படுத்திக் கொன்றொழித்த பின்னர், சிங்களம் யாருக்குத் தீர்வை முன்வைக்கப் போகிறது? தமிழரின் உண்மையான பிரதிநிதிகளை - அவர்களது பேரம்பேசும் சக்தியை - அழித்து விட்டு, எப்படிச் சிங்களம் தீர்வை முன்வைக்கப் போகிறது? தமிழரின் வரலாற்றுச் சொத்தான தாயக நிலத்தையே ஏற்க மறுக்கும் சிங்களம், எப்படி எமது மக்களுக்கு ஒரு நீதியான தீர்வை முன்வைக்கப்போகிறது?*

*"…. சிங்கள தேசத்திலே கடந்த அறுபது ஆண்டுகளாக நிகழாத அரசியல் மாற்றம் இனிவரும் காலங்களில் நிகழ்ந்துவிடப் போவதில்லை. அப்படி நம்பி ஏமாறுவதற்கும் எமது மக்கள் தயாராக இல்லை."*

- இவ்வாறு தலைவர் பிரபாகரன் தமது கடைசி மாவீரர் தின உரையில் குறிப்பிட்டிருந்தார்.

தலைவர் பிரபாகரன் கேள்வி எழுப்பியபடி, தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகளை - அவர்களின் பேரம் பேசும் சக்தியை - அழித்துவிட்டு இப்போது தீர்வு முயற்சிகள் என்ற பெயரில் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முப்பது வருட ஆயுதப் போராட்டதை முன்னின்று நடத் திய தலைவர் பிரபாவின் பட்டறிவு *"…. சிங்கள தேசத்திலே கடந்த அறுபது ஆண்டுகளாக நிகழாத அரசியல் மாற்றம் இனிவரும் காலங்களில் நிகழ்ந்துவிடப் போவதில்லை"*. - என்ற கூற்றுக்கு மாறாக, அரசியல் மாற்ற அதிசயம் நிகழ்ந்து விட்டது போலவும், அதனால் தீர்வு சாத்தியமாகிவிட்டது போலவும் சில தரப்புக்கள் நம் மத்தியில் இப்போது பேசுகின்றன.

*"அப்படி அதிசயம் நிகழும் என்று நம்பி ஏமாறுவதற்கு நமது மக்கள் தயாராக இல்லை"*. - எனப் பிரபாகரன் கூறிய கருத்துக்கு முற்றிலும் மாறாக, அப்படியான அதிசயத்தை எதிர்பார்த்து நிற்கின்றது தற்போதைய தலைவர்களைத் தனது பிரதிநிதிகளாக அங்கீகரித்த நமது இனம்.

எது நடக்கும்? பொறுத்திருந்து பார்ப்போமே…!

# நாமலின் பந்தயத் திடல்கள் மக்களுக்காக ஒதுக்கப்பட்டன

*அமைச்சர் சஜித் பிரேமதாஸ தகவல்; அதிர்ச்சியில் நாமல்!*

கொழும்பு, நவ.27

நாமல் ராஜபக்ஷவின் பெயரில் இருந்த கார் பந்தயத் திடலும், குதிரைப்பந்தய திடலும் பொதுமக்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதனால் அதிக மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

- இவ்வாறு அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற வீடமைப்புக் குறித்த குழுநிலை விவாதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட நாமல் ராஜபக்ஷ-

நூறு நாள் வேலைத்திட்டம் என்று சொல்லிக்கொண்டு வந்தீர்கள். ஆனாலும் இதுவரை என்ன செய்தீர்கள் என்பது தெரியவில்லை.

வரிகளையும் விதித்துக்கொள்கின்றீர்கள். போதாக் குறைக்கு வட்டிகளையும் பெற்றுக் கொள்கின்றீர்கள்.

இதுவரைக்கும் வீடமைப்புக்காக என்ன அபிவிருத்தியைச் செய்தீர்கள், கொழும்பு பிரதேசத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் எத்தனை வீடுகளை அமைத்தீர்கள்?

எனது தந்தை மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அமைக்கப்பட்ட வீடுகளைத் திறந்து வைப்பதில் மட்டும் முந்திக்கொண்டீர்கள் என்பதே உண்மை.

வீணாக மைத்திரி, ரணில் பின்னால் செல்வதையும் அவர்களின் பேச்சுக்குக் கட்டுப்படுவதையும் விட்டு விட்டு மக்களுக்காக ஏதாவது செய்யுங்கள் என்று தெரிவித்தார்.

இவரது குற்றச்சாட்டுக்களுக்கு அமைச்சர் சஜித் பிரேமதாஸ பதில் அளிக்கையில்-

நான் இப்படி சொல்வதற்குக் கோபித்துக் கொள்ள வேண்டாம் நாமல் அவர்களே, இந்த வருடத்தில் மட்டும் 5 ஆயிரத்து 800 மில்லியன் ரூபாவை வீடமைப்புக்காக ஒதுக்கியுள்ளோம்.

அடுத்த வருடம் நூற்றுக்கு 50 சதவீதத்தால் இது அதிகரிக்கப்படும். வீணாகக் குறைகளை கூறாதீர்கள். உங்களது தந்தையின் ஆட்சியை விடவும் அதிக வீடமைப்பு அபிவிருத்திகளைச் செய்தே உள்ளோம்.

அத்தோடு இந்தப் பதிலும் ஊசியால் கண்களை குத்துவது போல் இருக்கும் உங்களுக்கு. ஆனாலும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

உங்கள் பெயரில் இருந்த கார் பந்தயத் திடலையும், குதிரைப் பந்தயத் திடலையும் பொது மக்களுக்காக ஒதுக்கிக் கொடுத்துள்ளோம். அதுவே மிகப்பெரிய விடயம். அதனால் அதிக மக்கள் பயன் பெற்றுள்ளார்கள். - என்றார் சஜித். (ஐ)

## ஐ.தே.க. - பஸில் இணைந்து சு.கவை பிளக்க சதித் திட்டம்

*அமைச்சர் டிலான் காட்டம்*

கொழும்பு, நவ.27

''அடுத்த வருடம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைப்பதற்கு, ஐ.தே. கட்சியின் ஒரு பிரிவினருடன் சேர்ந்து பஸில் ராஜபக்ஷ சதித் திட்டம் தீட்டியிருக்கின்றார். அது பற்றிய முழு விவரமும் எனக்குத் தெரியும். தேவைப் பட்டால் அந்த விடயங்களைப் போட்டுடைப்பேன்''.

-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும் ராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா.



'இந்தச் சதித்திட்டம் தொடர்பாக அவர்கள் எங்கு சந்தித்துப் பேசினார்கள், என்ன பேசினார்கள் என்ற விவரம் எல்லாம் என்னிடம் இருக்கிறது. சமயம் வரும்போது விலாவாரியாக அவற்றை அம்பலப்படுத்துவேன்' - இவ்வாறு அமைச்சர்டிலான்பெரேராமேலும் தெரிவித்திருக்கிறார். (உ)

## அரச பணியாளர்களுக்கு இனி புதிய முறையில் பதவி உயர்வு!

எதிர்காலத்தில் அரச சேவையாளர்களின் செயற்றிறனை அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்காக புதிய நடைமுறை ஒன்றை ஆரம்பிப்பதாக இதன் போது அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் காணப்பட்ட சேவைக் காலத்தின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கும் நடைமுறையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக, நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் கூறினார். (ம)

# போர் முடிவுக்கு வந்த பின்னரும் 10,719 விடுதலைப் புலிகள் கைது

**நாடாளுமன்றில் அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு**

கடந்த 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னரும் 10 ஆயிரத்து 719 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களில் 12 ஆயிரத்து 173பேர்புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போது 150 விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிறைச்சாலையில் இருக்கின்றார்கள் என்றும் அவர்களுள் 66 பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும், ஆயிரத்து 700 இற்கும் அதிகமானவர்கள் ஒரு வருடகாலமாகக் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 77 கைதிகள் 7 ஆண்டுகளுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் நீண்ட காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதியால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இதன்போது கூறியுள்ளார். (ஐ)

### நாளை

28.11.2016
திங்கட்கிழமை
திதி : சதுர்த்தசி பிற்பகல் 3.57 வரை
நட்சத்திரம் : விசாகம் முன்னிரவு 10.03 வரை
சுபநேரம் 12.13 -1.43
இராகுகாலம் 7.43 -9.13


JSAC

பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
வறுமையும் வன்முறையும் தாக்குவது
பெண்களையே.வறுமையை ஒழிப்போம்.
வன்முறையை தடுப்போம்.சமத்துவமான
சமுதாயத்துக்காய் ஒன்றுபட்டு
உழைப்போம்
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

16
2016

# வடக்கு துயிலும் இல்லங்களில் உள்ள இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்

## நாடாளுமன்றில் அமைச்சர் விஜயகலா கோரிக்கை



கொழும்பு, நவ.27

வடக்கில் உள்ள துயிலும் இல்லங்களில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றி அவற்றை மக்களிடம் கையளியுங்கள். குறிப்பாக கோப்பாய் துயிலுமில்லம், வரணி துயிலுமில்லம், கொடிகாமம் துயிலுமில்லம், வல்வெட்டித்துறை எள்ளங்குளம் துயிலுமில்லம், மன்னார் மாவட்டத்தில் ஆண்டான் குளம், பண்டிவிரிச்சான் துயிலுமில்லங்கள், வவுனியா ஈச்சங்குளம் துயிலுமில்லம், முல்லைத்தீவில் ஆலங்குளம், அலம்பில், கணிக்காடு, பேராவில் துயிலுமில்லங்கள் அனைத்தும் இராணுவத்தின் பிடியில் உள்ளன. அவை விடுவிக்கப்பட வேண்டும்.

வலி. வடக்கு,மற்றும் பரவிப்பாஞ்சான் பகுதிகளில் உள்ள தனியார் காணிகளை மீளவும் கையளிக்கும் நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும்.

இவ்வாறு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை 2017ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு, காணி அமைச்சு ஆகியவற்றின் செலவுத் தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் வடக்கு, கிழக்கில் படிப்படியாகக் காணிகளை விடுவிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. குறிப்பாக வலி. வடக்கில் எமது தேசிய அரசின் 18 மாத காலப் பகுதியில் 5 ஆயிரம் ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அங்கு மேலும் பல ஏக்கர் காணிகள் இராணுவத்தின் கட்டுப்பட்டில் உள்ளன. அவற்றை விடுவிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் தேசிய அரசுக்கு உள்ளது.

வலி. வடக்கில் தனியாருக்கு சொந்தமான 6 ஆயிரம் ஏக்கர் காணிகள் 25 வருடங்களுக்கு மேலாக படையினரின் பிடியில் உள்ளன. அவற்றை விரைவாக மக்களிடத்தில் கையளிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென காணி அமைச்சரிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

உண்மையில் தமிழர்கள் எந்தவொரு மதத்துக்கும் எதிரானவர்கள் அல்லர். தாம் பூர்வீகமாக வாழ்ந்து வரும் பகுதிகளுக்கு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன.

பெரும்பான்மையினருக்கு காணப்படும் அனைத்து உரிமைகளும் சிறுபான்மையினருக்கும் உள்ளன. அவ்வாறு இருக்கையில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளில் பௌத்த விகாரைகளை அமைப்பதற்கு எதிர்ப்பு வெளியிடாது இருக்க முடியுமா?.

இன்னொரு விடயத்தையும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது பூர்வீகக் காணிகளில் பௌத்த விகாரைகளை அமைப்பது எந்தவகையில் நியாயமாகும். அவ்வாறு அமைப்பதற்கே நாம் எதிர்ப்புக்களை வெளியிடுகின்றோம். அதனை இனவாதமாகக் கருதவேண்டாம்.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருந்த காரணத்தால் 12 குடும்பங்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. எதிர்க்கட்சித் தலைவர் சென்று அவர்களின் போராட்டத்தைக் கைவிடுமாறு கோரிய போதும் அவர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

பின்னர் என்னுடன் தொடர்பு கொண்டபோது, நான் அங்கு நேரில் சென்றேன். அந்த மக்களின் முன்னிலையிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடிய பின்னர் மூன்று மாத காலத்துக்குள் அவர்களின் சொந்த நிலங்கள் விடுவிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தேன்.

அந்த மக்களுக்கு அளித்த வாக்குறுதியின் பிரகாரம் அடுத்த மாதம் எட்டாம் திகதி குறித்த கால அவகாசம் நிறைவடைகின்றது.

எனவே அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்ற நம்பிக்கையில் பரவிப்பாஞ்சான் பகுதியைச் சேர்ந்த 12 குடும்பங்கள் உள்ளன என்பதை நினைவு படுத்த விரும்புகின்றேன்.-என்றார். (ஐ)


## அறிவூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.27

இந்த வருடம் க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் கடமையாற்றுவோருக்கான அறிவூட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 30ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம் பெறும்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் கோப்பாய்க் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி ஆகிய வலயங்களைச் சேர்ந்த க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலர்கள் மேற்பார்வையாளர்கள் உதவி மேற்பார்வையாளர்கள் ஆகியோரைப் பங்கு கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்கூறிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டால் மாத்திரமே பரீட்சைக் கடமையில் பணியாற்ற முடியும் என்று கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



## 'காப்பெற்' வீதியாக மாறி வருகிறது மன்னார் பெரிய கரிசல் பாதை

### ஆரம்பமாகிவிட்டன புனரமைப்புப் பணிகள்

மன்னார், நவ.27

மன்னார் பெரிய கரிசல் பிரதேசத்தில் அமைந்திருக்கும் நூறு வீட்டுத் திட்டத்தை ஊடறுத்துச் செல்லும் பெரிய கரிசல் பாதையை 'காப்பெற்' வீதியாக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் புனரமைப்பு வேலைகளுக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் 2 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

ஆரம்ப வேலைகளை அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எஸ்.எச்.எம். முஜாஹிர் ஆரம்பித்து வைத்தார். அதன் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தரும் தொழிலதிபருமான எஸ்.கே.பி.அலாவுதீனும் கட்சியின் இணைப்பாளர் ரஜீத்தும் இந்த முயற்சிக்குப் பக்கபலமாகச் செயற்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் காங்கிரஸின் இணைப்புச் செயலாளர் முஜாஹிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அவருடன் பள்ளி பரிபாலன சபையின் நிர்வாகிகளான அமானுல்லாஹ் மற்றும் புர்கானுதீன் ஆகியோருடன் கிராம வாசிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (இ-8)

## பரிசில்தின விழா

மிருசுவில், நவ 27

மிருசுவில் றோமன் தமிழ் கலவன் பாடசாலையின் பரிசில்தின விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் எவ்.ரி.எடிசன் தலைமையில் நடைபெறும்.

விழாவின் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்த.கிருபாகரனும், கௌரவ விருந்தினர்களாக மிருசுவில் ஆலய பங்குத் தந்தை அருட்பணி எக்ஸ்.டபிள்யு. ஜேம்ஸ் அடிகளாரும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்கள அபிவிருத்தி அலுவலர் ச.அன்ரன் கமிலஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-7)

## நாவல் பயிலரங்கம்

யாழ்ப்பாணம், நவ.27

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் நாவல் பயிலரங்கம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு வளவாளர்களாக மூத்த எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் மற்றும் கலாநிதி சு.குணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## தெல்லிப்பளையில் நடமாடும் சேவை

தெல்லிப்பழை, நவ்.27

தெல்லிப்பளை பிரதேச செயலகம் நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ் பெறல், திருமணப் பதிவுகள், காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகள், தேசிய அடையாள அட்டை பெறல் போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளன. (இ-7-8)

### பல வருட காலத்தின் பின்னர்

## நயினாதீவு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமனம்

நயினாதீவு, நவ.27

நயினாதீவு பிரதேச வைத்தியசாலைக்கு ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நயினாதீவுப் பிரதேச வைத்தியசாலையில் பல வருடகாலமாக நிலவி வந்த நிரந்தர வைத்தியருக்கான வெற்றிடம் தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

நயினை இளைஞர்களால் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டு வந்த அழுத்தத்தின் காரணமாக வடக்கு மாகாண முதல்வர் சி.வி .விக்னேஸ்வரனின் பணிப்புக்கமைய வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் கடந்த 16 ஆம் திகதி முதல் ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர் நியமனம் பெற்று வந்துள்ளார். (இ-8)

# ஏறாவூரில் கடலில் மூழ்கிய மாணவர்கள்: ஒருவர் சடலமாக மீட்பு; மற்றவர் மாயம் !



மட்டக்களப்பு, நவ.27

மட்டக்களப்பு ஏறாவூர் புன்னக் குடா கடற்கரைக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீராடச் சென்ற மாணவர்களில் மூவர் நீரில் மூழ்கி காணமற் போய்விட்டனர்.

அதில் ஒரு மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மற்றொருவர் மீட்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றையவர் கதி குறித்து தெரியவில்லை.

இச்சம்பவத்தில் ஏறாவூரைச் சேர்ந்த எப்.பர்ஹான் (வயது 17) என்ற மாணவனுடைய சடலமே மீனவர் வலையில் சிக்கி மீட்கப்பட்டுள்ளது. ஏறாவூரைச் சேர்ந்த சேகுதாவூத் அக்ரம் (வயது 17) என்ற மாணவன் மயக்கமடைந்த நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளார்.

பன்குடாவெளி தளவாய் பகுதியைச் சேர்ந்த சிவகுமார் சிவதர்சன் (வயது 17) என்ற மாணவரைக் காணவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் கூறியதாவது:-

ஏறாவூரிலுள்ள தேசிய பாடசாலையொன்றில் உயர்தர கலைப் பிரிவில் முதலாம் வருடத்தில் கல்விபயிலும் மாணவர்கள் புன்னக்குடா கடலில் நீராடச் சென்ற வேளை இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. தேடுதல் பணியில் பொது மக்களும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர் - என்றனர்.(ச)

# ஏறாவூரில் 1,500 மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை



மட்டக்களப்பு, நவ.27

மட்டக்களப்பு, ஏறாவூர் புன்னைக்குடா கடலில் நேற்றுமுன் தினம் நீராடிக் கொண்டிருந்த வேளையில் கடல் அலையில் சிக்கிக் காணாமல் போன மாணவர் ஒருவர் நேற்று பகல் வரை கண்டுபிடிக்கப்படவில்லை. அவரைத் தேடும் பணி நடைபெற்றுவருகிறது. இந்த நிலையில், தினமும் ஆழ்கடல் மற்றும் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் சுமார் 1,500 மீனவர்கள், நேற்றுச் சனிக்கிழமை கடலுக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கின்றனர். தமது மீனவக் கலாசாரத்தின்படி கடலில் யாராவது மூழ்கிக் காணாமல் போனால் சடலம் கண்டு பிடிக்கப்படும்வரை கடல் தொழிலுக்குச் செல் வதில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்படைச் சுழியோடிகள், மீனவ சுழியோடிகள் இன்னமும் கரையோரக் கடல் மற்றும் கடலின் ஆழமான பகுதிகளில் மாணவர்களைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். கடலலை சீற்றமாகவும் கடல் கொந்தளிப்பாகவும் இருப்பதால் தேடும் முயற்சியில் சிரமம் இருப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர். (ச)

## தினசரி ராசி பலன் 27.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 7.45 – 8.45 |
| | மாலை : 3.15 – 4.15 |
| ராகு காலம் | : 4.30 – 6.00 |
| குளிகன் | : 3.00 – 4.30 |
| எமகண்டம் | : 12.00 – 1.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சமநோக்கு நாள்

**மேஷம்** : வெற்றி - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் செய்யும் காரியங்களில் நிதானத்துடன் செயல்பட்டு வெற்றி நல்கும் நன்னாள்.
சந்திராஷ்டமம்: அசுபதி

**ரிஷபம்** : தனம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும் நன்னாள்.

**மிதுனம்** : பக்தி - தெய்வ வழிபாடுகள் செய்ய முயற்சிகள் முன்னேற்றம் காணும் நன்னாள்.

**கடகம்** : பாசம் - அனைவரிடத்திலும் ஈகை கொண்டும் அன்பானவர்களின் ஆதரவும் கிடைக்கும் நன்னாள்.

**சிம்மம்** : லாபம் - இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் வரும் நன்னாள்.

**கன்னி** : தேர்ச்சி - பல விடயங்களில் அனுபவம் கிடைக்கும் நாள்.

**துலாம்**: ஓய்வு - உழைப்பால் உண்டான களைப்பு நீங்கி ஓய்வு தரும் நன்னாள்.

**விருச்சிகம்**: நன்மை - நெடுநாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் தரும் நன்னாள்.

**தனுசு**: இன்பம் - மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் தரும் நன்னாள்.

**மகரம்**: சுகம் - இன்று மனதில் மகிழ்ச்சி நிறையும் நன்னாள்.

**கும்பம்**: லாபம் - தொழிலில் முன்னேற்றம் காணும் நன்னாள்.

**மீனம்**: நலம் இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் வீண்பேச்சை குறைத்து நலம் நல்கும் நன்னாள்.
சந்திராஷ்டமம்: ரேவதி

# இரு மோ.சைக்கிள்கள் மோதி விபத்து; நால்வர் காயம்


திருகோணமலை, நவ.27

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறால்குழி பாலத்தருகில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த நால்வர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் கிண்ணியா பகுதியைச் சேர்ந்த இருவரும் மூதூர் நகர் பகுதியைச் சேர்ந்த இருவருமே படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கிழக்கில் யானைகளின் தாக்குதல்களால் இதுவரை 57 விவசாயிகள் உயிரிழப்பு



கிழக்கு மாகாணத்தில் யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி இதுவரை 57 விவசாயிகள் உயிரிழந்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வனஜீவராசிகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் வன விலங்குகளால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் யானையின் தாக்கம் அதிகரித்துள்ளது, யானை தாக்கி 57 விவசாயிகள் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

அது மாத்திரமன்றி 19 பேருக்கு மேல் படுகாயம் அடைந்துள்ளனர்.

படுவான்கரைப்பகுதியில் இரவு நேரங்களில் மக்கள் தூங்க முடியாத நிலையில் உள்ளனர் என்றும், கிட்டத்தட்ட இருபது இடங்களுக்கு மேலாக ஒவ்வொரு இரவும் யானைகள் ஊடுருவி விவசாய பயிர்கள் மற்றும் தென்னை மரங்களை அழிக்கின்றன என்றும் மேலும் அவர் சுட்டிக் காட்டினார்.(ச)

# டெங்கு பரவும் சூழல்; ஐவருக்கு எதிராக வழக்கு

அம்பாறை, நவ.27

அம்பாறை, சம்மாந்துறை செந்நெல்புரம் கிராமத்தில் டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய சூழல் காணப்பட்ட ஐவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம்.எம்.எம். சாபிர் தெரிவித்தார்.

சம்மாந்துறைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை செந்நெல்புரம் 01ஆம் பிரிவு மற்றும் 02ஆம் பிரிவுகளில் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன் போதே டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய வகையில் இடங்களை வைத்திருந்த ஐவர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கெதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# போதைப் பொருள் கடத்தியவர் கைது

கிண்ணியா, நவ.27

கிண்ணியா, புஹாரிச் சந்தியில் 28 மில்லிகிராம் போதைப் பொருளுடன் கொழும்பைச் சேர்ந்த 60 வயதுடைய நபரொருவர், நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.


பிராந்திய துர்நடத்தை ஒழிப்புப் பிரிவு இவரைக் கைது செய்து கிண்ணியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது.

கிண்ணியாவுக்குப் போதைப் பொருள் கடத்தி வந்துள்ளனர் என கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பிரஸ்தாப நபர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

அப்போது பரிசோதித்த போதே, அவரிடம் போதைப் பொருள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என, பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரிடம், முழுமையான விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# முகாமில் இருக்கும் மக்களுக்குக் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## நாடாளுமன்றில் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு



கொழும்பு, நவ.27

வவுனியா, பூந்தோட்டம் அகதி முகாமில் தங்கியிருக்கும் மக்களுக்கு அந்தக் காணிகளையே சொந்தமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹிந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காணி அமைச்சின் மீதான வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாங்கள் வாழ்வதற்காகவே வடக்கு மற்றும் கிழக்கு மக்கள், அவர்களது காணிகளைக் கோருகின்றனர்.

எனவே, அவற்றை அவிரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், சிதம்பரபுரம், பூந்தோட்ட முகாமில் இன்று வரை பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் வாழும் மக்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்த 8 வருடங்களாகின்ற போதிலும் தமிழ் மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படாமல் இருக்கிறது.

அரசாங்கத்திடம் முறையாக பதிவுகள் இல்லாமையே இதற்கான காரணமாக இருக்கிறது. ஆகவே, பிரதேச செயலாளர் மட்டத்தில் காணி அலுவலகங்களை பலப்படுத்தி தேவையான அதிகாரிகளை நியமித்து பதிவுகள் முறையாக மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இந்தக் காணிப் பிரச்சினைகளுக்கு இலகுவாக தீர்வினை வழங்க முடியும்.

கடந்தகாலங்களில் அரசியல்வாதிகள் உள்ளிட்ட ஏனையபலரும் காணிகளை கைப்பற்றியிருக்கலாம் அல்லது ஏனைய பல வழிகளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

அது தொடர்பில் ஆராய்ந்து முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் வசமே நாட்டின் பெருமளவான காணிகள் இருக்கின்றன.

அத்துடன், கிராம சேவகர், பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் காணி தொடர்பான பதிவுகள் இருக்கின்றன.

இவற்றின் உதவியுடன் ஆணைக்குழு முறையான பதிவுகளை மேற்கொள்வதில் சிரமங்கள் இருக்க வாய்ப்பில்லை' என்றும் தெரிவித்துள்ளார்.

# மஹிந்தவின் விஜயம் தொடர்பில் சீனாவுக்கு எதுவும் தெரியாதாம்



பீஜிங், நவ.27

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு மேற்கொண்டுள்ள விஜயம் தொடர்பாக, தாம் எதையும் அறியவில்லை என்று சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், ஒரு வாரகாலப் பயணமாக மஹிந்த ராஜபக்ஷ சீனாவுக்குச் சென்றுள்ளார்.

கடந்த 23ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவுக்குப் புறப்பட முன்னர், அவரது செயலகம் வெளியிட்ட அறிக்கையில், சீன அரசின் அழைப்பின் பேரிலேயே பீஜிங் செல்வதாகவும், நாளை 28 ஆம் திகதி சீன அரச தலைவர்களைச் சந்திக்கவுள்ளதாகவும் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், பீஜிங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், ஜெயங் சுவாங்கிடம், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்று இலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தப் பயணத்தில் சீனா எதனை எதிர்பார்க்கிறது? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த, சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், ஜெயங் சுவாங், 'அதுபற்றிநான் அறியவில்லை. இதுகுறித்து விசாரித்து விட்டு பின்னர் தகவல் கூறுகிறேன் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, சீனா சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பௌத்த ஆலயம் ஒன்றுக்குச் சென்றிருப்பதுடன், சில கலந்துரையாடல்களிலும் பங்குபற்றியிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

# விபத்தில் பெண் சாவு; நால்வர் காயம்

கொழும்பு, நவ.27

வெல்லபத - அஹுன்கல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று பஸ் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானதுடன், பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் இந்த முச்சக்கரவண்டியுடன் மோதியுள்ளது. விபத்தில் 58 வயதான பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை முச்சக்கர வண்டி சாரதி உட்பட மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வர் காயமடைந்த நிலையில் பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



அமெரிக்க கடற்டையின் யு.எஸ்.எஸ். சோமசெற் கப்பலில் வந்த அமெரிக்க மரைன் படைப்பிரிவினர், கடந்த சில நாள்களாக இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர். நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம்பெற்ற இறுதிநாள் பயிற்சியின்போது எடுக்கப்பட்ட படம்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் முற்போக்குக் கூட்டணியும் எதிர்காலத்தில் அரசியல் ரீதியாக இணைந்து செயற்படும்


## கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன்

நுவரெலியா, நவ.27

தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் முற்போக்கு கூட்டணியும் அரசியல் ரீதியாக இணைந்து செயல்படுவதற்கான முதற்கட்ட பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர் காலத்தில் இந்த இரு அமைப்புகளும் அரசியல் ரீதியாகவும் ஒன்றுப்பட்டு செயல்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் மலையக மக்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 4000 தனி வீடமைப்பு வேலைத்திட்டத்திற்கமைய நேற்றுக் காலை நுவரெலியா - டயகம தோட்டம் டயகம மேற்கு தோட்டத்தில் 150 வீடுகளுக்கு அடிக்கல் நடும் வைபவம் நடைபெற்றது.



இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் உரையாற்றியுள்ளதாவது:-

வட, கிழக்குப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு மலையகத்தில் போராட்டம் ஆரம்பித்திருக்க வேண்டும். அது ஆயுதப் போராட்டமாக அல்லாமல் காத்திரமான அகிம்சை போராட்டமாக உருவெடுத்திருந்தால் இன்று நாம் இன்னும் பல வெற்றிகளைப் பெற்றிருக்கமுடியும்.

வட, கிழக்கு போராட்ட ரீதியாகத் தோல்வி அடைந்திருந்தாலும் அந்த போராட்டத்தின் ஊடாக இன்று அவர்கள் பல வெற்றிகளை பெற்று வருகின்றார்கள்.

எனவே மலையக மக்களுடைய பிரச்சினைகளும் சர்வதேச மயப்படுத்தப்பட வேண்டுமானால் நாம் தமிழ் தேசிய கூட்டமைப்போடு இணைந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

எதிர்காலத்தில் எமது பிரச்சினைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அவர்களுடைய பிரச்சினைகளை தமிழ் முற்போக்கு கூட்டணியும் பேசுவதற்கான நிலைமை உருவாக வேண்டும். மலையக மக்கள் இன்று உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படை தேவைகளுக்காக போராட்ட வேண்டியநிலை இருக்கின்றது.

சம்பள பிரச்சினை மாத்திரம் எம்முடைய பிரச்சினை அல்ல. அதுவும் ஒரு அடிப்படைப் பிரச்சினை. ஆனால் அதற்கு அப்பால் இன்னும் பல பிரச்சினைகளை சந்தித்து வருகின்றோம். அந்த பிரச்சினைகளும் சர்வதேசமயப்படுத்தப்பட வேண்டும்.

எனவே எதிர்காலத்தில் காத்திரமான அகிம்சை போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதற்காகன சரியான தலைமைத்துவம் வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எமது பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு கொண்டு செல்ல முடியாது என்று தெரிவித்துள்ளார்.

# வன்னிவிளாங்குளம் மாவீரர் இல்லத்தில் சிரமதானம்





முல்லைத்தீவு, நவ.27

முல்லைத்தீவு மாவட்ட வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் சிரமதானப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, வட மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் ஆகியோரும் இந்த சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மாவீரர் துயிலும் இல்ல பகுதியில் ஒன்று கூடிய மக்கள் பற்றைகளை அகற்றி மாவீரர்களுடைய கல்லறைகள் இருந்த இடங்களை அடையாளப்படுத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி மாட்டத்திலுள்ள கனகபுரம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்று முன்தினம் முதல் சிரமதானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்திலும் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களைத் துப்பரவு செய்யும் பணிகளில் மக்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-81)

## கனகபுரம், முழங்காவில் துயிலுமில்லங்களில் இரண்டாவது நாளாகவும் துப்புரவுப் பணிகள்



கிளிநொச்சி,நவ.27

கிளிநொச்சி கனகபுரம், முழங்காவில் பிரதேச மக்கள் இரண்டாவது நாளாகவும் மாவீரர்துயிலும்இல்லங்களைத் தூய்மையாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமது உறவுகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நேற்று முன்தினம் மக்கள் ஒன்று திரண்டு இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்று காலை கனகபுரம் மற்றும் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு வருகை தந்த மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், மக்கள், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் சுத்தப்படுத்தும் பணியை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, நாளை மாலை 06.05 மணியளவில் விளக்கேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வணக்க நிகழ்வுகள் மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெற்றவுள்ளன.

மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் மற்றும் பொது மக்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரும் வருகைதந்து இன விடுதலைக் காகப் போராடி, தமது உயிர்களை, தியாகம் செய்த உறவுகளைவணங்கி அஞ்சலிசெலுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி கிளை வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள்; தண்டனை அதிகரிக்கப்பட வேண்டும்

### முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவிப்பு





பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோருக்குத் தண்டனைகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு அரச அதிபர் இவ்வாறு கூறினார்.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறைவடைய வேண்டும் என்றால் வன்முறைகளில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கான தண்டனைகள் அதிகரிக்கப்படவேண்டும் என்று முல்லைத்தீவு அரச அதிபர்திருமதி றூபவதி கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

'பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான பணத்தையும் பலத்தையும் சேகரிப்போம்' என்னும் தொனிப்பொருளில் உலக பால்நிலை வன்முறைக் களுக்கு எதிரான வாரமான நவம்பர் 25 தொடக்கம் டிசெம்பர் 10வரையான 'வெண்பட்டி தின' வாரத்தின் தொடக்க நிகழ்வும் பேரணியும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். (ஐ-81)

## நெடுங்கேணியில் இளைஞர் தலைமைத்துவ முகாம்



வவுனியா, நவ.27

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நெடுங்கேணி பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி எஸ். சதீஸ்குமாரின் தலைமையில் வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக் கிழமை வரை வவுனியா மதியமடு விவேகானந்த வித்தியாலயத்தில் இளைஞர் தலைமைத்துவ முகாம் நடைபெற்றது.

இதில் தீப்பாசறை நிகழ்வின் பிரதம அதிதியாக வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதிகளாகத் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சுந்தரலிங்கம் காண்டீபன், சமணங்குளம் கிராம சேவையாளர் மா.சுரேந்தர், நெடுங்கேணி பிரதேச இளைஞர் கழக பிரதேச சம்மேளனத் தலைவர் இ.சஜீவன் ஆகியோருடன் வவுனியா பிரதேச இளைஞர்சேவைகள் அதிகாரி அஜித் சந்திரசேன, நிஸ்கோ திட்ட இயக்குநர் ரி.அமுதராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தீப்பாசறை நிகழ்வுகளைத் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் செயலாளர் ஸ்ரீ.கேசவன் தலைமையேற்று நடத்தினார். உப தலைவர்களில் ஒருவரான க.மயூரதன் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் பொருளாளர் த.நிகேதன், மற்றும் உறுப்பினர் ஜெ.கஜீரன் ஆகியோர் ஒழுங்கமைப்புகளை மேற்கொண்டிருந்தனர். (ஐ-53)

## கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 3,114 குடும்பங்கள் இருட்டில்

### விரைவில் மின்சாரம் வழங்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, நவ. 27

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேசத்தில் 3 ஆயிரத்து 114 குடும்பங்கள் மின்சார வசதியின்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. விரைவில் மின்சாரம் வழங்கி உதவுங்கள் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேசத்தில் மீள் குடியேறிய குடும்பங்களில் இது வரை 7 ஆயிரத்து 555 குடும்பங்களுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன என்று முல்லைத் தீவு மின்சாரசபை தெரிவித் துள்ளது.

எனினும், ஆயிரத்து 257 குடும்பங்களுக்கு மின் இணைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள போதும், அவர்களுக்கு மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை என்றும் விரைவாக மின்னிணைப்பை வழங்குமாறும் பொதுமக்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, மின்இணைப்புகள் தொடர்பாக ஆயிரத்து 65 குடும்பங்களுக்கு கடன டிப்படையில் மின்னிணைப்புக்களை வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டுள்ளன.

அதற்கான வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பிள்ளைகளை பாதுகாப்போம்!

குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று சொல்வார்கள். அதனால் தான் குழந்தைகளைப் பார்த்தாலே மனம்ஆனந்தமடைகின்றது. கவலைகள் பறந்தோடுகின்றன.

ஆனால், இன்று அவர்களை கசக்கி எறியும் பெற்றோர்களும், சிதைத்து வீசும் காமுகர்களும் அதிகம் நடமாடும் தேசமாக மாறி வருவது வேதனையானது.

குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை இன்று வெளியில் அனுப்புவதற்கே பயப்படுகின்றார்கள். இன்றைய சூழலில் பிள்ளைகள் சிதைக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் சர்வசாதாரணமாகி இருக்கின்றன.

. குறிப்பாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு குழந்தைகளை தெருவிலும், காடுகளுக்குள்ளும், மணல்களுக்குள்ளும் புதைப்பவர்கள் யார் என்று, நோக்கின் அநேகமான சம்பவங்கள் பாதிக்கப்பட்ட குழந்தையின் உறவுக்காரர்களாகவே இருக்கின்றனர். இவற்றை வெளிவரும் காவல்துறை விசாரணைகளின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

குழந்தைகளைப் பாதுகாப்பதில் பெற்றோர்களின் பங்கே முதன்மையானது. ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தமக்குத் தெரிந்தவர்கள், அறிந்தவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, தங்கள் வேலைகளைக் கவனிப்பதற்கு சென்று விடுகின்றார்கள்.

### பெற்றோர்களே! கவனம்

இது தொடர்பில் குறை சொல்வதல்ல இந்தப் பத்தியின் நோக்கம். ஆனால், சிலவற்றைச் சிந்தித்தாக வேண்டிய சூழல் நமக்கும் எதிர்காலப் பெற்றோர்களுக்கும், இன்றைய குழந்தைகளை வைத்திருப்போர்களுக்கும் உண்டு.

உண்மையில் இலங்கையில் பாலியல் கல்வி அவசியம் தானா? என்று நீண்ட காலமாக விவாதிக்கப் பட்டுவருகின்றது. ஆனால் இதற்கு பல தரப்பட்ட விமர்சனங்கள் மேலெழுந்து கொண்டு இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஒரு தரப்பு தேவை என்றும் இன்னொரு தரப்பு இலங்கை போன்ற நாடுகளுக்கு இது தேவையற்ற ஒன்று என்றும் வாதிடுகின்றார்கள்.

இந்த விமர்சனங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, சில ஆய்வுகளை மேற்கொள்வது இக்காலத்திற்கு தேவையானது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெரும்பாலான பாலியல் தொந்தரவுகளும், பலாத்காரங்களும் சில உறவுக்காரர்களா லும், சில வெளி நபர்களாலும் நடக்கின்றன.

### சிதைப்பவர்கள் பெரியவர்களே

தவறு நமது பிள்ளைகளிடத்தில் இல்லை. காரணம் அவர்கள் குழந்தைகள். ஏதும் அறியாக் குழந்தைகளைச் சிதைப்பவர்கள் பெரியவர்கள்.

இன்னும் சில இடங்களில் வயதான முதியவர்களும் இவ்வாறு குழந்தைகளைச் சிதைத்திருக்கிறார்கள். அது

> “பாலியல் ரீதியாக நமது பிள்ளைகளும். குழந்தைகளும் சிதைக்கப்படுவதை தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே அவர்களை விழிப்படையச் செய்து. எங்கள் குழந்தைகள். பிள்ளைகள் கருகிப்போவதை நாமே தடுப்போம்.”

தொடர்பான செய்திகளையும் படித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால், நமது குழந்தைகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் இந்த விடயம் தொடர்பில் ஏதேனும் அறிவை வழங்குகிறோமா என்றால் இல்லை.

பிள்ளைகளிடத்தில் இது பற்றிப் பேசுவதே இல்லை. பாலியல் என்ற வார்த்தை வந்தாலே அது தீண்டத்தகாத சொல். அதைப்பற்றிப் பேசக் கூடாது என்று நினைக்கும் நாம். அது தொடர்பாகப் பிள்ளைகளோடு உரையாடுவதில்லை.

குறிப்பாகக் குழந்தைகளோடு மனி




வளர்ந்து ஓரளவு வயதைத் தொட்ட பின்னர் அவர்களோடு சரிசமமாக இருந்து ஆண் பெண் பற்றிய புரிதல்கள், பருவ வயதுகளின்போது ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் பெற்றோர்கள் பேசுவார்கள்.

பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் பாலியல் கல்வி முறைகளே இருக்கின்றன. ஆனால், நம்மவர்கள் இது குறித்து வாய் திறப்பதேயில்லை.

அன்பான பெற்றோர்களே, இன்று உலகம் நவீனத்தின் கையில் அகப்பட்டிருக்கிறது. நமது பிள்ளைகளின் கைகளில் நவீன தொலைபேசி சாதனங்கள் புகுந்து விளையாடுகின்றன.

### பாலியல் பற்றி பேசுவது தவறல்ல

எதையும் எந்த நேரத்திலும் விரும்பியதைப் பார்க்கலாம், அறியலாம் என்று இருக்கையில், பிள்ளைகளின் தவறான நினைப்புக்களையும், சிந்தனைகளையும் நீங்கள் நினைத்தால் மாற்றலாம்.

பிள்ளைகளை தவறாக வழி நடத்துபவர்களிடம் இருந்து உங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றலாம். பாலியல் தொடர்பாக பேசுவது தவறல்ல.

## சிதைக்க முயல்பவர்கள் பெரியவர்கள், உறவினர்களே!!

தர்களின் நிலை பற்றியும். அவர்கள் எவ்வாறு செயற்படுவார்கள் என்பது குறித்தும் தெளிவாகப் பேசுவது அவசியமாகின்றது.

இதுகுறித்து இன்னும் விரிவாகக் கூறின், பிள்ளைகளிடம் தொடுகைகள் பற்றிய விழிப்பு அவசியமாகத் தேவைப்படுகின்றது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக அணுகு வார்கள். பாசமாகப் பிள்ளையைத் தொடுபவர்களும் இருக்கிறார்கள். பிள் ளைகளை வேறு நோக்கம் கொண்டு தொடுபவர்களும் இருக்கிறார்கள்.



### யாரிடம் விலகி இருக்க வேண்டும்

இதனால் தொடுகைகள் பற்றி பிள்ளைகளுக்கு குறிப்பிட்டு அவ்வாறான சந்தேகத்திற்கிடமாக யாராவது உங்களிடம் அணுகினால் அவர்களிடம் இருந்து விலகியிருப்பதும், அது தொடர்பில் பெற்றோர்களிடம் அன்றி அண்ணன், அக்காக்களிடம் குறிப்பிட வேண்டும் என்பதை பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இதேபோன்று தான், ஆண் பெண் வேறுபாடு பற்றியும், உணர்வுகள் பற்றியும் பிள்ளைகளுக்குப் புரிதலை ஏற்படுத்த வேண்டும்.

ஆனால், இன்று பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் இவை மறைத்து வைக்கப்பட வேண்டிய விடயங்கள் என்றும், அவற்றை அவர்களிடத்தில் பேசுவது சரியான முறையல்ல என்றும் கருதுகின்றார்கள்.

இது முற்றிலுமாக மாற வேண்டும். மேற்கத்தேய நாடுகளில் பிள்ளைகள்



ஆனால், பாலியல் ரீதியாக நமது பிள்ளைகளும், குழந்தைகளும் சிதைக்கப்படுவதை தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே அவர்களை விழிப்படையச் செய்து, எங்கள் குழந்தைகள், பிள்ளைகள் கருகிப்போவதை நாமே தடுப்போம்.

கனவுகளோடு பெற்ற பிள்ளைகளின் வாழ்வு கருகிப்போக விடலாமா? பிள்ளைகளோடு கொஞ்சம் பேசுங்கள். இன்னும் கொஞ்சம் விரிவாகப் பேசுங்கள். தவறில்லை. நமது குழந்தைகள் தானே அவர்கள்.

நன்றி இணையம்

# குடும்ப மகிழ்வுக்கு பெண்களின் பங்கு..?



குடும்பம் மகிழ்வாக இருக்க அல்லது அதில் மகிழ்ச்சியைக் குறைக்க, பெண்கள் எந்த அளவு காரணம் என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து இல்லாததைக் கொண்டு வர வேண்டும்.

அன்பாகப் பேசுவது, பிறர் மீது அக்கறை காட்டுவது, வீட்டை அழகாக வைத்துக் கொள்வது, குறை கூறாமல் இருப்பது, சொன்னதைச் செய்து கொடுப்பது இன்முகத்துடன் இருப்பது முன் மாதிரியாக நடந்து கொள்வது, பிறரை நம்புவது, ஒன்றாக உல்லாசப் பயணம் போக விரும்புவது, பணிவு, எதையும் எடுத்த, உரிய இடத்தில் வைப்பது, பிறர் வேலைகளில் உதவுவது, பிறருக்காக அதாவது குடும்ப உறுப்பினர்களுக்காக விட்டுக் கொடுப்பது, பிறர் வருந்தும் போது ஆறுதல் கூறுவது, சுறுசுறுப்பு, சிறிய விடயங்களைக் கூடப் பாராட்டுவது, புதிய முயற்சிகளை ஊக்குவிப்பது, நகைச்சுவையாகப் பேசுவது, அதிகமாக வேலை செய்ய விரும்புவது, செலவுகளைக் குறைக்க ஆலோசனை கூறுவது, நேரம் தவறாமை, தற்பெருமை பேசாமல் இருப்பது, தெளிவாகப் பேசுவது, நேர்மையாய் இருப்பது, பிறர் மனதைப் புண்படுத்தாமல் இருப்பது போன்ற விடயங்களில் உங்களால் முடியுமான விடயங்களைக் கவனத்தில் எடுங்கள். வீட்டில் ஏற்படும் பாதிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

## பெண்ணுக்குள் ஆண் அடக்கம்...!


பெண்ணுக்குள் ஆண் அடக்கம் என் பது சில வார்த்தைகள் மூலம் புலப்படுகிறது.
Female என்பதில் male அடக்கம்.
Lady என்பதில் lad அடக்கம்.
Woman என்பதில் man அடக்கம்.
She என்பதில் he அடக்கம்



# கணவனிடம் மனைவியின் எதிர்பார்ப்புகள் என்ன?

- ★அன்பாக , பிரியமாக இருக்க வேண்டும்.
- ★மனது புண்படும்படி பேசக் கூடாது.
- ★கோபப்படக் கூடாது.
- ★சாப்பாட்டில் குறை சொல்லக் கூடாது.
- ★மற்றவர் முன் திட்டக்கூடாது.
- ★எந்த இடத்திலும் மனைவியை விட்டுக் கொடுக்கக் கூடாது.
- ★முக்கிய விழாக்களுக்கு சேர்ந்து போக வேண்டும்.
- ★மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.
- ★சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்.
- ★மனைவியின் கருத்தை ஆதரிக்க வேண்டும், மதிக்க வேண்டும்.
- ★வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசிக்க வேண்டும். பாராட்ட வேண்டும்.
- ★பணம் மட்டும் குறிக்கோள் அல்ல. குழந்தை, குடும்பம் என்பவற்றுக்கும் உரிய முக்கியத்துவம் தந்து நடந்து கொள்ள வேண்டும்.
- ★வாரம் ஒரு முறையாவ்து மனம் விட்டுப் பேச வேண்டும்.
- ★மாதம் ஒரு முறையாவது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும்.
- ★பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அக்கறையுடன் கேட்க வேண்டும்.
- ★ ஒளிவு மறைவு கூடாது.
- ★ மனைவியை நம்ப வேண்டும்.
- ★ முக்கியமானவற்றை மனைவியிடம் கூற வேண்டும்.
- ★ மனைவியிடம் அடுத்த பெண்ணைப் பற்றிப் பாராட்டக்கூடாது.

# குங்குமம் அவசியம்



குடும்பப் பெண்கள் குங்குமம் அணிவது அவசியம்.

இந்து சமயக் குடும்பப் பெண்கள் குங்குமம் அணிவது அவசியம் என்கிற ஒரு நிலை உள்ளது. இன்றைய நாகரிகக் காலத்திலும் இது அனைத்துப் பெண்களாலும் கடைப்பிடிக்கப்படுகிறது. இது ஏன்?

திருமணம் முடிந்த பெண்கள் தலை முடியைச் சீவி அதை இரண்டாக வகுத்து அதற்கு நடுவில் நெற்றிக்கு மேற்புறமாக குங்குமம் வைத்துக் கொள்கின்றனர்.

தான் திருமணமானவள். தன் மேல் பிற ஆண்கள் ஆசை வைக்க வேண்டாம் என்று அறிவுறுத்துவதற்காகத் திருமணமான பெண்கள் இப்படி குங்குமம் வைத்துக் கொள்கின்றனர் என்று கூறுகின்றனர்.

இந்து சமய விதிப்படி பெண்கள் தலை முடியை வகுத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது.

# பெண்ணுக்கு பொறுமை அழகு



பெண்கள் சிருஷ்டியில் மிகவும் உயர்ந்தவர்கள். அவர்கள் அனைவருமே சக்தியின் வடிவங்கள். உலக இயக்கம் பெண்களாலேயே நடைபெற்று நிலை பெறுகிறது.

ஒவ்வொரு வெற்றிகரமான ஆணின் வாழ்க்கையின் அடித்தளம் பெண் மையே. பெண் - ஆணுக்குத் தாயாய், சகோதரியாய், மனைவியாய், மகளாய் இன்னும் பல வகைகளில் உறவு உடையவளாகி நலம் செய்கிறாள்.

சிறந்த பெண்ணொருத்தி தான் வாழும் இல்லத்தையே கோயிலாக்கிறாள். குடும்பம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது குடும்பத் தலைவியின் கையில்தான் இருக்கிறது. கணவனையும், கணவன் வீட்டாரையும் புரிந்து கொண்டு அதற்கேற்ப தன்னை அமைத்துக் கொள்ளும் பெண் வாழ்க்கையில் வெற்றி அடைகிறாள். கணவனை எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்திருப்பதோ அல்லது வேத னையில் ஆழ்த்துவதோ மனைவியின் கையில்தான் இருக்கிறது.

நல்ல மனைவி எண்ணத்தால் கூட கணவனை விட்டு விலகி இருக்கக் கூடாது. மனித வாழ்வின் மகத்துவம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதிலே தான் இருக்கிறது. விட்டுக் கொடுத்தல் எனும்

பண்பு குடும்ப வாழ்வுக்கு மிகவும் முக்கியமானது என்பதை மனைவியே உணர வேண்டும்.


பெண்கள் எப்பொழுதும் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

பெண்கள் தன்னம்பிக்கையுடன் எதையும் சாதிக்கத் துணிவு கொள்ள வேண்டும். பெண்கள் அதிகாலையில் எழுந்து குளித்து பூஜையறையில் திருவிளக்கேற்றி வைக்க வேண்டும். பெண்கள் இரவில் விளக்கு வைத்த பின்பு அழக்கூடாது.

திருமணமான பெண்கள் கைகளில் வளையல் அணியாமல் உணவு பரிமாறக் கூடாது.

முருகபூபதி - ஆஸ்திரேலியா

# இலங்கையில் பாரதி



செங்கை ஆழியான்

பிரிட்டிஷாரின் அடக்குமுறையினால் புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்த பாரதிக்கு, இங்கும் பல நண்பர்கள் கிடைத்தார்கள்.

அவர்களில் கிருஷ்ணமாச்சாரியார் என்னும் இயற்பெயர் கொண்ட *குவளைக்கண்ணன்* முக்கியமானவர். இவர்தான் பின்னாளில் 1921 செப்டெம்பர் மாதம் பாரதியை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் இருந்த மதம் பிடித்த யானையிடமிருந்து காப்பாற்றியவர்.

மனைவி செல்லம்மா அயல் வீட்டிலிருந்து கடனாக வாங்கிவந்த அரிசியையும் 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடி காகங்களுக்கு அள்ளித் தூவிய இரக்கமுள்ள பாரதி, கோயில் யானைக்கு வாழைப் பழமும் தேங்காயும் கொடுத்தது ஆச்சரியமில்லை.

காகம் குருவிகளுக்கு மதம் பிடிக்காது. பாரதியை அவை கொத்தவில்லை. அந்தக்கோயில் யானைக்கு மதம் பிடித்திருந்தது பாரதிக்குத் தெரிய நியாயம் இல்லை.

குவளைக்கண்ணன் கண்ணிமைக்கும் நேரத்தில் அங்கு குதித்து அவரை காப்பாற்றினாலும், அதன் பின்னர் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாமலேயே வயிற்றுவலி கண்டு அதே செப்டம்பர் மாதம் பாரதி மறைந்தார்.

இறுதி யாத்திரையில் சென்ற விரல் விட்டு எண்ணத்தக்க மனிதர்களில் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு வந்த குவளைக் கண்ணன், புதுவையிலிருந்து சென்னைவரையில் பாரதியின் நெருக்கமான நண்பராகவிருந்தார்.

இவர்தான் புதுவையில் பாரதிக்கு எங்கள் யாழ்ப்பாணத்துச்சாமியை அறிமுகப்படுத்தியவர்.



பாரதியை யானை தாக்கிய திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில்

பாரதி தமது சுயசரிதையில் இந்தச்சாமி பற்றி இவ்வாறு சொல்கிறார்:

*'குவலயத்தின் விழி போன்ற யாழ்ப்பாணத்தான், தேவிபதம் மறவாத தீர ஞானி சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாவான் பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி, பரமபத வாயிலெனும் பார்வையாளன், காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயும் கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக்கண்டேன்'*

இவ்வாறு பாரதி தனது சுயசரிதை எழுதுவதற்கும் தூண்டுகோளாக இருந்தவர்தான் குவளைக்கண்ணன்.

பாரதி புதுவைக்கு வந்ததும் முதலில் வீடுகொடுத்து அடைக்கலம் தந்த குப்புசாமி அய்யங்காரின் உறவினர்தான் குவளைக்கண்ணன். புதுவையில் பாரதி வெளியிட்ட இந்தியா பத்திரிகையின் வாசகரான குவளைக்கண்ணன், பாரதியின் அந்த வாடகைக்குடியிருப்புக்கு வரும்போதெல்லாம், நாலாயிர திவ்விய பிரபந்தத்தை பாடுவது வழக்கம்.

'பத்து ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்புத்தான் நாலாயிரம்' என்று குவளைக் கண்ணன் சொன்னதும், பாரதிக்கு உற்சாகம் பிறந்துவிட்டது.

'அவர்கள் பத்துப்பேர் சேர்ந்து பாடினார்கள். இதோ பார்... நான் தனிஒருவனாக ஆறாயிரம் பாடிக்காட்டுகின்றேன்.' எனச் சவால் விட்டு, பாரதி பாடியது தான் பின்னாளில் *பாரதி அறுபத்தாறு* என்ற தலைப்பில் வெளியாகின்றன.

இதில் என்ன வித்தியாசம்...? ஆழ்வார்கள் தங்கள் இறைவனைப்புகழ்ந்து பாடினார்கள். ஆனால், பாரதி தான் சந்தித்த நண்பர்களையும் சித்தர்களையும் புகழ்ந்து பாடினார்.

இவ்வாறு பாரதியிடம் புதிய படைப்பை உருவாக்குவதற்கு காரணமாக இருந்த குவளைக் கண்ணனால் அறிமுகப்படுத்தப் பட்ட *யாழ்ப்பாணத்துச்சாமி அருளம்பலம்* அவர்கள், பாரதி திருநெல்வேலி எட்டயபுரத்தில் பிறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர், அதாவது 1880 இல் இலங்கையின் வடபுலத்தில் அல்வாயில் பிறந்துள்ளார்.


பாரதி மறைந்து சுமார் 21 ஆண்டுகளின் பின்னரே வியாபாரி மூலையில் சமாதியானார்.

இவர் பற்றி பாரதி மேலும் இவ்வாறு சொல்லியிருக்கிறார்:

*.... மங்களஞ்சேர் திருவிழியால் அருளைப்பெய்யும் வானவர்கோன், யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்சங்கரனென் பெறப் போதும் முன்னே கொண்டு சரணடைந்தால் அது கண்டீர் சர்வசித்தி.*

பாரதி வர்ணித்துப்போற்றியிருக்கும் இந்த யாழ்ப்பாணத்தீசன், பாரதி சென்னையில் 1921 இல் மறையும்போதும் புதுவையில்தான் வாழ்ந்திருக்கிறார்.

அதன் பின்னர், அவர் இலங்கை திரும்பி, மீண்டும் தமிழகம் சென்று 1942 ஆம் ஆண்டளவில் ஊர் வந்து மறைந்தார்.




செங்கை ஆழியானின் புத்தகத்தின் முகப்பு

*'பாரதி பாடிய யாழ்ப்பாணத்துச்சுவாமி'* என்னும் தலைப்பில் ச. அம்பிகைபாகன் 06-02-1982 ஆம் திகதி வீரகேசரியில் விரிவான கட்டுரை எழுதியிருக்கிறார்.

இதில் கவனிக்கவேண்டியது: இக்கட்டுரை பாரதி நூற்றாண்டு தொடக்க காலத்தில் வெளியாகியிருக்கிறது.

பாரதியின் ஞானகுரு எமது இலங்கையர் என்ற பெருமை மட்டுமல்ல, பாரதியின் பார்வைக்கு ஒரு ஞானியாக தோற்றமளித்த அருளம்பலம் சாமி மட்டுமே பாரதியை நேரில் சந்தித்த ஒரே ஒரு இலங்கையர் என்ற தகவலும் எமக்கு கிட்டியிருக்கிறது.

இவரைப்பற்றிய மேலும் பல தகவல்களை பேராசிரியர் பொன் பூலோகசிங்கம் தனது *இந்துக் கலைக்களஞ்சியத்தில்* தருகிறார்.

( இச்சந்தர்ப்பத்தில் பேராசிரியர் பூலோகசிங்கம் பற்றிய சமகால தகவல்: அவர் தற்பொழுது முதிய வயதில் நோய் உபாதைகளுடன் அவுஸ்திரேலியா சிட்னியில் ஒரு முதியோர் இல்லத்தில் இருக்கிறார். )

'மோனம் அருளம்பலம் வியாபாரிமூலை வேலுப்பிள்ளையின் புதல்வர். மேலைப் புலோலி சைவவித்தியாசாலையிலே கல்வி கற்றிருக்கிறார். இலங்கையின் பல இடங்களில், குறிப்பாக கம்பளை, மட்டக்களப்பு, வியாபாரிமூலை என்று பல இடங்களில் கடை வேலையாளராக வேலை பார்த்துத் தோல்வியுற்றவராக, வாழ்க்கையில் விரக்தியடைந்து, ஊரூராகத் திரிந்து, சொந்தவூர் மீண்டார். அங்கும் நிலைக்காது நாகைப் பட்டினம் சென்றார்.

நாகைப்பட்டினத்தில் நீலலோசனி சந்நிதானத்தில் நிஷ்டை செய்தார்.'

பூலோகசிங்கத்தின் இந்தப் பதிவுடன் மற்றும் ஒரு தகவல்:

யாழ்ப்பாணத்துச்சாமி குறித்து ஈழத்து இலக்கிய உலகின் மூத்த எழுத்தாளர் *அ.ந. கந்தசாமி* ஆராய்ந்து, அவர் சமாதியான வியாபாரிமூலையில் பெருவிழாவுக்கும் கால் கோள் நாட்டினார்.

அ.ந. கந்தசாமி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினர். அத்துடன் சங்கத்தின் கீதமும் இயற்றியவர்.

இவ்வூரைச்சேர்ந்த *ந.சோமகாந்தன்* ஈழத்தின் மற்றும் ஒரு மூத்த எழுத்தாளர். இவர் முன்னின்று அந்த விழாவை நடத்தியிருக்கிறார்.

இவ்வாறு பாரதியின் ஞானகுரு ஈழத்து இலக்கிய வரலாற்றில் பல இடங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளார்.

இத்தகைய வரலாற்றுச்செய்திகளுக்கும் ஒரு வில்லங்கம் பின்னாளில் வந்திருக்கிறது.

'சுவாமிகள் 07.05.1880 இல் பிறந்ததாக கொள்ள முடிகிறது. சுவாமிகளது தாயார் வதிரியை சேர்ந்த இலட்சுமி அம்மாள், தந்தையார் வியாபாரி மூலையை சேர்ந்த சின்னையா வேலுப்பிள்ளை.

வியாபாரிமூலை யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சமாதி ஆலயம் புதுப்பிக்கப்பட்டு சுவாமி அருளானந்தா அவர்கள் தலைமையில் 25.11.2004 இல் குடமுழுக்கு செய்யப்பட்டது. அன்று சுவாமி அருளானந்தா எழுதிய *'யாழ்ப்பாணத்து மௌன குருவின் சரித சுருக்கம் - மீண்டும் அருள்தர வந்தேன்'* என்னும் நூலும் வெளியிடப்பட்டது. திரு.பொ.சபாபதிப்பிள்ளை அவர்கள் குலத்தோன்றல்களான டாக்டர் சதானந்தன், திருவாளர்கள் சி.முத்துக்கிருஷ்ணன், சா.நவரத்தினராசா போன்றவர்கள் சமாதி ஆலயப் புனருத்தாரணப் பணிக்கு பொருளுதவி புரிந்ததோடு நித்திய பூசைகளையும் பொறுப்பேற்றுள்ளனர்.

இவ்வளவு தகவல்களும் இன்று இணையத்தின் வழி எமக்கு கிடைக்கின்றன.

**செங்கை ஆழியானின் நூல்??? !!!**

இவை இவ்விதமிருக்கையில், இலங்கையின் மூத்த எழுத்தாளர் என அறியப்பட்டவரும் சமூக மற்றும் வரலாற்று நாவல்களும் ஆய்வுகளும் - நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் பல பாட நூல்களும் எழுதியிருக்கும் பிரபல படைப்பாளி செங்கைஆழியான் கலாநிதி கந்தையா குணராசா ( 1941 -2016) தனது தந்தை வழித்தோன்றல் ஆறுமுகசாமி தான் பாரதியின் ஞானகுரு என்று நிறுவ முயன்றுள்ளார்.

ஈழத்தின் வரலாற்று தகவல்களை தொடர்ந்து பதிவு செய்த செங்கைஆழியான், ஏன் இவ்வாறு ஒரு வரலாற்று திரிபுக்கும் வழிவகுத்தார் என்பதுதான் புரியவில்லை.

பாரதி நூற்றாண்டு (1982 - 1983 ) கால கட்டத்தில் அவர் தமது மூதாதையர் ஆறுமுகசாமிதான் பாரதியின் ஞானகுரு என்று ஆதாரங்களுடன் நிரூபித்திருந்தால் அதற்கு எதிர்வினையாற்ற பல பாரதி இயல் ஆய்வாளர்கள் அப்போது இலங்கையில் இருந்தார்கள்.

முக்கியமாக பேராசிரியர் க. கைலாசபதி.காலம் கடந்து 2006 ஆம் ஆண்டில் *பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்து ஆறுமுகசாமி* என்னும் நூலை வெளியிட்டு சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

புனைகதை எழுதுவதில் ஆற்றல் மிக்க செங்கை ஆழியான், இந்த ஞானகுரு விவகாரத்திலும் புனைகதை படைத்து விட்டு விடைபெற்றுவிட்டார்.

பாரதி வாழ்ந்த அக்காலப் பகுதியில் இலங்கையிலும் இந்தியாவிலும் பல சாமியார்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இன்றும் பல சாமியார்கள் பணக்கார சாமியார்களாகியிருக்கின்றனர். லீலைகளில் ஈடுபட்டு அம்பலமானவர்கள் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

சிவலிங்கம் வாயில் எடுத்து சித்துவிளையாட்டுக்காட்டி, இறுதியில் கொலை உட்பட பாலியல் குற்றங்களும் புரிந்து சிறைசென்ற சாமிகளும் இருக்கிறார்கள்.

(27 ஆம் பக்கம் பார்க்க...)

பொன்.வேணு கிருஷ்ணா

## ட்ரம்பின் வெற்றியும் ஐரோப்பாவிற்கான ஒபாமாவின் இறுதி சுற்றுப்பயணமும்

அமெரிக்காவில் போலவே, இத்தகைய வலதுசாரி வெகுஜனவாத சக்திகளின் வளர்ச்சியானது ஒருபுறம் ஸ்தாபக கட்சிகள் மீது அதிகரித்துவரும் கோபம், மற்றும் மறுபுறம் ஒரு முற்போக்கான மாற்றீடு இல்லாததன் விளைவாகும்.

ஒபாமா மற்றும் மேர்க்கெல் கூட்டாக எழுதிய கட்டுரை ஒன்று : '' நாம் ஒட்டு மொத்தமாக யூரோ - அட்லாண்ட் பகுதியின் பாதுகாப்பைப் பேண விரும்புகிறோம் என்பதாலேயே நமது நாடுகள் வடக்கு அட்லாண்டிக் கூட்டணிக்குள் (நேட்டோ) கூட்டு பாதுகாப்புக்கு கட மைப்பட்டுள்ளன. நமது குடிமக்களை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதாலும், சுதந் திரத்திற்கு எதிரான எதிரிகளிடம் நமது வாழ்வின் போக்கை நாம் தியாகம் செய்ய முடியாது என்பதாலும், ISILI எதிர் கொள்வதற்கான உலகளாவிய கூட்டணி உட்பட பயங்கர வாதத்துக்கு எதிரான போராட் டத்தில் நாம் நெருக்கமாகக் கூடி இயங்குகிறோம்.

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

14





அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் இறுதி ஐரோப்பிய சுற்றுப் பயணம் அரசியல் சமாதானப்படுத்தல் மற்றும் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளால் குணாம்சப்பட்டுள்ளது.

வெளியேறவிருக்கும் இந்த அமெரிக்க ஜனாதிபதி, அவருக்கடுத்து பதவிக்கு வரவிருக்கின்ற டொனால்ட் ட்ரம்ப் மீதான அச்சங்களைச் சமாதானப் படுத்தவும், அவருடனான நெருக்கமான உறவுகளை ஊக்குவிக்கும் அடிப்படையில் அமெரிக்க மேலாதிக்க நேட்டோவின் அடித்தளத்தை மிக முக்கிய இராணுவ கூட்டணியாகத் தக்க வைக்கவும் முயன்று வருகிறார் (seeking to calm fears over his successor Donald Trump, to encourage close collaboration with him and on this basis retain a NATO dominated by the US as the most important military alliance.)



ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க்கல், ஜேர்மன் தலைமையின் கீழ் ஒரு பலமான ஐரோப்பாவினது தலைவராக ஆகக் கூடியவர் என்றவர் கருதுவதால், ஒபாமா, மேர்க்கெலை சார்ந்துள்ளார். (In this, he is relying on German Chancellor Angela Merkel, whom he hopes to secure as a leader of a strong Europe under German leadership. )




அவர் பதவிக்கு அடுத்து வர விருக்கின்றவரை ஒபாமா பெருமைப் படுத்துவது, ஜேர்மன் நாளிதழ் Sddeutsche Zeitung அவரை டொனால்ட் ட்ரம்ப் இன் ''பத்திரிகைச் செய்தித் தொடர்பாளர்'' என்று வர்ணிக்கும் அளவுக்கு மிகவும் வெளிப்படையாக உள்ளது.

கிரீஸில் ஒரு சிறிய நிறுத்தத்தின் போது, அவர் சிக்கனக் கொள்கைகளுக்காக ஆழமாக வெறுக்கப்படும் கிரேக்கப் பிரதம மந்திரி அலெக்சிஸ் சிப்ராஸ்க்கு அவரது ஆதரவை வழங்கியதுடன், கப்பல் முதலாளியும் பில்லியனருமான Stavros Niarchos க்கு சொந்தமான கலாசார மையத்தில் ஓர் உரை நிகழ்த்திய பின்னர், ஒபாமா புதனன்று மாலை பேர்லின் வந்தடைந்து மேர்க்கெல் உடன் மூன்று மணி நேர உணவு விருந்தில் கலந்து கொண்டார்.



President Barack Obama and Greek Prime Minister Alexis Tsipras participate in a joint news conference at Maximos Mansion in Athens, Nov. 15, 2016.

வியாழக்கிழமையும் முழுவதுமாக ஒபாமா அவரது ஜேர்மன் விருந்து ஏற்பாட்டாளருடன் இருந்தார். சான்சிலர் அலுவலகத்தில் நடந்த ஓர் உத்தியோக பூர்வ கூட்டத்தைத் தொடர்ந்து ஒரு கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பும், Der Spiegel மற்றும் அரசு ஒளிபரப்பு ஸ்தாபனம் ARD உடனான நேர் காணல்களும் நடந்தன. ஒபாமா வெள்ளியன்று முன் நண்பகல் புறப்படுவதற்கு முன்னதாக, அன்றைய காலை கூட்டத்தில் அவருடன் கலந்து கொள்வதற்கு பிரெஞ்சு ஜனாதிபதி பிரான்சுவா ஹோலாண்ட், பிரிட்டிஷ் பிரதம மந்திரி தெரேசா மே, இத்தாலியப் பிரதம மந்திரி மரியோ ரென்சி மற்றும் ஸ்பானிஷ் பிரதம மந்திரி மரீனோ ரஜோய் ஆகியோர் மட்டும் அழைக்கப் பட்டிருந்தார்கள்.

''அட்லாண்டிக் இடையிலான நாடுகளது உறவுகளின் எதிர்காலம்'' ( On the future of Transatlantic relations.) என்று தலைப்பிட்டு வியாழனன்று ஒபாமா மற்றும் மேர்க்கெல் கூட்டாக எழுதிய கட்டுரை ஒன்று Wirts chaftswoche இதழில் வெளி யானது. அதில் ஜேர்மனி மற்றும் அமெரிக்காவிற்கு இடையிலான நெருக்கமான உறவு புகழப்பட்டிருந்தது. இந்த நட்புறவு ''சட்டத்தின் ஆட்சியின் கீழ் ஒரு பலமான ஜனநாயகத்தால் மட்டுமே உத்தரவாதம் அளிக்கப்படக் கூடிய தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் கண்ணியத்திற்கு நமது கூட்டுக் கடமைப்பாட்டை அடிப்படையாக'' (is based on our shared commitment to personal freedom and dignity, which only a vibrant democracy under the rule of law can guarantee.) கொண் டிருந்தது.

அக்கட்டுரை சர்வதேச சட்டத்தின் உலகளாவிய அங்கீகரிப்பை ''ஸ்திரப் பாடு மற்றும் செல்வ செழிப்புக்கான ஒரு முன்நிபந்தனையாக'',




(a prerequisite for stability and prosperity ) அத்துடன் ''மனித மதிப்புகளுக்கான நமது ஆழ்ந்த மரியாதை (our deep respect for human dignity), நமது பூமண்டலத்தைப் பாதுகாத்தல்'' (protecting our planet) மற்றும் ஏனைய “பொதுவானமதிப்புகளையும்”(common values) கையாண்டிருந்தது. பின்னர் அது அறிவிக்கையில், அது மிகவும் பாதிப்பேற்படுத்துவதை நாம் கையாள்வது குறித்ததாகும், அதுவே நமது மதிப்புகளின் உண்மை யான பலத்தைத் தீர்மானிக்கின்றது. என்று குறிப்பிட்டது.



NATO defense ministers are seated during a meeting of the North Atlantic Council Defense Ministers session at NATO headquarters in Brussels, Oct. 27, 2016.)

இத்தகைய பிசுபிசுப்பான மற்றும் பாசாங்குத்தனமான வார்த்தைப் பிரயோகங்கள், நேட்டோ மற்றும் மத்திய கிழக்குப் போர்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. நாம் ஒட்டு மொத்தமாக யூரோ - அட்லாண்ட் பகுதியின் பாதுகாப்பைப் பேண விரும்புகிறோம் என்பதாலேயே நமது நாடுகள் வடக்கு அட்லாண்டிக் கூட்டணிக்குள் (நேட்டோ) கூட்டு பாதுகாப்புக்கு கடமைப்பட்டுள்ளன. நமது குடிமக்களை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதாலும், சுதந்திரத்திற்கு எதிரான எதிரிகளிடம் நமது வாழ்வின் போக்கை நாம் தியாகம் செய்ய முடியாது என்பதாலும், ISILIஎதிர் கொள்வதற்கான உலகளாவிய கூட்டணி உட்பட பயங்கர வாதத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம் நெருக்கமாக கூடி இயங்குகிறோம், என்று அது குறிப்பிட்டது.




அவரை அடுத்து வரவிருப்பவரும் இதே போக்கை ஆதரிப்பதாக ஒபாமா பேர்லினில் தயக்கமின்றிக் குறிப்பிட்டார். வலதுசாரி அதிதீவிர ஸ்டீபன் பானனை தலைமை மூலோபாயவாதி பதவியில் ட்ரம்ப் நியமித்திருப்பதும் மற்றும் UKIP தலைவர் நைஜல் ஃபாராஜ் உடனான சந்திப்பே ஐரோப்பிய அரசியல்வாதி உடனான அவர் முதல் சந்திப்பாக இருக்குமென்ற அவரது முடிவும் துல்லியமாக எதிர்விதமானதை எடுத்துக்காட்டவில்லையா என்று பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட போது, ஒபாமா, ''எனது சிந்தனை எப்போதுமே சாதகமானது'' (I am always optimistic.) என்று பதிலளித்தார். இது தான் அவர் வாழ்க்கை அவருக்குக் கற்றுத் தந்திருக்கிறது. ''பதவியின் உள்ளார்ந்த கடமைப்பாடு'' (The solemn responsibility of the office) ட்ரம்ப் இற்கு இடமளிக்கும். இதில் ட்ரம்புக்கு உதவ அவரால் ஆனமட்டும் அனைத்தும் செய்யவிருக்கிறார். என ஒபாமா தெரிவித்தார்.

ஒபாமா சான்சிலர் மேர்க்கெல் மீது பாராட்டுக்களையும், புகழுரைகளையும் பொழிந்தார். அவர் அப்பெண்மணியின் பலமான தலைமையை புகழ்ந்துரைத்ததுடன், உக்ரேன் நெருக்கடி மற்றும் சிரிய விவகாரத்தில் அவர் அமெரிக்காவுக்கு நெருக்கமாக ஒத்துழைத்தார் எனவும் தெரிவித்தார். நான்காவது முறையாக மேர்க்கெல் பதவி ஏற்பதை அவர் ஆதரிப்பாரா என்று வினவியபோது, மற்றொரு நாட்டு அரசியலில் அவர் தலையிடுவதில்லை என்று தெரிவித்த ஒபாமா, ஆனால் போட்டியிடுவதென்று மேர்க்கெல் முடிவெடுத்து, தான் வாக்களிப்பதாக இருந்தால், அவருக்கே தாம் வாக்களிப்பார் எனத் தெரிவித்தார்.

ஆனால் ட்ரம்ப் அதுபோன்றவொரு போக்கை உண்மையில் ஆதரிக்கிறார் என்று அமெரிக்க-சார்பு ஊடக நிறுவனங்களைச் சமாதானப்படுத்தக் கூட அவர் சிரமப்பட்டார். Sddeutsche Zeitung பத்திரிகை வியாழனன்று எழுதுகையில், இது, சமீபத்திய நாள்களில் என்ன நடந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாத ஒருவர் பேசுவதைப் போலுள்ளது, என்று குறிப்பிட்டு, ஒபாமாவின் எதென்ஸ் உரையை அப்பத்திரிகை உதறியது. அப்பத்திரிகை அதை ''நல்லதொரு மழுப்பலாக'' வர்ணித்ததுடன், ட்ரம்ப் இன் வளர்ச்சியைத் தடுக்க தகைமையற்றவராக நிரூபணமான அமெரிக்க ஜனாதிபதி ''தன்னைத்தானே அவரது இறுதி ஐரோப்பிய சுற்றுப்பயணத்தில் ஐரோப்பாவின் மிகப் பெரிய ஏமாற்றுக்காரர், 'கிரேக்க' பிரதம மந்திரி அலெக்சிஸ் சிப்ராஸ்க்கு அடுத்து காண்கிறார்'', என்று குறிப்பிட்டது.

( 24 ஆம் பக்கம் பார்க்க..)

# உலக வரலாறும் மனித விடுதலையும்

13

“ஜனநாயகம் என்றும் பரந்த கொள்கை ஆட்சி என்றும் சுதந்திர உலகம் என்றும் மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களாட்சி என்றும் போற்றப்படும் இந்த ஆட்சி முறையில் அநீதியும் அடக்கு முறையும் தலைதூக்கி மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றமை இன்றைய உலக யதார்த்தம். மனித உரிமைகள், குடியுரிமைகள், அரசியல் உரிமைகள் என்றும் தனிமனித சுதந்திரங்கள் என்றும், ஜனநாயக யாப்புக்களில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட போதும், நடைமுறையில் இவை எல்லாம் மீறப்படுவது இயல்பாகியுள்ளது. ஜனநாயக ஆட்சிமுறையில் பல்வேறு ஏமாற்று வழிகளைக் கையாண்டு, பணத்தைக் கொட்டி, பரப்புரை செய்து முதலாளிய வர்க்கமே ஆட்சிப் பீடம் ஏறுகிறது. மக்களை நம்பச் செய்யும் வகையில் கருத்துருவாக்கம் செய்யும் ஊடகங்களின் உரிமையாளர்களும் இந்த வர்க்கத்தினரே. அமெரிக்க ஜனநாயக ஆட்சி முறையிலே, ஆளும் வர்க்கமானது, ஊடகங்கள் வாயிலாக மக்களின் மனவுலகில் கருத்துக்களைத் திணித்து, உண்மைகளைத் திரிவுபடுத்தி, பொய்மை என்ற மாயைக்குள் மக்களை வைத்திருக்கிறது என்பதை ஆதாரங்களுடன் புட்டுக் காட்டுகிறார் பிரபல அமெரிக்க அறிஞரான நோம் சொம்ஸ்கி.”

அரசியலமைப்பைப் பொறுத்தவரை, ஜனநாயகம் குறிப்பாக தாராண்மை ஜனநாயகம் தலை சிறந்த ஓர் அரசியல் வடிவம் என்றும் அதில் மனித உரிமைகளும், சுதந்திரங்களும் செம்மையாகப் பேணப்படுகின்றன என்றும் புக்குயாமா தெரிவிக்கும் கருத்தும் கண்டன விமர்சனங்களுக்கு இலக்காகி வருகிறது. அரசியல் நிறுவனங்களின் படிநிலை வளர்ச்சியில் ஜனநாயக ஆட்சி முறையானது, ஏனைய ஆட்சி அமைப்புக்களை விடச் சிறந்தது என்றே கூற வேண்டும்.

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*‘விடுதலை’ என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம்.*

எனினும், பல்வேறு ரகங்களாக, பல்வேறு நாடுகளில் இயங்கிவரும் ஜனநாயக ஆட்சி வடிவங்களில் மனித உரிமைகளும் சுதந்திரங்களும் செம்மையாகப் பேணப்படுகின்றனவா என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயம். ஜனநாயகம் என்றும் பரந்த கொள்கை ஆட்சி என்றும் சுதந்திர உலகம் என்றும்



மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களாட்சி என்றும் போற்றப்படும் இந்த ஆட்சி முறையில் அநீதியும் அடக்கு முறையும் தலைதூக்கி மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றமை இன்றைய உலக யதார்த்தம். மனித உரிமைகள், குடியுரிமைகள், அரசியல் உரிமைகள் என்றும் தனிமனித சுதந்திரங்கள் என்றும், ஜனநாயக யாப்புக்களில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட போதும், நடைமுறையில் இவை எல்லாம் மீறப்படுவது இயல்பாகியுள்ளது. ஜனநாயக ஆட்சிமுறையில் பல்வேறு ஏமாற்று வழிகளைக் கையாண்டு, பணத்தைக் கொட்டி, பரப்புரை செய்து முதலாளிய வர்க்கமே ஆட்சிப் பீடம் ஏறுகிறது. மக்களை நம்பச்செய்யும் வகையில் கருத்துருவாக்கம் செய்யும் ஊடகங்களின் உரிமையாளர்களும் இந்த வர்க்கத்தினரே. அமெரிக்க ஜனநாயக ஆட்சி முறையிலே, ஆளும் வர்க்கமானது, ஊடகங்கள் வாயிலாக மக்களின் மனவுலகில் கருத்துக்களைத் திணித்து, உண்மைகளைத் திரிவுபடுத்தி, பொய்மை என்ற மாயைக்குள் மக்களை வைத்திருக்கிறது என்பதை ஆதாரங்களுடன் புட்டுக் காட்டுகிறார் பிரபல அமெரிக்க அறிஞரான நோம் சொம்ஸ்கி (Noam Chomsky). இப்படியாக, உலகின் முதன்மையான ஜனநாயக ஆட்சியமைப்புகளே கேள்விக்குறிக்கு ஆளாகி நிற்கும் பொழுது, இந்த ஆட்சிவடிவத்தை மானிடத்தின் அதியுன்னத வளர்ச்சிக்கட்டமாகவும் மனித விழுமியங்களின் திருவடிவமாகவும் புக்குயாமா சித்திரிக்க முனைவது தவறானது. ஜனநாயக அரசியற்புறநிலையில் திளைத்து, வளர்ந்து, விரிவாக்கம் பெற்று, முதலாளியமானது மானிட சமூகத்தின் ஒரு பிரிவினரை மட்டும் நவீன தொழில்நுட்ப யுகத்தினுள் இட்டுச் சென்றுள்ளது. இப்பூமியில் வதியும் ஏனையோர், பெரும்பான்மையான மனிதர்கள், மூன்றாம் உலக மக்கள் இன்னும் ஏழைகளாக, ஒடுக்கப்பட்டவர்களாக, சுரண்டப்படுபவர்களாக மிகவும் பின்தங்கிய நிலையில் துன்பங்களைச் சுமந்து வாழ்ந்து வருகிறார்கள். மானிட உலகம் பிளவுபட்டு நிற்கிறது. செல்வமும், வறுமையுமாக, முன்னேற்றமும் பின்னடைவுமாக, உயர் நிலையும் தாழ்நிலையுமாக மனிதர்களிடையே பாரிய ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. போர்கள், ஆக்கிரமிப்புக்கள், புரட்சிகள், போராட்டங்களாக மனித சமூகங்கள் மத்தியில் முரண்பாடும் மோதல்களும் நிகழ்ந்து வருகின்றன. உலக ஒழுங்கு சீர்குலைந்து வருகிறது. உலக அமைதி குன்றி வருகிறது. ஒழுங்கும், அமைதியும் ஒத்திசைவான மனித உறவுகளும், வறுமைப் பிணி அகன்ற நிறைவான வாழ்வும், சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் ஓர் உன்னதமான வளர்ச்சி நிலையை மானிடம் இன்னும் அடையவில்லை. நவீனத்துவம் என புக்குயாமா குறிப்பிட்டுள்ளமை முதலாளிய தொழில்நுட்ப வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தையே. இதனை அடிப்படையாகக் கொண்டு மானிட சமூகம் ஓர் உன்னதமான உச்சநிலை வளர்ச்சியை எட்டிவிட்டது என்றும், இக்கட்ட வளர்ச்சியுடன் மனித வரலாறு முடிவுக்கு வந்துவிட்டது என்றும் அவர் முன்வைக்கும் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித சமூகத்தின் உயர்கட்ட வளர்ச்சிப் போக்கானது முடிவில்லாத பெரும் பயணமாகத் தொடர்கிறது. அந்த முடிவில்லாப் பயணத்துக்கு யாத்திரீகனாக வரலாறும் தொடர்ந்து நடைபோட்டு வருகிறது.

2001 ஆம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம், 11 ஆம்திகதி, அமெரிக்க தலைநகரான நியூஜோர்க்கில், உலகின் பொருளாதார மையமாக வானைத் தொட்டு நின்ற கோபுரங்கள் தாக்கப்பட்டு தகர்ந்து விழுந்த கோர நிகழ்வானது உலக வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. உலக முதலாளியத்தின் உச்ச வளர்ச்சியின் சின்னமாக, அமெரிக்க ஜனநாயகத்தின் அத்திபாரத்தில் கட்டப்பட்ட கோபுரங்கள் மீது விழுந்த அடி புக்குயாமாவின் வரலாற்றுக் கோட்பாட்டையும் தகர்த்தது. வரலாறு இன்னும் முடிவுக்கு வந்துவிடவில்லை என்ற செய்தியையே அந்நிகழ்வு உலகெங்கும் பறைசாற்றியது.

இந்த நிகழ்வை அடுத்து ஒரு புதிய உலக வரலாற்றுப் படலம் கட்டவிழ்ந்தது. அமெரிக்கா, பிரிட்டன் தலைமையில் மேற்குலகம் அணிதிரண்டு உலகப் பயங்கரவாத ஒழிப்பு இயக்கம் என்ற போர்வையில் இஸ்லாமிய அடிப்படைவாத சர்வாதிகாரங்களுக்கு எதிராகப் போர் தொடுத்தது. ஆப்கானிஸ்தானும், பின்பு ஈராக்கும் பெரும் படையெடுப்புகளுக்கு ஆளாகின. இந்நாடுகளில் பழைய ஆட்சியமைப்புக்கள் கவிழ்க்கப்பட்டு, புதிய ஆட்சிகள் நிறுவப்பட்டன. ஆனால், இங்கு போரும் வன்முறையும் ஓய்ந்துவிடவில்லை. அமைதி நிலைநாட்டப்படவில்லை. ஒரு புதிய சர்வதேச நெருக்கடிக்குள் உலகம் சிக்குப்பட்டுள்ளது. ஒரு புதிய பரிமாணத்தில் மனித வரலாற்று இயக்கம் அசையத் தொடங்கியுள்ளது.

புதிய உலக ஒழுங்கை நிர்ணயிக்கும் சக்தியாக மேற்குலக ஜனநாயகம் வளர்ச்சி பெற்று வருவதால் இந்தப் பூமியில் மனித அரசியல் ஆட்சிமுறை பூரணத்துவம் பெற்றுவிட்டது என்றும், இதனால் உலக நெருக்கடி நிலைமைகள் தணிந்து, வரலாற்று இயக்கம் முடிவுக்கு வந்துவிட்டதென்றும் புக்குயாமா கண்ட தரிசனம் பிழைத்துவிட்டது.

மானிட சமூகம் இன்னும் உன்னதம் பெறவில்லை. மனிதர்களிடையே இன்னும் பிணக்குகள் தீர்ந்துவிடவில்லை. முரண்பாடுகள் நீங்கிவிடவில்லை. மனித சமூகங்கள் ஒன்றோடு ஒன்று மோதுகின்றன. இனங்களிடையே போர் நிகழ்கிறது. பலம் பொருந்திய நாடுகள் பலம் குன்றிய நாடுகள் மீது படையெடுப்புக்களை நிகழ்த்துகின்றன. ஆக்கிரமிப்புக்கள் நடக்கின்றன. ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக கிளர்ச்சியும் வன்முறையும் தாண்டவமாடுகிறது. இந்தப் பூமியில் இரத்த ஆறுகள் ஓடியவாறு இருக்கின்றன. வரலாறு என்னும் மகாநதி ஓய்வின்றி, அமைதியின்றி ஓடிக் கொண்டே இருக்கிறது. மானிடம் இன்னும் விடுதலை பெறவில்லை.

ஒரு புதிய பரிணாமம் நோக்கி நகர்ந்து செல்லும் மனித வரலாறு இயக்கத்தை எப்படி விளங்கிக் கொள்வது? இன்றைய உலக நெருக்கடி எந்தத் திசையில் செல்கிறது?.

உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் அமெரிக்க வல்லரசானது மேற்குலக நாடுகளை அணிதிரட்டி ஆப்கானிஸ்தானுக்கும் ஈராக்குக்கும் எதிராகத் தொடுத்த யுத்தம் இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு எதிரான யுத்தமாகவே கருதப்படுகிறது. இன்னொரு வகையில் பார்க்கப் போனால், மேற்கத்தேய கிறிஸ்தவ உலகிற்கும் இஸ்லாமிய உலகிற்கும் மத்தியிலான மோதலாகவும் இந்நெருக்கடி சித்திரிக்கப்படுகிறது. இரு பெரும் நாகரிகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்கின்றனவா என்ற கேள்வியும் இப்பொழுது எழுப்பப்படுகிறது. இந்தப் பார்வையின் அடிப்படையில் பிரபல அமெரிக்க வரலாற்று அறிஞரான சாமுவேல் ஹண்டிங்ரனது (Samuel Huntington) ‘நாகரிகங்களின் மோதல்’ என்ற வரலாற்றுக் கோட்பாடு இன்று மிகவும் பரவலாக மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது. ஹண்டிங்ரனின் வரலாற்றுக் கோட்பாடு பற்றி இங்கு சுருக்கமாக விளக்க முயற்சிக்கின்றேன்.

1993 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் Foreien Affairs எனப்படும் பிரபல அரசியல் ஆய்வு ஏட்டில் ‘நாகரிகங்களின் மோதல்’ (Clash of Civilizations) என்ற தலைப்பில் சாமுவேல் ஹண்டிங்ரன் எழுதிய கட்டுரை பெரும் சர்ச்சையையும் தொடர்ச்சியான விவாதத்தையும் ஏற்படுத்தியது.

உலகத்தில் பல்வேறு நாகரிங்களைச் சேர்ந்த மக்கள் இனங்கள் வாழ்ந்து வருகின்றன. இனிவரும் உலக நெருக்கடியின் மிகவும் ஆபத்தான பரிமாணமாக வெவ்வேறு நாகரிகங்களைச் சேர்ந்த மக்கள் இனங்கள் மோதிக்கொள்வது சாத்தியமாகும். அதாவது நாகரிகங்களின் மோதல்களாகவே எதிர்காலத்தில் மனித வரலாறு கட்டவிழும். ஹண்டிங்ரனது கட்டுரையின் மையக்கருத்து இதுதான். இந்தக் கருத்து சர்வதேச அரசியல் உலகில் ஒரு சிலு சிலுப்பை ஏற்படுத்தியது.

(தொடரும்...)





# தேசிய வா
# கார்த்திகைப்

இலங்கைத் தீவின் இயற்கை மலர்களிடையே கார்த்திகைப் பூவுக்கெனத் தனித்துவமான சில வசீகரங்கள் உண்டு. காத்திருந்தது போல ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் இது அரும்பத் தொடங்கும். இதன் வெளிர்பச்சை நிறப் பூ முகை மூப்பெய்துகையில் மஞ்சளாகி, முனையில் இருந்து இரத்தச் சிவப்பேறி, பாதிமஞ்சள் பாதிசிவப்பு என்று பிரகாசித்துப் பின்னர் முற்றிலும் குருதிப் பூவாக நிறம் மாறும். கார்த்திகையில் மொட்டவிழும் பொலிவும், நெருப்பெனச் சுவாலிக்கும் மஞ்சள் - சிவப்பு நிறப் பூவிதழ்களும், குறிப்பிட்டுச் சொல்லும் படியான வாசம் எதுவும் இல்லாத இந்தப் பூவுக்கு ஈழத் தமிழர்களிடையே வாசத்தைப் பெற்றுத் தந்திருக்கின்றன. ஆம்! 2003 ஆம் ஆண்டு மாவீரர் காலப்பகுதியையொட்டித் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர் தாயகத்தினுடைய தேசிய மலராகக் கார்த்திகைப் பூவைத் தெரிவு செய்து தமிழன்னையின் முடியில் சூட்டியதன் பின்னர் அதற்குத் தேசிய வாசம் கிடைத்திருக்கிறது.

எல்லா நாடுகளுமே தேசிய அரசியலில் தேசியக்கொடி, தேசிய கீதத்துக்கு அடுத்த படியாக, மக்களை எழுச்சி கொள்ள வைத்து ஒருங்கிணைக்கும் வசியக் குறியீடுகளாகச் சில உயிர்க்கூறுகளைப் பயன்படுத்துகின்றன. தங்களுடைய அரசியல், பண்பாடு, இயற்கைச் சூழல்களின் வெட்டுமுகங்களைப் பிரதிபலிக்கும்படியான மலர், மரம், மிருகம், பறவை போன்றவற்றைத் தெரிவு செய்து தங்கள் தேசிய முகவரிகளாக்கிக் கொள்கின்றன.

ஐக்கிய அமெரிக்கா தனது தேசிய மலராக 1986ஆம் ஆண்டு ரோஜாப்பூவை அங்கீகரித்தது. அமெரிக்கர்களின் பண்பாட்டில் மற்றைய எல்லாப் பூக்களையும் விட அன்பின் குறியீடாக ரோஜா அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அமெரிக்காவின் தேசியப் பறவையாக, வட அமெரிக்காவின் ஒரேயொரு கழுகு இனமான மொட்டந்தலைக் கழுகு 1782 ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வருகிறது. உணவுச் சங்கிலியின் உச்சப்படியில் இருப்பதால் மற்றைய எல்லாவற்றையும் இரையாக்கக் கூடிய வல்லாண்மையைப் பெற்றிருக்கும் மொட்டந்தலைக் கழுகை அமெரிக்கர்கள் சுதந்திரத்தின் குறியீடு ஆகக் கருதுகிறார்கள். அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களும் கூடத் தங்களுக்கெனத் தனியான மரங்களைத் தேர்ந்து வைத்துள்ளன.

இந்திய தேசிய மலராக இந்துத்துவ அரசியலின் வெளிப்படையாகத் தாமரைப் பூவை ஏற்றுக்கொண்டுள்ளது. அதன் தேசிய அரசியற்கட்சிகளில் ஒன்றான பாரதீய ஜனதாக் கட்சியின் சின்னமாக தாமரைப்பூ இருப்பது குறிப்பிடத்தக்கது. தேசிய மரமாக பண்டைய நீதி - நிர்வாக முறையான பஞ்சாயத்து இன்றளவும் கூடுகின்ற இடமாக நிலவும் ஆலமரம் விளங்குகிறது. தேசிய விலங்காகத் தனது கானகங்களில் மட்டுமே ஒதுங்கி விட்ட வரிப்புலியையும், தேசியப் பறவையாகத் தன்னையே தாயகமாகக் கொண்ட அழகொழுகும் மயிலையும் அடையாளப்படுத்தியுள்ளது. இவற்றுடன், நூற்றுக்கு மேற்பட்ட மாங்கனி வகைகளைக் கொண்டிருக்கும் பெருமையில் தேசியப் பழமாக மாம்பழத்தையும் சுவைக்கிறது.

ஸ்ரீலங்கா தனது பௌத்த பண்பாட்டுச் சூழலுக்கும் இயற்கைச் சூழலுக்கும் அமைவாக தேசிய மலராக நீலோற்பலத்தையும் (*Nymphaea nouchali*), தேசிய மரமாக மெசுவா எனப்படும் நாகமரத்தையும் (*Mesua nagassarium*), தேசியப்பறவையாக காட்டுக் கோழியையும் அறிவித்துள்ளது. இலங்கைக் காடுகளில் கரந்துறையாத சிங்கத்தை தேசியக் கொடியில் வாளேந்த வைத்த பின்னர் ஸ்ரீலங்கா அரசால் வேறு எதனையும் தேசிய விலங்காகக் கொள்ள முடியவில்லை. இதனால் பெரஹறா போன்ற பௌத்த விழாக்களில் முக்கியத்துவம் பெறும் யானையைக் கலாசார விலங்காகக் கொண்டாடுகிறது. யானைகளின் கூட்டத்தில் அரிதாக வெள்ளையானைகள் பிறப்பதுண்டு. வெள்ளையானை பௌத்த மதத்தில் கௌதம புத்தரின் முற்பிறப்பாகப் போற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சிங்களத் தேசியம் தமிழர்களது அடையாளங்களை அங்கீகரிக்காது அழித்தொழிக்கத் தலைப்பட்ட பின்னர், அவற்றைத் தூக்கி நிறுத்தும் எதிர்ப்பு அரசியலாகத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் முளைவிட்டது. தேசியப் போராட்டம் தன் பரிணாமப் பாதையில் காலத்துக்குக் காலம் சமூக - வர லாற்றுக் கூறுகளால் தமிழ்த் தேசி யத்தின் இருப்பை நிறுவிவந்துள்ளது. அதன் தொடர்ச்சியாகவே தமிழ்த்தேசியப் பலத்துக்கு மேலும் பல்பரிமாண வலிமை சேர்க்கும் வகையில் தேசிய மலராக கார்த்திகைப் பூவைத்தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது.

கார்த்திகைப் பூச்செடி பழந்தமிழ் இலக்கியங்களில் காந்தள் என்றும் ஆங்கிலத்தில் Glory Lily அல்லது Tiger Claw என்றும் சுட்டப் பெறுகிறது. அறிவியல் மொழியில் குளோரியோசா சுப்பேர்பா (*Gloriosa superba*) என அழைக்கப்படுகிறது. கார்த்திகைப்பூவை கண்ணுற்ற ஆய்வாளர்கள் இருவரில் ஒருவர் கண்கவர் வனப்பு (Glorious) என்றும் மற்றையவர் அழகின் உச்சம் (Superb) என்றும் வியக்க அதுவே Gloriosasuperba என்று பெயரானதாகச் சொல்லப்படுகிறது. கார்த்திகைப் பூ பற்றிய இவ்வர்ணனை மிகையானது அல்ல, இதன் அழகு கண்கொட்டாமல் பார்க்கத்தூண்டும். கண்வலிக்கும் அளவுக்கு என்பார்களே, அந்த அளவுக்கு மீளவும் மீளவும் பார்க்க வைக்கும். இதனால் தமிழக் கிராமங்களில் கண்வலிப்பு என்றும் உச்சரிக்கப்படுகிறது. கண்நோக்கும் பூவே கண்நோகும்பூவாக மருவிப் பின்னர், கண்வலிப்பூவாகத் திரிந்ததாகச் சொல்பவர்களும் உண்டு.

> "கார்த்திகைப் பூவின் நிறத்தில் இவள்
> கட்டுற சேலைகள் இருக்கும்
> கார்த்திகை மாதம் கல்லறை நாளில்
> தாயவள் மேனி சிலிர்க்கும்"
>
> கவிஞர் புதுவை இரத்தினதுரை

கார்த்திகைப் பூச்செடி தன் இலை நுனிகளை நூற்சுருளாக்கிக் கொழுகொம்புகளைப் பற்றி வளரும் ஒரு தந்தேறி (Tendril Climber) வகையாகும். பொதுவாக ஐப்பசியில் முளைவிட்டு, கார்த்திகையில் பூத்துக் குலுங்கி மார்கழியில் மறையும் இந்தச் செடி - மீதிக்காலங்களில் மண்ணுள் நிலக்கீழ் தண்டாகத் (Rhizome) துயிலுகிறது. வெண்ணிறச் சதைப்பிடிப்பான இக்கிழங்கு தன் ஒரு நுனியை ஏர்முனையாக வளைத்து மண்ணினுள் நங்கூரமிட்டுக் கொள்ளும். இதனால் கலப்பைக் கிழங்கு எனவும் பெயர் பெற்றுள்ளது.

கார்த்திகைச் செடியின் ரிஷி - மூலமாகத் தென் ஆபிரிக்கா நம்பப்படுகிறது. ஆபிரிக்க நாடுகளுடன் இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளின் இயற்கைச் சூழலில் உள்நாட்டுக்குரிய (Endemic) இனங்களில் ஒன்றாக நிலைபெற்றுள்ளது. தாவரவிய லாளர்களால் இதுவரையில் ஆறு இனங்கள் பெயரிடப்பட்டுள்ளன. பிரதானமான இரண்டு இனங்களில் ஒன்றான *Gloriosa superba* ஆபிரிக்க - ஆசிய நாடுகளிலும், பூவிதழ்களில் வெண்மை கலந்த *Gloriosa rothschildiana* ஆபிரிக்காவிலும் அதிகமாகப் பரவியுள்ளன. வெப்ப வலயச் செடியான இதன்மீது இடைவெப்ப வலய மேற்கு நாடுகளுக்கும் மோகம் அதிகம். வெப்பக் குடில்கள் (Hot House) அமைத்து அதனுள் அலங்காரச் செடிகளாக வளர்த்து வருகின்றன. அமெரிக்கா அதனுடைய இயற்கைத் தாவரமாக இல்லாத போதும் தனது அஞ்சல் தலை ஒன்றில் கார்த்திகைப் பூவைப் பொறித்து அழகு பார்த்துள்ளது.

கார்த்திகைப் பூ, பண்டைத் தமிழ் வாழ்







பொ. ஐங்கரநேசன் M.Sc, PGDJMC

வுக்கு மிகவும் நெருக்கமான பூக்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. 'காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்' என்று காந்தள் மலர் மாலை அணியும் வழக்கத்தைப் பதிற்றுப்பத்து அத்தாட்சிப்படுத்துகிறது. மரகத மணித் தாள் செறிந்த மணிக்காந்தள் மென்விரல்கள் என்று காந்தளைப் பெண்களின் விரல்களுக்குச் சிலப்பதிகாரம் உவமை செய்கிறது. "காந்தண் முழுமுதல் மெல்லிலை குழைய முயங்கலும் இல்லுய்த்து நடுதலும் என்று தலைவனுடைய மலையில் இருந்து மழைநீர் கொண்டுவந்து சேர்த்த காந்தட்கிழங்கை நட்டு வளர்த்துத் தன்னை ஆற்றுப்படுத்தும் நாயகி பற்றிக் குறுந்தொகை கூறுகிறது. சோலை அடுக்கத்துச் சுரும்பு உண விரிந்த கடவுட் காந்தளுள்ளும்'' எனத் தெய்வங்களுக்கு காந்தள்பூ சூட்டப்படுவதை அகநானூறு தெளிவுபடுத்துகிறது. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டு அயர்ந்த காந்தளும் என்று காந்தள் மலரணிந்து வெறியாடுவதைத் தொல்காப்பியம் சித்திரிக்கிறது. தமிழரின் போர்க் கடவுள் முருகனுக்குரிய பூவாகக் காந்தளைப் புறப்பொருள் வெண்பா மாலை சிறப்பித்துக் கூறுகிறது. இப்படி, கார்த்திகைப் பூவில் வாய் நனைக்காத புலவர்களே இல்லை என்னும் அளவுக்குப் பழந் தமிழ் இலக்கியங்கள் பூராவும் கார்த்திகைப் பூ இறைந்து கிடக்கிறது.

தமிழ்ப்பண்பாட்டுக்கு நெருக்கமான பூவாக இருப்பதும், தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கின் இயற்கைச் சூழலுக்குரிய ஓர் உள்நாட்டு இனமாக இருப்பதும் தேசியப் பூவின் தேர்வில் கார்த்திகைப் பூவின் அடிப்படைத் தகுதிகள் ஆகும். இவற்றுடன் தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் தேசியக் கொடியின் சிவப்பு - மஞ்சள் வர்ணங்களைப் பிரதிபலிக்கும் பூவிதழ்களும், மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பாங்கில் கார்த்திகையில் பூவிரியும் அதன் அழகும் சிறப்புத் தகைமைகளாகச் சேர்ந்து கொள்ள கார்த்திகைப் பூ ஈழத்தமிழர்களின் தேசிய மலராக மலர்ந்துள்ளது.

கார்த்திகைப் பூவைத் தேசிய மலராகத் தேர்வு செய்தமை குறித்து எதிர்மறையான விமர்சனங்களும் இல்லாமல் இல்லை. கார்த்திகைப் பூச்செடியில் இயற்கையாகவே கொல்கிசின் (Colchicine) என்னும் நச்சு இரசாயனம் காணப்படுகிறது. கொல்கிசின் நஞ்சினை சயனைட் குப்பிகள் அணியும் புலிகளுக்கு பொருத்தப்பாடு உடைய இயல்பாகக் காட்டியும், சிலசமயங்களில் கார்த்திகைக் கிழங்கு தற்கொலைக் காரணியாக அமைவதைத் தற்கொலைப் போராளிகளான கரும்புலிகளுடன் ஒப்பிட்டும் இந்த விமர்சனங்கள் அமைகின்றன.

கார்த்திகைப் பூ இனங்களில் ஒன்றைத்தான் (*Gloriosa rothschildiana*) ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான சிம்பாப்வே தனது தேசியப் பூவாக தேர்வு செய்துள்ளது. பல்வேறு காலனித்துவ நாடுகளின் பிடியின் கீழும், பின்னர் சிறுபான்மை வெள்ளை இனத்தின் அடக்குமுறையின் கீழும் அடிமைப்பட்டிருந்த சிம்பாப்வே 1980ஆம் ஆண்டிலேயே பிரித்தானியாவிடமிருந்து பூரணமாக விடுதலை பெற்றது. தேசியப் பூக்களின் தேர்வில் நஞ்சு ஒரு பின்னடைவு அல்ல என்பதற்கு இன்னும் பல உலக நாடுகளின் தேசியப் பூக்கள் சாட்சிகளாக உள்ளன. மலர்களின் ஏற்றுமதியில் முன்னணியில் திகழும் ஒல்லாந்து (Holland) நச்சுப் பூண்டான ரியூலிப்பின் (Tuli) மலரையே அரவணைத்துக் கொண்டிருக்கிறது. ரியூலிப்பின் ஒரு குமுழிலுள்ள (குமிழ் - வெங்காயம், உள்ளி போன்ற நிலங்கீழ்ச் சேமிப்பு) நஞ்சின் அளவே மனிதனை மரணத்துக்கு அழைத்துச்செல்லப் போதுமானது. பிரான்சின் பிரபல்யமான அதன் தேசிய மலர் ஐரிஸ் (Fleur de lis) ஏறத்தாழ அதன் எல்லாப்பாகங்களிலுமே நஞ்சினைத் தடவி வைத்துள்ளது. வேல்ஸ்சின் டஃபோடில் (Daffodil) பூவும், அதன் குமிழும் அபாயகரமான அளவுக்கு நஞ்சினைக்கொண்டுள்ளன. அமெரிக்காவின் லூசியானா, மிசிசிப்பி மாநிலங்கள் தங்கள் மாநில மலராகத் தெரிவு செய்து வைத்திருக்கும் மக்னோலியா (Magnolia) புக்களும் விசத்தன்மையானவை.

மேற்கூறிய உதாரணங்கள் மட்டுமல்ல, பூக்கும்தாவரங்கள் எல்லாமேதமது ஏதேனும் ஒரு பகுதியில், ஏதேனும் ஓர் அளவில், ஏதேனும் ஒரு வகையான நச்சினைச் சேமிப்பில் கொண்டுள்ளன.

தாவரங்களின் இராச்சியத்தில் ஏனைய தாவரங்களை ஓரங்கட்டி, பூக்கும் தாவரங்கள் (Angiosperms) ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருப்பதற்கு இந்த நச்சு வேதிகளே உதவுகின்றன. பச்சைய வெறியோடு அலையும் பூச்சிகளில் இருந்தும், மேய்ச்சல் விலங்குகளில் இருந்தும் பூக்கும் தாவரங்கள் தம்மைத் தற்காத்துக்கொள்ளும் ஆயுதங்களாக இவை விளங்குகின்றன. சிங்கோனா மரவுரியில் குயினைன், கோப்பியில் கஃபின், கொக்கோவில் கொக்கொயின், ஒப்பியம் செடியில் மோரபின், புகையிலையில் நிக்கொற்றின், பட்டிப் பூவில் வின்கிறிஸ்ரின், செவ்வலரியில் (Nerium) ஒலியாண்ட்றின், ஆமணக் கில் றிசின் வேதிப்போர் நஞ்சுகளில் சில உதாரணங்களாகும். செவ்வலரி இலை யொன்றில் ஒரு குழந்தையை மரணிக்க வைக்கும் அளவுக்கு ஒலியாண்ட்றின் செறிந்துள்ளது. இரண்டு ஆமணக்கம் விதைகளிலுள்ள 'றிசின' ஒரு மனிதனைக் கொல்லப் போதுமானது.

நமக்குமிக நெருக்கமான உணவுத்தாரங்களிலே கூட நஞ்சுகள் கரந்துறைகின்றன. பீச் பழத்தின் விதையில் சயனைட் சேமிப்பு உள்ளது. பச்சைத் தக்காளியில் ரொமாற்றின் நஞ்சு பரவியிருக்கிறது. உருளைக் கிழங்குச் செடியின் துளிரகளிலும், அதன் பச்சைக் கிழங்குத் தோல்களிலும், கத்தரியின் இலைகளிலும் சொலானின் விஷம் ஒளிந்துள்ளது. இப்படி இதுவரையில் கண்டறியப்பட்ட பத்தாயிரத்துக்கும் அதிகமான தாவர நஞ்சுகளில் ஒன்றாகவே காரத்திகைப் பூச்செடியில் 'கொல்கிசின்' உருவாகிறது.

கார்த்திகைப் பூச்செடியின் மற்றைய பாகங்களைவிடக் கிழங்கில் கொல்கிசின் கொஞ்சம் அதிகமாகத் திரளுவதால் கிழங்கை உட்கொள்ள நேரின் மரணம் சம்பவிக்கிறது. காரத்திகைச்செடி பயிரச் செய்கை நிலங்களிலும் வளருவதால் வற்றாளைக் கிழங்கு என நினைத்துத் தவறுதலாக காரத்திகைக்கிழங்கைச் சாப்பிட்டுப் பலியான சம்பவங்கள் ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் பதிவாகியுள்ளன. மரணத்தை விளைவிக்கும் கொல்கிசின் பாரம்பரிய மருத்துவத்தில் அருமருந்தாகவும் உள்ளது. கார்த்திகைக் கிழங்குப்பசை ஊமைக்காயங்கள், தசைச்சுளுக்கு, வயிற்றுநோ, மூலம், முடக்குவாதம், தொழுநோய் போன்ற உபாதைகளுக்கும், கருச்சிதைவு பிரசவ வலியைத் தூண்டவும், பேன் கொல்லி மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. இதற்குத் தேள்கடி, பாம்புக்கடியைக் குணப்படுத்தக்கூடிய விச முறிவு ஆற்றல் இருப்பதும் அறியப்பட்டுள்ளது. இந்தியாவில் வீடுகளினுள் பாம்புகள் நுழைவதைத்தடுக்கும் நோக்குடன் சாளரங்களில் கார்த்திகைக் கிழங்கைப்போட்டு வைக்கும் நடைமுறை உள்ளது. ஆயுர்வேத, யுனானி முறைகளைத் தொடர்ந்து ஆங்கில மருத்துவமும் கொல்கிசினைச் சேர்த்துக் கொள்ளத் தொடங்கியுள்ளது. மருத்துவப் பெறுமதி காரணமாகத் தமிழகத்தில் கார்த்திகைப் பூச்செடிகளைப் பெரும் பண்ணைகளில் பணப்பயிராகப் பயிரிட்டு வளர்க்கிறார்கள். இதன் விதைகளையும், கிழங்குகளையும், இவற்றிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகளையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் ஆண்டொன் றுக்கு 10 கோடி ரூபாய்கள் அந்நிய செலாவணியாகத் தமிழகத்துக்குக் கிடைக்கிறது.

இந்தப் பின்னணியிலேயே உலக அரங்கில் ஈழத் தமிழினத்தின் குறியீடாக, வேறு எந்தப்பூவை விடவும் பொருத்தமான தேர்வாகக் காரத்திகைப்பு சிறப்புப் பெற்றுள்ளது. ஆனால் கார்த்திகை பூ சொல்லும் செய்தியை, அது கமழும் தேசிய வாசத்தை நுகர் வதற்குப் பேரினவாதம் தயாராக இல்லை. இலங்கைத் தீவின் ஒரே ஒரு பூ நீலோற்பலம் தான் என்று அதன் நாசி வழிகள் எங்கும் நீலோற்பலத்தால் அடைத்து வைத்திருக்கிறது.

இயற்கை, அதன் பரிணாமப் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கி எறிந்து தன் பல்லினத்துவத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது என்பதை வரலாறு பூராவும் நிரூபித்தே வந்துள்ளது.

நன்றி: ஏழாவது ஊழி





இரக்கத்தின் ஆண்டின் நிறைவாக வத்திகானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இரக்கத்தின் தூய கதவை மூடும் காட்சி.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.



பரிசுத்த வேதாகமத்தை நான் தினமும் வாசிப்பேன். நான் தோல்வி அடைவேன் என்று கருத்து கணிப்புக்கள் கூறிய போதும் என்னுடைய நம்பிக்கை என் கர்த்தர் மேல் இருந்தது. - Donald Trumph

# உலகிலேயே உயரமான கிறிஸ்மஸ் மரம் இலங்கையில் அமைப்பதற்கு நடவடிக்கை



## மத நல்லிணக்கத்துக்கு உதவும் கின்னஸ் சாதனை

இலங்கையில் மத நல்லிணக்கத்திற்கு உதவும் நோக்கில் உலகிலேயே மிக உயரமான செயற்கை கிறிஸ்மஸ் மரம் ஒன்றை 2016 ஆம் ஆண்டில் அமைக்க உள்ளதாக அமைச்சர் அர்ச்சுனா ரணதுங்காவின் துறைமுக நல ஆதரவு அமைப்பும் துறைமுக கத்தோலிக்க அமைப்பும் தெரிவித்துள்ளன.காடுபோன்ற ஒரு சூழலை செயற்கையாக உருவாக்கி, அதில், 6 மீட்டர் உயரமுடைய கிறிஸ்துமஸ் தாத்தா உருவத்தை நிறுத்தி, அதன் அருகே 114 மீட்டர் உயரமுடைய செயற்கை கிறிஸ்துமஸ் மரத்தை அமைக்கவுள்ளதாக துறைமுக நல ஆதரவு அமைப்பும் துறைமுகத்தோலிக்க அமைப்பும் தெரிவித்துள்ளன.

இந்த கிறிஸ்துமஸ் மரத்தில் 5லட்சம் வண்ண விளக்குகளும் கின்னஸ் சாதனையாக பொருத்தப் பட உள்ளன.

2009ம் ஆண்டு மெக்சிகோவில் நிறுவப்பட்ட 90 மீட்டர் உயர கிறிஸ்துமஸ் மரமே இதுவரை அதிக உயரமுடையதாக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது .

## ஆசிய ஆயர்களின் பேரவையின் 11ஆவது ஆண்டு அமர்வு கொழும்பில்

எவ்.ஏ.பி.சி என அழைக்கப் படும் ஆசிய ஆயர்களின் பேரவையின் 11ஆவது ஆண்டு அமர்வு நவம்பர் மாதம் 28 முதல் டிசம்பர் 4ஆம் திகதி வரை இலங்கையின் தலைநகர் கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆசிய ஆயர் பேரவையின் 11ஆவது ஆண்டு நிறையமர்வுக் கூட்டத்திற்கு கர்தினால் டெலெஸ்போர் டோப்போ வழியாக திருத்தந்தை பிரான்சீஸ் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்தியாவின் இராஞ்சி பேராயர் கர்தினால் டோப்போ அவர்களை மேற்படி மகாநட்டிற்கு தன் பிரதிநிதியாக நியமித்துள்ள திருத்தந்தை பிரான்சீஸ் கர்தினால் டெலெஸ்போர் டோப்போ அவர்களுக்கு அனுப்பியுள்ள செய்தியில் தற்போது இலங்கையில் இடம்பெற உள்ள இந்த 11ஆவது நிறையமர்வுக் கூட்டம் பண்டைய காலத்தில் துடிப்புள்ள மறைபோதகர்கள் ஆசிய கடற்கரைகளில் வந்திறங்கியமையை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்துவதாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

ஆசிய ஆயர் பேரவைக் கூட்டமைப்பின் தலைவர் கர்தினால் ஆஸ்வால்டு கிரேசியஸ் அவர்களின் வழி நடத்தலில் நடைபெறவுள்ள இந்த ஆயர் பேரவையின் 11ஆவது நிறையமர்வுக் கூட்டம் உயிர்த்துடிப்புடைய மத உணர்வுகளைத் தூண்டுவதாகவும் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதாகவும் அமையும் என்ற நம்பிக்கையையும் கர்தினால் டோப்போ அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் திருத்தந்தை பிரான்சீஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆசிய ஆயர்களின் பேரவையின் 11ஆவது ஆண்டு அமர்விற்குத்தன் ஆசீரையும் செபங்களையும் வழங்குவதாகவும் அச்செய்தியில் தெரிவித்துள் ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## சுகாதார மேம்பாட்டுக்கான தங்கம் வென்றது ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார்கல்லூரி வடக்கு மாகாணத்தில் சிறந்த சுகாதாரத்தை மேம்படுத்தும் பாடசாலைக்கான தங்கத்தை வென்று சாதனைபடைத்துள்ளது. வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2016ஆம் ஆண்டுசாதனையாளர் விருது வழங்கும் விழா 20 நவம்பர் 2016 அன்று யாழ்ப்பாணம்இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்ற போது ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மேற்படி சிறந்த சுகாதாரத்தை மேம்படுத்தும் பாடசாலைக்கான தங்க விருதை 80 புள்ளிகளுக்கு மேல் பெற்று தன தாக்கிக்கொண்டது.

சிறந்த சுகாதாரத்தை மேம்படுத்தும் பாடசாலைக்கான தங்கவிருதைப் பெற்ற ஊர்காவற்றுறைஅந்தோனியார் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

## மதங்களுக்கு இடையில் நல்லெண்ணத்தை மேம்படுத்தம் தேவை எழுந்துள்ளது!

*வாழ்த்துச் செய்தியில் யாழ். ஆயர் வலியுறுத்து*

காலைக்கதிர் பத்திரிகை கத்தோலிக்க செய்திகளை அறிக்கையிடும் ஒரு பக்கத்தை ஞாயிறு தோறும் வெளியிட முன்வந்திருப்பது உண்மையிலேயே ஒரு மகிழ்வான அதேவேளை பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இயக்குனர் , ஊடக விரிவுரையாளர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தாம் இயக்கி வரும் ரீ.சி.என்.எல். செய்தி சேவை மூலமாக மேற் கொள்ளும் இந்த முயற்சிக்கு களம் அமைத்துக் கொடுக்கும் காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியருக்கு கத்தோலிக்க மக்கள் பெயரால் அன்புடன் நன்றி கூற விரும்புகிறோம்.

இலங்கை நாட்டில் இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும்நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் இணக்கப்பாட்டையும் இன்னும் அதிகமாக வளர்க்க வேண்டிய ஒரு தேவை என்றுமில்லாதவாறு இன்று உருவாகியுள்ளது. சுதந்திரமான, சுபீட்சமான இலங்கை நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டுமானால் இனங்களுக்கிடையிலும்மதங்களுக்கிடையிலும் சுமூகமான உறவு உருவாக்கப்பட வேண்டும். இன - மத வாதிகளை தயவு தாட்சண்யம் காட்டாது கைது செய்யுங்கள் எனப் பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி அண்மையில் உத்தரவிட்டமை இங்கு நினைவு கூரப்பட வேண்டும்.

யாழ் ஊடகங்கள், குறிப்பாக அச்சு ஊடகங்கள் கத்தோலிக்க மதம் சார்ந்த செய்திகள் , அறிக்கைகள், ஆக்கங்கள் என்பவற்றிற்கு களம் அமைத்துத் தருகின்றன. இது கத்தோலிக்க மதத்தைப்பற்றி மற்றவர்கள் அறியவும் நல்லெண்ணத்தை உருவாக்கவும் உதவி செய்யும். இந்தப் பணியில் இன்னும் ஆழமாகவும் விரிவாகவும் வித்தியாசமான முறையிலும் புதிதாக வெளிவரும் 'காலைக்கதிர்' பத்திரிகையும் இணைந்துள்ளமை வரவேற்கத்தக்கதும் பாராட்டப்படத்தக்கதுமாகும்.

கத்தோலிக்க மக்கள் இந்த அரிய வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்திப் பயன் பெற வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

*- மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.*

## உண்மையின் எண்ணங்கள்

## காலைக்கதிர் தரும் அரிய வாய்ப்பு

'காலைக்கதிர்' பத்திரிகை 'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழ்' எனும் பெயரில் ஞாயிறு தோறும் ஒரு பக்கத்தை நமக்கு ஒதுக்கித் தந்துள்ளமை கத்தோலிக்க மக்களுக்குக் கிடைந்த அரிய சந்தர்ப்பமாகும்.. யாழ் ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை காலைக்கதிர் பத்திரிகை ஆசிரியருக்கு கத்தோலிக்க மக்கள் பெயரால் அன்புடன் நன்றி கூறியுள்ளார்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இயக்குனர், ஊடக விரிவுரையாளர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தாம் இயக்கி வரும் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா - ரீ.சி.என்.எல். செய்தி சேவை வழியாக காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழை ஞாயிறுதினம் தோறும் வெளியிடுவார். இந்த அரிய சந்தர்ப்பத்தை சிறந்த விதமாக பயன்படுத்துவது எம்முன் இருக்கும் சவாலாகும். இப்பணியை பத்திரிகைத் தர்மத்துடன் சிறப்பாக ஆற்ற அனைவரின் ஆத ரவையும் வேண்டி நிற்கிறோம்.

உங்கள் கத்தோலிக்க செய்திகள், அவை தொடர்பான படங்கள் , நிகழ்வுகள் பற்றிய படங்கள்,அவைபற்றிய குறிப்புக்கள் - மற்றும் அறிவிப்புக்கள், அறிக்கைகள் போன்ற அனைத்து விடயங்களுக்கும் இங்கு இடமுண்டு. குறிப்பிட்ட ஞாயிறு வாரம் அவை வெளிவரவேண்டுமெனில் அவ்வாரத்தின் செவ்வாய்க்கிழமை விடயங்கள் எம்மை வந்தடைய வேண்டும். காலக்கெடுவைத் தாண்டி வருபவை அடுத்த ஞாயிறு வாரமே அறிக்கைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும்.

கார்த்திகை மாதம் கத்தோலிக்க திருச்சபையில் இறந்தவர்களை நினைவுகூரும் மாதம். கடந்த 30 ஆண்டுகாலப் போரில் எமது நாட்டில் உயிர்நீத்த அனைவரையும் நினைந்து அஞ்சலிக்கிறோம். நித்திய அமைதியில் இளைப்பாற வேண்டுகிறோம். - ஆசிரியர்

## பாசையூரில் இருந்து வசந்தபுரம் வரை பனம் விதைகள் நடுகை

பாசையூர் பங்குத் தந்தை லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாரின்திட்டமிடலில் புனித 2ஆம் யோண்போல் இளைஞர் மன்றத்தினால் கார்த்திகை மரம் நடுகை மாதத்தில் 2ஆயிரத்து 500 பனம் விதைகள் பாசையூர் கடற்கரையில் இருந்து வசந்தபுரம் வரையிலான கடற்கரை ஓரத்தில் நாட்டப்பட்டுள்ளது.20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் கொட்டும் மழையிலும் பாசையூர் பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாருடன்பாசையூர் 2ஆம் யோண் போல் இளைஞர் மன்றத்தினர்ஆடிப்பாடி மகிழ்வாக பனம் விதைகளை நடுவதைக் காண்பது மனதிற்கு இதமாக இருந்தது.

அடுத்த வாரம் முதல் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ்வாசிப்புக்கானபணப்பரிசுப் போட்டி அறிமுகம். - ஆசிரியர்

## யுத்த காலங்களைக் கடந்து நெடுந்தீவு துரிதமாக அபிவிருத்தி

### யாழ். ஆயர் பெருமிதம்

''யுத்த காலங்களை கடந்து நெடுந்தீவு துரித அபிவிருத்தி கண்டிருப்பது மகிழ்சியளிக்கிறது - இவ்வாறு யாழ் ஆயர் தெரிவித்திருக்கின்றார்'' யாழ் ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆயர் திருநிலைப்படுத்தலின் பின்னர் நெடுந்தீவிற்கான முதற் பயணத்தை மேற்கொண்டு 78 பேருக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனத்தை வழங்கி உரையாற்றும்போதே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தமது தொடர் உரையில் நீண்ட யுத்தகாலங்களை கடந்து நெடுந்தீவு துரித அபிவிருத்தி கண்டிருப்பது மகிழ்சியளிக்கிறது. பங்கு மக்களால் என் முன்வைக்கப்பட்டகோரிக்கைகளைநடைமுறைப்படுத்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்போம். கச்சதீவு திருவிழாக் காலங்களில் அர்ப்பணிப்புடன், பல பணிகளை மேற்கொள்ளும் நெடுந்தீவு பங்குத்தந்தை மற்றும் பங்குமக்களுக்கு பாராட்டுக்களை தெரிவிக்கிறோம். இளம் குருவான அன்ரனி ஜெயரஞ்சன் அடிகளாரின் பங்கு மேம்பாட்டுப் பணிகளை கண்டு மகிழ்கிறோம். - என்றார்.



ஆயர்த்துவப் பணியின் ஓர் ஆண்டு நிறைவில் யாழ்.மறைமவட்ட ஆயர் மேதகு கலாநிதியஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ், தனது அன்பு வாசகர் நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கிறது.

# ஊர்வம்பு

குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

## எப்ப தீர்வு வந்து, எப்ப பிரச்சினைகள் தீர்ந்து, எப்போது நாம் நிம்மதியா வாழ்வது?

''என்ன மலர்,அம்மாவுக்குப் பதிலாக நீர் கச்சான் விற்க வந்திருக்கிறீர்?'' என்று கேட்டபடி,சந்தியடியில் வந்தமர்ந்தார் ஏரம்பர்.

கூடவே வந்த வாத்தியார் ''இன்றைக்கு இருபத்தேழாம் திகதி.செல்லாச்சி இறந்த மூத்தவனை நினைத்து, வீட்டோடை தான் இருக்கிறவ.மறந்திட்டீரே?'' என்று ஏரம்பருக்கு மட்டும் கேட்கும் குரலில் கிசுகிசுத்தார்.

இவர்களைப் பாராமலே, ''மனம் அழுகிறது என்று வீட்டோடை இருந்தால்,வயிறு பசிக்கும் போது என்ன செய்யிறது? அதுதான் நான் கச்சான் கடகத்தோடை வந்தனான்'' என்றாள் மலர்.

மலரின் குரலில் கவலை, ஏமாற்றம்,விரக்தி எனப் பல உணர்வுகள் தொனித்தன.அதனால் சந்தியடியில் சில நிமிடங்கள் இறுகிய அமைதி நிலவியது. அதனைக் குலைத்தது ''டாண்...டாண்,,,''என்று ஒலித்த கோவில் மணி.

அப்போது ரூபனும் ஜீவனும் வந்து அமர்ந்தனர்.

''எப்பிடி எங்கடை வேலை? ஒருத்தருக்கும் தெரியாமல் விளக்குக் கொளுத்திப் போட்டம்'' என்று பெருமிதத்துடன் சொன்ன ஜீவன் கைத்தொலைபேசிக்குள் மூழ்கினான்.

''எல்லோரும் எங்களை வைச்சு பிழைப்பு நடத்துகினமே தவிர,எங்கடை பிழைப்புக்கு ஒருத்தரும் வழிகாட்டிறதாகக் காணேல்லை'' என்று வெறுப்புடன் சொன்னாள் மலர்.

''கவலைப்படாதை பிள்ளை'' என்று ஆறுதல் சொன்ன ஏரம்பர் ''அது தான் கதைச்சு வென்று தருவினம்தானே.கொஞ்சம் பொறுமையாக இருங்கோவன்.அவையிலை பிழை பிடிச்சுக் கொண்டு இருந்தால், எப்பிடிக் காரியம் நடக்கும்?'' என்று கேட்டார்.

அதைக் கேட்ட ரூபன் ''முள்ளிவாய்க்காலிலை நடந்ததுகளை,அவ்வளவு ஆபத்துகளுக்குள்ளையும் உயிரைப் பணயம் வைச்சு படம் எடுத்தது,தியேட்டர்களிலை போட்டு நூறு நாள்கள் ஓட்டவே? அதோடை அவங்களே எடுத்து தந்ததுகளும் இருக்கு.அதுகளை வைச்சு, போராட்டத்தை சர்வதேச விசாரணை போன்ற அடுத்த கட்டங்களுக்கு நகர்த்தலாமே? நீங்கள் எல்லாத்தையும் விட்டிட்டு, மறுபடி கதைச்சு வெல்லலாம் என்று தொடங்கிறதாலைதான் எங்களுக்கு சந்தேகமும் பயமும் வருகுது.'' என்றான்.

''தம்பி,சூழ்நிலைகளுக்கு ஏற்ற மாதிரி காய் நகர்த்த வேணும். உங்களை மாதிரி 'சுடுகுது மடியைப் பிடி' என்று அவசரப்படக்கூடாது.'' என்றார் ஏரம்பர்.

''வசதியாக வாழ்கிறவை, பிரச்சினை எப்ப வேணும் என்றாலும் தீரட்டும் என்று இருக்கலாம். ஆனால் சாதாரண மக்களுக்குத் தீர்வு வந்து,பிரச்சினைகள் தீர்ந்து,நிம்மதி எப்போது கிடைக்கும் என்ற தவிப்புத் தானே மிச்சமாக இருக்கிறது'' என்றபடி கச்சான் வியாபாரத்தைக் கவனித்தாள் மலர்.

அப்போது தொலைபேசியில் இருந்து தலை நிமிர்ந்த ஜீவன் ''ஏரம்பண்ணை, படிச்ச ஆக்கள்,நல்ல வழிகாட்டுவார்கள் என்று அவர்களை நம்பினால், பள்ளிக்கூடப் பிள்ளைகள் தோத்துப் போற அளவுக்கு, அவைக்குள்ளையே 'நுள்ளுப்பிராண்டி கிள்ளுப்பிராண்டி' விளையாடிக் கொண்டு இருக்கினம். உங்களை மாதிரி ஆக்கள் பலவருசங்கள் பின்னாலை போய்,வீடு,சைக்கிள் என்று பிணைபடுறியள்.இப்படித்தானே ஒரு திட்டமும் இல்லாமல், அந்தக் காலத்தில் தமிழீழத் தீர்மானம் எடுத்தனீங்கள்.'' என்று குத்தலாகச் சொன்னான்.

''தம்பிமார்,சரியாகத் தெரியாமல் கதைக்கக் கூடாது.அது தமிழர் தலைமைகள் ஒன்று சேர்ந்து, 'தமிழீழம் தான் இனி ஒரே தீர்வு'என்று வட்டுக்கோட்டையிலை கூடித் தீர்மானம் போட்டவை. அதைக் குறை சொல்லுற அளவுக்கு உங்களுக்கு அறிவு வளர்ந்திட்டுதோ?'' என்று படபடத்த ஏரம்பருக்கு மூச்சு வாங்கியது.

அதுவரை எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார் தொண்டையைச் செருமியபடி பேசத்தொடங்கினார்.....

''வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலை, மலையகத் தலைவர் தொண்டைமானின் ஒவ்வாமைகள் கவனத்தில் எடுக்கப்படும் - என்று இருக்கே தவிர,அவற்றுக்குத் தீர்வு கண்டு திருத்தியமைக்கப்படவில்லை. ஆனபடியால் அவசரமாக நிறைவேற்றப்பட்டது என்று சொல்லுறதிலை நியாயம் இருக்குத்தானே ஏரம்பர்'' என்றார் வாத்தியார்.

ஏரம்பர் அமைதி காத்தார்.

தொடர்ந்தார் வாத்தியார்....


''தீர்மானத்திலை போராட்டத்துக்கு வரும்படி இளைஞர்களுக்கு அழைப்பு விடப்பட்டது.அதோடை போராட்டச் செயல்திட்டமொன்றை காலதாமதம் இன்றி வடிவமைத்துத் தரும்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுவிடம் கேட்கப்பட்டது. ஆனால் தேர்தலிலை வென்று, பதவிகள் கிடைத்த பிறகு,போராட்ட வடிவம் ஒன்றை உருவாக்க எங்கடை அரசியல்வாதிகள் மனப்பூர்வமாக முயற்சிக்கவேயில்லை. அவை சரியான திட்டத்தை உருவாக்கியிருந்தால், எங்கடை பிள்ளைகள் ஏன் ஆயுத மேந்தி சீரழிந்திருக்கப் போகுதுகள்?'' என்று கேட்டுவிட்டு எல்லோரையும் பார்த்தார் வாத்தியார்.

''முப்பது வருசமாக என்ன செய்தனீங்கள்? என்று கேட்கிறவை, அதுக்கு முந்தியிருந்தவை என்ன செய்தவை என்று கேட்கிறதில்லை'' எரிச்சலுடன் சொன்னாள் மலர்.

''தமிழர் தலைமைகளும் தங்களாலை முடிஞ்சதைச் செய்தவைதானே.சிங்கள அரசாங்கங்கள் ஏமாத்தினா, அவையும் என்னதான் செய்யிறது?'' பரிவுடன் கேட்டார் ஏரம்பர்.

''அப்பிடிப் போடுங்கோ அரிவாளை'' என்ற ஜீவன் ''நானும் தெரியாமல்தான் கேட்கிறன். எல்லாத் தமிழரையும்தானே ஏமாத்திறாங்கள்.ஆனாலும் சாதாரண சனம் சீரழிய,அரசியல்வாதிகள் மட்டும் குடும்பத்தோடை வளமாக வாழுகினம்.அது எப்படி?'' என்று கடுப்புடன் கேட்டான்.

இடையில் புகுந்த வாத்தியார், ''வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி, தமிழீழத்தில் ஒருவர் அளவுக்கு அதிகமாக சொத்து வைச்சிருக்கக் கூடாது என்று இருக்கு. இப்ப இருக்கிற அரசியல்வாதிகளிலை எத்தனை பேர் இதனை இப்போது ஏற்றுக் கொள்ளுவினம்?''என்று சிரித்தபடி கேட்டார்.



''பழைய கதையை விடுங்கோ.இப்ப நடக்கும் என்று நம்பிக்கை வைக்க வேணும்'' என்று சளைக்காமல் கதைத்தார் ஏரம்பர்.

''எப்படி நம்பிக்கை வைக்கிறது?'' என்று கேட்ட ரூபன் தொடர்ந்து சொன்னான்''.

''எங்களுக்கும் பக்கத்து வீட்டுக்காரருக்கும் காணிப் பிரச்சினை என்று உதாரணத்துக்கு எடுப்பம்.மூத்த ஆள்கள் கதைச்சுத் தீர்க்க முடியவில்லை. பிறகு இளம் பொடியள் அடிதடியிலை தீர்க்கப் பார்த்தம். இப்ப பிரச்சினை நீதிமன்றத்துக்குப் போனது.எங்கள் தரப்புக்கு சட்டத்தரணியை நியமிக்கிறம்.அவர் நீதி மன்றத்திலை போய் நின்று -'எனது கட்சிக்காரர், பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு அடிச்சது பிழை தான் -'என்று எங்கள்மீதே குற்றஞ்சாட்டுகிறார்.'ஏன் இப்படிக் கதைக்கிறீங்கள்?' என்று கேட்டால் இந்த மாதிரி மென்வலுவாகத் தான் கதைக்க வேணும் என்று சொல்லுகிறார். இப்படி 'சேம் சைட் கோலடிக்கிற' சட்டத்தணியாலை எங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வரும் என்று எப்படி நாங்கள் நம்புறது?'' என்று கேட்டான் ரூபன்.

''இப்ப இருக்கிற நிலைமையிலை நம்பித்தானே ஆக வேணும். தவறுகள் யார்தான் விடுகிறதில்லை?'' என்று கேட்டார் ஏரம்பர்.

உடனேயே மலர் ''புலிகள் எடுத்த முடிவுகள் தவறாகியிருக்கலாம்; முட்டாள்தனமாகக் கூட இருந்திருக்கலாம். அதனாலை நாங்கள் பெரும் இழப்புகளைச் சந்திச்சிருக்கலாம்.ஆனால் புலிகளின் எந்தவொரு முடிவும், அவையின்ரை சுயநலத்துக்கோ, சொத்துசுகம் சேர்க்கவோ, பதவிகளை அடையவோ எடுக்கப்பட்டது என்று காட்டுங்கோ பார்ப்பம்'' என்று கோபமாகக் கேட்டாள் மலர்.

அவள் முடிக்க,ரூபன் சொன்னான் ''இப்ப எடுக்கிற முடிவுகள், அடுத்த தேர்தலிலை வெல்லுறதுக்காக மட்டும்தானே எடுக்கப்படுகின்றன போல இருக்கு''

''பிள்ளைகள், இப்ப வேலை வேகமாக நடக்கிற மாதிரித்தானே தெரியுது.'' என்றார் ஏரம்பர்.

அதற்கு வெடுக்கென்று பதில் சொன்னான் ரூபன் ''ஓமண்ணை நூற்றியம்பது கிலோமீற்றர் வேகத்திலை தான் போகிறியள்.ஆனால் 'ரிவேர்ஸ் கியரிலை' எல்லே போறியள்''

ரூபனின் கதையால் சந்தியடியில் சிரிப்புப் பரவியது.

''யாரும் எதையும் நக்கலடிக்கலாம் தம்பி. ஆனால் முப்பது வருசங்களாகப் போராடி என்னத்தைக் கண்டோம்'' கேட்டார் ஏரம்பர்.

இதைக்கேட்ட மலரின் வார்த்தைகள் சூடாகவே வந்தன.

''பிரிட்டிஷ் பிரதமர் கமரூனோடை கண்டநிண்டவையெல்லாம் கை குலுக்கினதும்,அவர் குடிசை வீட்டுக்குள்ளையெல்லாம் குனிஞ்சு வளைஞ்சு போனதும் போராட்டத்தின் தாக்கம் தானே?'' என்றாள் அவள்.

''சரியாய்ச் சொன்னாய் பிள்ளை'' என்று பாராட்டிய வாத்தியார் தொடர்ந்தார்....

''எங்கடை பிரச்சினையை சர்வதேச அளவில் கொண்டு போனதிலை, இங்கே இழக்கப்பட்ட ஒவ்வொரு உயிருக்கும் பங்குண்டு.வெளிநாட்டுக்காரரை எங்கடை தலைவர்மார் கண்டு குலாவும் நிலையை உருவாக்கினதிலை,போராட்டத்துக்கு பங்குண்டு. ஆளாளுக்கு வரிசைகட்டி ஐநாசபைக்குப் போய்வருவதில், ஆயுதமேந்திய அத்தனை இயக்கங்களுக்கும், அவற்றில் சேர்ந்து மண்ணாகிய போராளிகளுக்கும், இண்டைக்கு நாங்கள் விலாசத்துக்கு விளக்குக் கொளுத்திக் கொண்டு திரியேக்கை,போராட்டத்தால் கிழிந்த நார்களாகக் கிடக்கிற பாவப்பட்டதுகளுக்கும் பங்கிருக்கு.'' என்று ஆவேசமாகச் சொல்லி முடித்தார் வாத்தியார்.

வாத்தியார் இப்படி உணர்ச்சி வசப்பட்டு எவரும் பார்க்காததால்,எல்லோரும் அமைதியாக இருந்தனர்.

அமைதியைக் குலைத்த ஜீவன் ''குளிரில் கஷ்டப்பட்டு உழைச்சு, இன்றும் இந்த மண்ணையும் மக்களையும் தளராமல் வைச்சிருக்கிற புலம்பெயர்ந்த சமூகம் என்று ஒன்று உருவானதே போராட்டக் காலத்திலைதானே.இல்லாட்டி தேர்தல் நேரத்திலை இவை போய் வறுகிக் கொண்டு வர ஏலுமே?'' என்றான்.

''அதெல்லாம் நடந்து முடிந்த கதை.இனி நடக்கப் போவதைத்தானே பார்க்க வேணும்.'' என்றார் ஏரம்பர்.

''அதை நாங்களும் ஏற்கிறம் ஏரம்பண்ணை... ஆனால் - 'மகிந்தவுக்கு வாய்ப்பாகப் போய்விடும்'- என்ற ஒன்றையே சாட்டாக வைச்சுக் கொண்டு,மக்களுக்கு வெளிப்படையாக எதுவும் சொல்லாமலிருக்கிறதாலைதான் குழப்பம் வருகுது. சட்டிக்குத் தப்பின எங்களை அடுப்புக்குள்ளை விழுத்தி விடுவினமோ? என்று பயமாக இருக்கே.'' என்று சொன்னான் ஜீவன்.

அப்போது பெரு மூச்சு விட்ட வாத்தியார் சொன்னார் ''என்னுடைய சிங்கள நண்பன் சொன்னான்....'தமிழரும். சிங்களவரும் இலங்கை யாருக்குச் சொந்தம் என்று சண்டை போடுகிறம். ஆனால் சண்டை முடிஞ்சு பார்க்கும்போது,இலங்கை எங்களில் எவருக்கும் சொந்தமாக இருக்காது. வெளிநாட்டுக்காரருக்குத் தான் சொந்தமாக இருக்கும்.-'என்றான். இதை எல்லோரும் உணராதவரை, இந்த நாட்டுக்கு விமோசனமே கிடையாது'' என்று சொல்லி முடித்தார்.

அந்த நேரம்,ஜீவனின் கைபேசியில் மணியோசையைத் தொடர்ந்து பாட்டொன்று ஒலித்தது.அனைவரும் எழுந்தனர் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தெறிந்துவிட்டு கச்சான் கடையைக் கட்டினாள் மலர்.

## தொழில்நுட்பக் கதிர்

SAMSUNG

தயாரிப்பு : சந்தவேஸ்

# ஸ்மார்ட் போனை பாதுகாக்க சிறந்த நான்கு வழிகள்



ஹக்கர்கள் இப்போது கணினிகளை மட்டும் குறி வைப்பதில்லை. இப்போது ஸ்மார்ட்போன் மீதும் கவனத்தைத் திருப்பியுள்ளனர். ஸ்மார்ட்போனுக்கான தேவையும், அதன் பயன்பாடும் அதிகரித்து வரும் நிலையில், அவற்றின் மீதான தாக்குதலும் அதிகரித்து வருகின்றது.

எனவே நாம் பயன்படுத்தும் ஸ்மார்ட் போனை எப்படி பாதுகாப்பாக வைத்திருப்பது? முக்கியமான 4 வழிமுறைகளைப் பின்பற்றினால் எமது போனை பாதுகாப்பாக வைத்திருக்க முடியம்.

### இணையத்தளம் ஒன்றைக் 'கிளிக்'செய்யும் முன்னர்

இணைப்புகளைப் பார்த்தவுடன் கிளிக் செய்வது இயல்புதான். குறுஞ்செய்திகள், ஃபேஸ்புக் செய்தி, ஈமெயில்கள் எனப் பெரும்பாலானவற்றில் கிளிக் செய்து பார்க்கக்கூடிய இணைப்புகள் இருக்கின்றன. ஆனால் இவை பயனுள்ள இணையதளங்களுக்குத்தான் அழைத்துச் செல்லும் என்றில்லை. பல நேரங்களில் இணைய விஷமிகள் விரித்த வலையாகவும் இவை இருக்கலாம்.

இணைப்புகள் மூலம் கொக்கி போட்டு இழுத்து, போலியான இணையதளங்களுக்கு அழைத்துச் சென்று, பயனாளிகளின் பாஸ்வேர்ட் மற்றும் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்துக்கொள்ளும் அபாயம் அதிகம் உள்ளது. அல்லது, இணைப்புகளை கிளிக் செய்வது மூலம் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மால்வேர்கள் உள்ளே புக நம்மை அறியாமல் அனுமதித்துவிடலாம். எனவே, எதையும் கிளிக் செய்யும் முன் நன்றாக யோசிக்கவும். இணைப்புகள் சந்தேகத்திற்கு உரியதாக இருந்தால் கிளிக் செய்யாமல் இருப்பது நல்லது.

### செயலிகளில் கவனம்



(Apps)

புதுப்புதுச் செயலிகள் அறிமுகமாகிக் கொண்டிருக்கும்போது நமக்கும் புதிய செயலிகள் தேவைப்படவே செய்கின்றன. ஆனால் எந்தச் செயலியையும் பார்த்தவுடன் தரவிறக்கம் செய்துவிட வேண்டாம். முதலில் அந்தச் செயலி பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்.




### அப்டேட்

நீங்கள் பயன்படுத்தும் போனின் இயங்கு தளம் மற்றும் அதில் உள்ள செயலிகள் அப்டேட் செய்யப்படுவதை உறுதி செய்துகொள்ளுங்கள். பெரும்பாலான அப்டேட்கள் குறைகளைக் கொண்டிருக்கும். பாதுகாப்புக்கு இது மிகவும் அவசியமான விஷயம்.

### இணைய துண்டிப்பு

நீங்கள் இணைய வசதியைப் பயன்படுத்தினாலும கூட 24 மணி நேரமும் இணையத்திலேயே இருக்க வேண்டிய அவசியமில்லை. எனவே பயன்பாடு முடிந்ததும், உடனடியாக இணைய இணைப்பைத் துண்டித்துவிட்டு, மீண்டும் தேவைப்படும்போது இயக்கிக் கொள்ளவும்.

அதேபோல இணையம் மூலம் பொருள்களை வாங்கும் பழக்கம் இருந்தால், பொருள்களை வாங்கி விட்டு அந்த செயலியில் இருந்து வெளியேறவும். அதாவது லொக் அவுட் செய்து கொள்ளவும்.

# இதுவரை இல்லாத புதிய வடிவில் அறிமுகமாகிறது ஐபோன் 8!

செல்போன் தயாரிப்பில் முன்னணி வகிக்கும் ஆப்பிள் நிறுவனம் ஐபோன் 8 மொடலை வித்தியாசமான பிளிப் டைப் வடிவில் வெளியிடப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதாவது, 90 களில் மோட்டரோலா செல்போன்நிறுவனம் clamshell எனப்படும் பிளிப் டைப் மொடல் செல்போனை கொண்டு வந்தது. பிளிப் மொடல்கள் முன்னர் புகழ் பெற்றிருந்தாலும் பின்னர் அது மெல்ல மெல்ல காணாமல் போனது.

இந்நிலையில், பிளிப் மாடலில் போன் தயாரிக்க ஐபோன் நிறுவனம் இந்த மாத தொடக்கத்தில் காப்புரிமை வாங்கியுள்ளது.

இந்த பிளிப் வளையும் தன்மைகொண்ட செல்போன்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஐபோன் கடந்த 2013 ஆண்டிலிருந்தே ஈடுபட்டு வருகிறது.

அந்த காப்புரிமையில், பின்னாளில் வரவிருக்கும் ஐபோன்கள் கண்ணாடி, பீங்கான், பைபர் மற்றும் அலுமினியம் கொண்டு செய்யப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வரவிருக்கும் ஐபோன் 8 இல் வயர்லஸ் சார்ஜர் அம்சமும் இடம்பெறும் எனத் தெரிகின்றது.

இது குறித்து கிடைக்கப் பெற்றத் தகவலின் படி வரும் 2017 ஆம் வருடம் ஐபோன் நிறுவனத்துக்கு பத்தாவது ஆண்டு விழாவாகும். இந்த சிறந்த தருணத்தில் இதுவரை



ஐபோனில் வராத புதிய விடயத்தை செய்ய முடிவு செய்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதனிடையில், அடுத்த வருடம் வெளிவரவிருப்பதாக சொல்லப்படும் ஐபோன் 7S மொடல்கள் நிறுத்தப்பட்டு, ஐபோன் 8 இல் அப்பிள் நிறுவனம் தனது முழு கவனத்தையும் செலுத்தும் என்றும் கூறப்படுகின்றது.

# பழைய புகைப்படங்களை புதிதாக மாற்றக் கூடிய அப் அறிமுகம்

PhotoScan by Google Photos

டிஜிட்டல் கமராக்கள் இல்லாத காலங்களில் எடுக்கப்பட்ட மங்கலான புகைப்படங்களை டிஜிட்டல் வடிவத்துக்கு மாற்றக்கூடிய புதிய அப் (App) ஒன்றை தற்போது கூகுள் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.


இந்த அப் ஆனது ஆண்ரயிட் மற்றும் ஐபோன்களுக்கு மட்டுமே பயன்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பழைய புகைப்படங்களை ஒருசில நொடிகளில் டிஜிட்டல் கமாராக்களில் எடுக்கப்பட்ட புகைப்படம் போல மாற்றித்தரக் கூடிய அப் (App) தான் போட்டோ ஸ்கேன் (Photo Scan). இதன் மூலம் பழைய புகைப்படங்களை புதிதாக மாற்ற முடியும். அதாவது -

முதலில் போட்டோஸ்கேன் அப்-ஐ டவுன்லோட் செய்து இன்ரோல் செய்து கொள்ளுங்கள். பின்னர் உங்கள் பழைய புகைப்படத்தை போட்டோஸ்கேனுக்குள் எடுத்துக் கொள்ளுங்கள். போட்டோ ஸ்கேன் அந்தப் புகைப்படத்தை சிறிதாக்கி அதில் உள்ள மங்கலான குறைகள் அனைத்தையும் கண்டறியும். பின்னர் தானியங்கியாக போட்டோ ஸ்கேன் அப் அதில் உள்ள குறைகளை நீக்கி டிஜிட்டலாக மாற்றி விடும். தேவைப்பட்டால் புகைப்படத்தில் கிராபிக் கூட செய்து கொள்ளும் வசதிகளும் காணப்படுகின்றன.



# ஓரிரு செக்கனில் உங்கள் மொபைல் போன்களைச் சார்ஜ் செய்யலாம்!



ஸ்மார்ட் கைபேசி பாவனையாளர்களுக்கு பெரும் தலைவலியாக இருப்பது மின்கலத்தின் சார்ஜ் ஆனது விரைவாக குறைவடைவதாகும்.

இதேவேளை அம் மின்கலங்களைமீண்டும் சார்ஜ் செய்வதற்கு நீண்ட நேரம் எடுக்கும்.

இப் பிரச்சினைக்கு தீர்வு தரும் வகையில் புதிய தொழில்நுட்பம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அதாவது மின்கலங்களுக்கு பதிலாக சுப்பர் கொள்ளளவி (Super Capacitors) எனும் இலத்திரனியல் சாதனத்தை பயன்படுத்துவதாகும்.

இதுவரை உள்ள கொள்ளளவிகள் அதிக அளவில் மின் சக்தியை சேமித்து வைத்திருப்பதில்லை. ஆனாலும் அதிக வினைத்திறனுடன் மின்சக்தியை வெளிவிடக்கூடியன.

எனினும் புதிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அதிகளவு மின் சக்தியை சேமித்து வைத்திருக்கக்கூடிய சுப்பர் கொள்ளளவிகளை உருவாக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஓரிரு செக்கன்களில் அக் கொள்ளளவிகளை சார்ஜ் செய்ய முடிவதுடன், ஒரு வார காலத்திற்கு தொடர்ச்சியாக பாவிக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இத் தகவலை Central Florida பல்கலைக் கழக ஆராய்ச்சியாளரான Nitin Choudhary என்பவர் தெரிவித்துள்ளார்.

# கல்லறைகளும் இல்லை... கனவுகளும் மறக்கவில்லை...!

சேரல்:- அன்பு தமிழ் பேசும் மக்கள்.
தாயகம்/புலம்பெயர் தேசங்கள்.

அனுப்பல்:- ''கல்லறைகளில் இருந்து கிளறி எறியப்பட்டவர்கள்''
'காபெற்' போடப்பட்ட மடு வீதி, மடு.

அன்பின் உறவுகளே...!

தாயகத்திலும், புலத்திலும் அண்ணாவால் கட்டமைக்கப்பட்ட அமைப்புகள் பல தடம் புரண்டு பணத்துக்காகவும் , பதவிக்காகவும் சோரம் போய் இருப்பதாக 'காபெற்' போடப்பட்ட மடு வீதியில் பயணம் செய்த சைமன் அண்ணையும் நியாஸும் கதைக்கும் போது கேட்டது. மிகவும் வேதனையாக இருந்தது.

அத்தோடு பல திடீர் பணக்காரர்கள் உருவாகி கோவில்கள், மால்கள், கட்டுவதாகவும் குளிரிலும், வெய்யிலிலும் வியர்வை சிந்தி உழைத்த காசு போராளிகளுக்கும்,பாதிக்கப்பட்ட மக்களுக்கும் செல்லாமல் பலரது தொந்தி வளர்ப்புக்கு உதவுவதாகவும். லண்டனில் இருந்து மன்னார் போன சிவம் அண்ணை கதைத்ததும் கேட்டோம். பலரும் அந்தநாள் எங்கள் தோழர்களையும் இந்நாள் முன்னாள் போராளிகளையும் மறந்து விட்டார்களாம்.

சமராடியவர்கள் சரணாகதி அடையும்போது எம் மக்கள் போராளிகளைக் கைவிட மாட்டார்கள் என்று நினைத்தே தலைவன் ஆணையிட்டானாம்... ! தெரியவில்லை. ஆனாலும் பெரும் நம்பிக்கை இருந்ததாக அறியக்கிடைத்தது. ஆனால் எம் தோழர், தோழிகளது வாழ்வாதாரத்தை நிமிர்த்த ஒரு துரும்பையும் அந்த அமைப்புக்களோ அல்லது பினாமிகளோ தூக்கிப்போடவில்லையாம். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சலுகைகளை வைத்து வாழ முடியாதே!

ஆனால், எங்களை நினைவுகூரும் இந்த நாள்களில் பெருத்த பொருள் செலவில் விழாக்களாகக் கொண்டாட முற்படுகின்றனராம் சிலர். சமூக வலைத் தளங்களில் தங்களைப் பெரும் விசுவாசிகளாக, வீரர்களாகக் காட்டிக் கொள்வதாகவும், எங்கள் படங்களை எண்ணிக்கை தவறாமல் வைத்து அடுக்கி வைத்துத் தீபமேற்ற வேண்டும் என முத்தாய்ப்பாய் கார்த்திகைப் பூவுடன் முகப்புத்தக நிலைபடத்தையும் மாற்றுவதாக அடிக்கடி மடு 'காபெற்' வீதியில் மீன் கொண்டு போகும் சூசையண்ணை புறுபுறுத்துக் கொண்டு போனார்.

எங்களோடு களமாடிய கலையரசியின் பிள்ளை பாலுக்காகக் குரல் எடுத்து அழுகின்றதாம். எங்களோடு வேலை செய்த கவியரசனின் விழுப்புண்ணில் இருந்து இப்போதும் சீழ் வடிகின்றதாம், வேவு புலியாய் இருந்த ஆதியின் இரண்டு கால்களும் இல்லையாம், பொறுப்பாளராய் இருந்த குணம் அண்ணையை காணல்லையாம் அவர் மனைவியும் பிள்ளைகளும் பெரும் வறுமையால் சாகுதுகளாம்.

மலையரசி அக்கா இடைக்கிடை கொழும்பு, அநுராதபுரம் என்று போறாவாம் என்று எங்களோடு பாலமோட்டை சண்டையில நிண்ட இப்ப கையூட்டு வாங்கிற'' நியுமன்'' விக்கிரமசிங்கேக்கு அடிக்கடி சொல்லிக் கொண்டு வலையன் கட்டு காட்டுப் பக்கமாக அடிக்கடி போய்வாறான்.

உங்களின் கையறு நிலை என்பது எங்களை நினைவில் சுமப்பதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியாதா..? என்பதாகவே தாயகத்திலும் புலத்திலும் கேள்வியாக உள்ளது. மிக அமைதியாக உங்கள் மனங்களில் உறங்கிக் கொண்டிருக்கும் உயிர்ப்புக்களை எப்போது துயில் எழுப்பப்போகின்றீர்கள்..?

## கனவுகளுடன் உறங்கிக் கொண்டிருக்கிறோம்

மீண்டும் ஒருமுறை தாயகத்தில் எம் நினைவுகளைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றீர்கள். நாங்கள் கனவுகளுடனே இன்னமும் உறங்கிக் கொண்டிருக்கின்றோம். எங்கள் கண்கள் விடியப் போகும் ஒரு புது நாள் காலைக்காக மேன்மை தவம் செய்து கொண்டிருக்கின்றன. அண்ணன் ஒருமுறை கூறியதை ஞாபகப்படுத்தலாம் என நினைக்கிறோம்.

''மனிதர்களின் இருப்பை விட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது...''

போராட்ட வரலாற்றை எப்படி நீங்கள் சுமந்து செல்கின்றீர்கள்.? எமது கனவுகளை எப்படி செயற்படு தன்மைக்குள் வைத்து இருக்கின்றீர்கள்? என்பது எல்லாம் தொக்கி நிற்கின்ற கேள்வியாகவே இருக்கின்றது எம் முன். உங்களைப்போல் புகழ்மிக்க கலாசார பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் அல்லர் நாங்கள்.

நாங்கள் எந்த நடிகரையும் ''தலைவராக'' கொண்டாடியமை இல்லை. ''வொட்காவும், பிளக் லேபலும்'' அடித்து வேலைக் களைப்பு போக்கியவர்கள் நாங்கள் அல்லர்..ஆடம்பர திருமணங்கள் பல லட்சங்களில் செய்யவில்லை நாங்கள். எங்கள் பெண் பிள்ளைகள் பூப்படைந்த "சாமத்திய சடங்குகளை'' மிகையாக கொண்டாடவில்லை நாங்கள்.


## மரணத்திலும் கண்ணீர் சிந்த வைக்கின்றீர்கள்

எங்களிடம் ஒரு தேசம் இருந்தபோது உங்களுக்காக நாம் மண் மீது தவம் இருந்தோம். இன்று வெறும் பகட்டுக்காகவும், தனிப்பட்ட சுயநல உணர்வுக்காகவும் நீங்கள் எங்களை பணத்தின் மீது அல்லவா தவம் இருக்க வைத்துவிட்டீர்கள். இன்று மண் இழந்தவர்களாக மரணத்திலும் எங்களைக் கண்ணீர் சிந்த வைக்கின்றீர்கள்.

ஓயாத அலைகளாக் பொங்கிய எங்களின் ஒற்றுமை படைபலம் எங்கே? நாங்கள் கண்ட கனவுகளை மெல்ல மறந்து போய்க் கொண்டிருக்கின்றீர்களோ என்ற அச்சம் மெல்ல எம்மை 'காபெற்' றோட்டின் வெக்கையிலும் புழுங்க வைக்கின்றது. சில வேளைகளில் விடுதலை உணர்வை மிகையாகக் கொண்ட நீங்கள் சிலர் இதனைப் பரிகாசம் செய்யலாம். எங்கள் கள அனுபவங்கள் இதனை கட்டியும் கூறுவது போலவே உள்ளது.

தம்பிகளே! தங்கைகளே! உங்களையும் சிங்கத்தின் கொடும்பசிக்கும், அது விரித்து வைத்து இருக்கும் சதி வலைக்குள் உங்களையும் நாங்கள் இழந்து விட விரும்பி நாங்கள் கல்லறைகளை ஏற்கவில்லை. நிதானமாகச் சிந்தியுங்கள்.

செயற்படும் முறை பற்றிய பிரக்ஞை உள்ளவர்களாக இருங்கள். மாபெரும் தலைமை தத்துவ இடைவெளி வந்துவிட்டதாக புலம்பாதீர்கள். உங்களை தலைவர்களாக கட்டமைத்துக் கொள்ளுங்கள்.



ஆனால் உண்மைகள் கேள்விகள் பல சந்தர்பங்களில் உயிர் விடைகளைக் கொடுத்தே உருவாக்கம் கொள்கின்றன. எமது அன்பு அக்காக்களே, அண்ணண்மாரே , தம்பிகளே, தங்கைகளே, எமது இந்த மன வேதனை உங்களைச் சென்று சேர்ந்து விடும் என ஒரு செல்லப்பிராணியை கொன்றவர்கள் போன்ற குற்ற உணர்வுடன் எழுதுகின்றேன் இம் மடலை.

ஏன் எங்கள் தோழர்களுக்கும், தோழிகளுக்கும் சின்ன உதவியை செய்ய ஏன் யோசிக்கின்றீர்கள்? எங்களின் நினைவுகளை உங்களின் மனங்களில் வைத்து மலர் சொரியுங்கள் புனிதமானதாக இருக்கட்டும் உங்கள் நினைவு மீட்டல்கள். உங்கள் மனங்களில் தானே நாம் வாழ ஆசைப்படுகின்றோம். எங்களை வியாபார பண்டங்கள் ஆக்காதீர்கள்.

## அரசியல்வாதிகளே! ஏமாற்றாதீர்கள்

அவசரப்படும் அரசியல் வாதிகளே எங்களை மகிழ்விப்பதற்காக சகட்டுமேனிக்கு தீபங்கள் ஏற்ற வேண்டாம். எமது தாயகத்தில் புரையோடிப்போய் இருக்கின்ற இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை நோக்கி பயணியுங்கள். நாங்கள் வாழ்ந்த கல்லறை பூ மிக்கு விளக்கேற்றி எங்களை நினைவுகூருவதாக பாசாங்கு செய்யாதீர்கள். நாங்கள் எச்சமாக விட்டுச் சென்ற எமதருமை பஞ்சப்பராபரியாக வாழும் தோழர், தோழிகள் பற்றியும், குருதிவழிந்தோடிய சாலைகள் பற்றியும், பற்றி எரியும் வயிறுகள் பற்றியும், முகாம்களில் வாழும் மக்கள் பற்றியும், திணிக்கப்படும் கொடூர யுத்தங்கள் பற்றியும், மனித அவலங்கள் பற்றியும் உரையாடுங்கள்.

எங்கள் வாழ்வின் அடையாளத்தைத் தேடும் அதிகாரத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் புதிய வழிமுறைகளை எதிர்ப்பு வடிவங்களை - கண்டடைய ஒற்றுமையாகப் போங்கள் மறந்து உரையாடுங்கள். அத்துடன் குழாயடிச் சண்டையை ஏற்படுத்துவது போன்று பொருத்தமற்ற விவாதங்களையும் கருத்து உருவாக்கங்களையும் ஏற்படுத்துவதில் குறியாகக் கொண்டு செயற்படுவதைத் தவிருங்கள்.

தமிழினத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் செயற்பாடுகள் மீது விதண்டாவாத கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருப்பதால்தான் ஆபத்துக்களும் தமிழ் மக்களிடம் நம்பிக்கையீனமும் ஒற்றுமைக்குலைவும் ஏற்பட வாய்ப்புள்ளது.

## இளந்தலைமுறையை நல்வழிப்படுத்துங்கள்

அத்துடன் தலைவர் அவர்களது சிந்தனைகளையும் ஆளுமையான கருத்துக்களையும் வழி பற்றி செயல்வழி செயற்பட சிந்திக்கும் தன்மையுள்ள மிகப்பெரிய இளைஞர் சக்தியும், தமிழ்த் தேசியத்தின்பால் உழைக்கக்கூடிய புத்திஜீவிகளும், மக்களும், உணர்வாளர்களும் ஒன்றுபட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்க அறிவுபூர்வமாக உதவிபுரியுங்கள். தாயகத்திலும், புலத்திலும் சீர்கெட்டுப் போகின்ற எமது இளந்தலைமுறையை வழிப்படுத்தும் பொறிமுறைகளைக் கண்டடையுங்கள்.

அன்பான எமதருமை பெற்றோர்களே! உங்கள் கண்களில் கண்ணீர் வற்றிப் போய் இருக்கின்றமை அறியக் கிடைத்தோம். உங்கள் மௌன மொழிகளின் ஊடாக எங்கள் சகோதரர்களை சமூக போராளிகளாக உருவாக்க சபதம் எடுங்கள்.

நீங்கள் அனுபவித்த தாங்கொணா துயரத்தை நினைவில் வைத்திருப்பவர்களாக வளர்த்து எடுங்கள். எம் மண்கொண்ட சாபங்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைத் தேடுபவர்களாக்குங்கள்.ஆயுதப் போராட்டம் என்பது அண்ணையாலே சாத்தியம் அற்றதாய் போய்விட்ட நிலையில் பாழாய்ப் போன அரசியல்வாதிகளின் பசப்பு வார்த்தைகளையும், தலைமைத்துவத்தையும், உணர்வு ஊட்டல்களையும் நம்பி மீண்டும் எம் தம்பிகளையும், தங்கைகளையும் குருதி சிந்த வைத்துவிடாதீர்கள். ஒரு சிலரின் இருப்புக்காக குருத்துக்களை அநியாயமாகப் பறிகொடுத்து விடாதீர்கள்.

அன்பான புலம் பெயர்ந்து தாயகம் விட்டு குருதியை வியர்வையாகச் சிந்தும், ஆபத்து வேளையில் கை கொடுத்த சொந்தங்களே! உங்களில் சிலர் தனிப்பட்ட ரீதியாகவும், குழுக்களாகவும் உங்களால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டிருப்பதாக அருணாசலம் அண்ணை கூறக் கேள்விப் பட்டோம். மிக்க நன்றிகள். எங்கள் தேசத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பை அண்ணை 2006 ஆண்டே உங்களிடம் ஒப்படைத்து விட்டார். உங்கள் வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுபடுங்கள்.

பலர் பச்சோந்திகளினதும் கூலிகளதும், பொறுப்பற்ற செயல்கள் கண்டு மௌனிகளாக இருக்கின்றார்கள். நீங்கள் பேசுங்கள் பல உண்மைகள் தெரியட்டும். எங்கள் கல்லறைகளுக்குக் கூட பாதுகாப்பு அற்ற நாட்டில் உயிரோடு உள்ள எங்கள் பெற்றார்கள், சகோதரர்கள், உறவுகள் உயிர் வாழ வேண்டும். உங்கள் சமயோசிதம் அற்ற உணர்ச்சியை ஊட்டும் வெற்றுக் கதையாடல்கள் அவர்களை அழித்து விடக்கூடும், குருதி சிந்த வைத்து விடும் என்பதில் விழிப்பாய் இருங்கள்.

உங்கள் அனைவரையும் மலரும் எம் தேசத்தில் ஒரு வசந்த காலத்து காலையில் காண்பதற்கு ஆவலாக உள்ளோம். உங்கள் அனைவரிலும் நம்பிக்கை வைத்து விடைபெறுகின்றோம்.

**இங்ஙனம்**

**கல்லறையில் இருந்து கிளறி எறியப்பட்ட மடு வீதியின் 'காபெற்'றுக்கு கீழ் உறங்கும் உங்கள் நலன் விரும்பும் உறவுகள்...**



# வார ராசி பலன்கள்

27.11.2016 முதல் – 03.12.2016 வரை

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

**மேஷம்** :அசுவினி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம்



செவ்வாய் பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 8 இல் புதனும், 9இல் சுக்கிரனும், 10இல் செவ்வாயும், 11 இல் கேதுவும் உலவுவது சிறப்பு. எதிர்ப்புகள் விலகும். வாழ்வில் வளம் பெருகும். வியாபாரத்தில் முன்னேற்றம் காண வாய்ப்புக் கிடைக்கும். செயலில் வேகம் கூடும். 5 இல் ராகு, 6இல் குரு, 8இல் சூரியன்: சனி ஆகியோர் உலவுவதால் பிள்ளைகள் நலம் பாதிக்கும். தந்தைக்கும் உங்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வயிறு, மறைமுக உறுப்புகள் சம்பந்தமான உபாதைகள் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை.

**ரிஷபம்** :கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதங்கள்



சுக்கிர பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 5 இல் குரு, 8 இல் சுக்கிரன், 10 இல் கேது உலவுவது விசேஷடம். தெய்வானுக்கிரகம் உண்டாகும். மந்திர, தந்திர, யந்திர சாஸ்திரங்களில் ஈடுபாடு கூடும். எதிர்ப்புக்கள் கட்டுக்குள் அடங்கியே இருக்கும்கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். உத்தியோகத்தர்களது நோக்கம் நிறைவேறும். மாணவர்களது நிலை உயரும். உடன் பிறந்தவர்கள் ஓரளவு உதவுவார்கள். பெற்றோர் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தந்தைவழி உறவினர்களால் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்** :மிருகசீரிம் 3,4ஆம் பாதங்கள்,திருவாதிரை, புனாபுசம் 1, 2, 3ஆம் பாதங்கள்



புதபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 3 இல் ராகு, 6 இல் சூரியன், புதன்,சனி ஆகியோர் உலவுவதால் நண்பர்களும் உறவினர்களும் உதவுவார்கள். வேற்று மொழி, மத இனக்காரர்களால் அனுகூலம் உண்டாகும். முக்கியஸ்தர்களின் சந்திப்பு நிகழும்.கலைஞர்கள், பெண்கள் பெறுப்புடன் செயற்படுவது நல்லது. உடன் பிறந்தவாகளால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படும். தந்தை நலனில் கவனம் செலுத்தவும். மறைமுக நோய் நொடி உபாதைகள் ஏற்படும். வாரப் பின்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்** : புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்



சந்திர பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

கோசாரப்படி கிரகநிலை அனுகூலமாக இல்லை. குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். வீண் வம்பு, வழக்குகளைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் பொறுப்புடன் செயற்பட்டால் சாவிலிருந்து தப்பலாம். புதிய முயற்சிகளை பிற்போடவும். உடன் பணிபுரிபவர்களிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. வாழ்க்கைத் துணைவியாலும், பெண்களாலும் சங்கடம் ஏற்படும் மதிப்பு குறையும். நண்பர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். கடன் விவகாரங்களில் யாருக்கும் கையெழுத்திட வேண்டாம்.

**சிம்மம்** : மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்



சூரிய பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 2 இல் குரு, 4 இல் புதன், 5 இல் சுக்கிரன், 6 இல் செவ்வாய் உலவுவது நல்லது. பொருளாதார நிலை உயரும். பேச்சில் திறமை கூடும். வியாபாரத்தில் அபிவிருத்தி காணலாம். போட்டி பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். வழக்கில் நல்ல தீர்ப்பை எதிர்பார்க்கலாம். மனதில் துணிவு பிறக்கும். தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள். கலைஞர்களுக்கு வெற்றிகள் குவியும். உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், ஆன்மீகவாதிகள், விஞ்ஞானிகள் வளர்ச்சி காண்பார்கள்.

**கன்னி** : உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2ஆம் பாதங்கள்



புத பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 3 இல் சூரியன்:சனி, 4 இல் சுக்கிரன், 6இல் கேது உலவுவது நல்லது. அலைச்சல் வீண்போகாது. இடமாற்றம், நிலைமாற்றம் ஏற்படும். குடும்பத்தில் அமைதி காணலாம். நிர்வாகத் திறமை கூடும். சமுதாய நல முன்னேற்றப் பணியாளர்கள் நற்பெயருக்குப் பாத்திரமா வார்கள். மாணவர்களுக்கு மந்த நிலை விலகும். செய்து வரும் தொழில் விருத்தி அடையும். புதிய பதவி, பட்டங்கள் தேடிவரும். சொத்துகள் சேரும்.

**துலாம்** : சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள்



சுக்கிர பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 2 இல் புதன், 3 இல் சுக்கிரன், 11 இல் ராகு உலவுவது சிறப்பு. வார தொடக்கத்தில் செலவுகள் அதிகரிக்கும். சிக்கனம் தேவை. குருவுடன் சந்திரன் சேர்ந்திருப்பதால் பெரும்பாலும் சுபச்செலவுகளே ஏற்படும். வார நடுப்பகுதியிலிருந்து நல்ல திருப்பம் உண்டாகும். முக்கியமான காரியங்கள் நிறைவேறும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். வாரப் பின்பகுதியில் பொருளாதார நிலை உயரும். முக்கியஸ்தர்கள் உதவுவார்கள். சூரியனும் சனியும் ஒன்று கூடி 2இல் இருப்பதால் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும்.

**விருச்சிகம்** : விசாகம் 4ஆம் பாதம், அனுசம், கேட்டை



செவ்வாய் பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 2 இல் சுக்கிரன், 3 இல் செவ்வாய். 10 இல் ராகு, 11 இல் குரு உலவுவது சிறப்பு. முக்கியமான சுண்ணங்கள் வார முற்பகுதியில் நிறைவேறும். கொடுக்கல்-வாங்கல் லாபம் தரும். கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புகள் கூடிவரும். தெய்வ தரிசனம், சாது தாசனம் கிடைக்கும். எதிர்ப்புகள் விலகும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். வார நடுப்பகுதியில் சுபச் செலவுகள் சற்று கூடும். வாரக் கடைசியில் அலைச்சலும் உழைப்பும் அதிகமாகும். உஷ்ணாதிக்கத்தால் பாதிப்பு நேரலாம். மாணவர்களது நிலை உயரும்.

**தனுசு** : மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்



குரு பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ஜன்ம ராசியில் சுக்கிரனும், 3 இல் கேதுவும் உலவுவது சிறப்பு.எடுத்த காரியத்தில் எப்பாடுபட்டாவது வெற்றி பெறுவீர்கள். நல்லவர்களின் தொடர்பு நலம் கூட்டும். நல்லவர் அல்லாதவர்களை விட்டு விலகுவது அவசியம். ஆன்மீகவாதிகள், அறநிலையப் பணியாளர்களுக்கு அனுகூலமான போக்கு நிலவும். வாரப்பின் பகுதியில் செலவுகள் அதிகமாகும். இடமாற்றம் நிலைமாற்றம் ஏற்படும். செய்து வரும் தொழிலில் அதிக கவனம் தேவை. கண், கால் சம்பந்தமான உபாதைகள் ஏற்படும்.

**மகரம்** : உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்



சனி பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 9 இல் குரு, 11 இல் சூரியன்:புதனும்:சனி, 12 இல் சுக்கிரன் உலவுவதால் தொலைதூரத் தொடர்பு பயன்படும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளச் சந்தாப்பம் உருவாகும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். புதிய பதவி பட்டங்கள் கிடைக்கும். உழைப்பு வீண்போகாது. பொதுப் பணிகளில் ஆர்வம் கூடும். வாரப் பின்பகுதியில் பொருளாதார நிலை உயரும். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும்.

**கும்பம்** : அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், புரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்



சனி பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 10 இல் சூரியன்.புதன்.சனியும், 11 இல் சுக்கிரனும் உலவுவது நல்லது. புதிய பதவிகளும் பட்டங்களும் கிடைக்கும். செய்து வரும் தொழிலில் வளர்ச்சி காணலாம். நிர்வாகத் திறமை பளிச்சிடும். வியாபாரிகளுக்கு லாபம் கூடும். தொழிலாளர்கள், விவசாயிகள் அனுசூலமான போக்கைக் காண்பார்கள். கலைத்துறையினருக்கு வெற்றிகள் குவியும். உடன் பிறந்தவர்கள், மக்களால் சில இடர்ப்பாடுகளும் செலவுகளும் மனச் சலனமும் உண்டாகும். வாரப் பின்பகுதியில் முக்கியமான எண்ணங்கள் ஈடேறும்.

**மீனம்** : புரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி




குரு பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 6 இல் ராகு, 7 இல் குரு, 11 இல் செவ்வாய் உலவுவது சிறப்பு. வாழ்வில் முன்னேற்றம் காண நல்ல வாய்ப்புகள் கூடிவரும். நண்பர்கள் உதவு வார்கள். எதிரிகள் பயந்து ஒழிவார்கள். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், ஆன்மீகவாதிகள், மருத்துவர்கள், விஞ்ஞா னிகள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு செழிப்புக்கூடும். புதிய சொத்துகள் சேரும். வாரப் பின்பகுதியில் சூரியன், சனி, சந்திரன் ஆகியோர் ஒன்று கூடுவதால் தந்தை நலனில் கவனம் தேவை.

# வேற்றுக்கிரகவாசிகளுடன் அமெ. நேரடித்தொடர்பு

## ஆதாரத்தை அம்பலப்படுத்தினார் ஸ்னோடன்



அமெரிக்காவின் பல இரகசியங்களை அம்பலப்படுத்தியதன் மூலம் பல மர்மங்கள் வெளி உலகுக்குத் தெரிய வருவதற்கு எட் வட் ஸ்னோடன் காரணமாக இருந்தார்.

அமெரிக்காவின் மத்திய புல னாய்வுத் துறை அதி காரியாகச் செயற்பட்ட எட் வட் ஸ்னோடன், அந்த நாட்டின் பல இரகசியங்களை அம்பலப்படுத்தியிருந்தார்.

எனினும்அவர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக இன்னொரு நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளார். இந்த நிலையில் அமெரிக்கா தொடர்பான மற்றுமொரு தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பில் அமெரிக்காவால் பாதுகாக்கப்பட்ட வந்த இரகசியங்கள் பல வெளியிடப்பட்டுள்ளன.

அமெரிக்கா மற்றும் பல உலக நாடுகள் வேற்றுக் கிரகவாசிகள் என்று கருதப்படும் குழுக்களுடன் வைத்துள்ள தொடர்பு தொடர்பில் அவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதில் விசேடமான ஒன்றாக 1964ஆம் ஆண்டு அமெரிக்கா வால் பிடிக்கப்பட்ட வேற்றுக்கிரக வாசி ஒன்று விசாரணைக்கு உட் படுத்தப்பட்டமை தொடர்பிலான காணொலி ஒன்று எட்வட் ஸ்னோடனால் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் வேற்றுக்கிரக வாசியைப் போன்று காணப்படும் அந்த உயிரினம் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டபோது ‘தான் பூமியில் வாழ்பவன்’ என்று தெரிவித்துள்ளது. எனினும் தான் நிகழ்காலத்தில் வாழ்பவன் அல்லன் எதிர்காலத்தில் வாழப்போகின்றவன் என்று குறிப்பிட்டுள்ளது.

அந்தக்காணொலி 1964ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். தற்போது பூமியில் வாழும் மனிதகள் அணு ஆயுதங்களால் எதிர்வரும் 100 (அப்படி என்றால் 2064ஆண்டுக்கு முன் னர்) ஆண்டுகளுக்குள் அழிந்து விடுவார்கள் என்று அந்த உயிரினம் தெரிவித்துள்ளது. குறைந்த அளவிலான சிலர் மாத்திரமே எஞ்சுவர் என்று குறிப்பிட்டுள்ளது. இந்த அணுவாயுத அழிவுக்குக் காரணம் பூமியில் உள்ள அரசியல் மற்றும் மதமே நோக்கம் என்று வேற்றுக் கிரகவாசி உயிரினம் தெரிவித் துள்ளது. தான் எதிர்காலத்தில் இருந்து இறந்த காலத்தைக் கண்காணிப்பதற்கு மாத்திரமே வந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

எதிர்காலத்தில் மனிதர்கள் மரணத்தை வெற்றி கொள்வர்களா என்று அந்த வேற்றுக் கிரகவாசியிடம் கேட்டபோது, மரணத்தை ஒருவராலும் வெற்றிக் கொள்ள முடியாது என்று அது குறிப்பிட்டுள்ளது.

சச்சிதானந்தன் சுகிர்தராஜா

# அமெரிக்க அதிபர் தேர்தல்:

## சில அவசர அவதானிப்புகள்

அமெரிக்கத் தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்ட அடுத்த நாள் காலையில் இப்பதிவை கணினியில் ஏற்றுகிறேன். இக்கட்டுரையை நாலாண்டு கழித்து, அதாவது ட்ரம்பின் ஆட்சியின் முதல் தவணைக்குப் பின் படிக்கும்போது இங்கே சொல்லப்பட்டவை கோமாளித்தனமானவையா அல்லது தீர்க்கதரிசனமானவையா என்பது ட்ரம்ப் நடந்துகொள்ளும் விதத்திலும் அவரைச் சரித்திரம் எப்படி விசாரணை செய்கிறது என்பதிலும் பொறுத்திருக்கிறது.

டொனால்ட் ட்ரம்பின் வெற்றி அறிவிக்கும் முக்கிய செய்தி: அமெரிக்க தலைவர் பதவிக்கு முன் அனுபவம், அறிவு மற்றும் தகுதிகள் போன்றவை தேவை இல்லை. பணமும், சொல்வாக்கும், வீறாப்பும் எளியவரைக் கேலி செய்யும் அடாவடித்தனமும், முக்கியமாக ஊடகங்களின் தலைப்புச் செய்திகளை வசியவைக்கும் தன்மையும் இருந்துவிட்டால், அமெரிக்கக் கனவை ஒரு வெள்ளை இனத்தவர் சாதித்துவிடலாம்.

ஈழப் பெற்றோரின் ஒளவையார் தன்மையான ''பிள்ளையே கவனமாகப் படி'' என்ற வார்த்தைகளுக்கு, மோடி செல்லாது என்று அறிவித்த 500, 1000 ரூபா நோட்டுகள் போல், இனி அதிக மதிப்பிருக்காது.

ஓர் ஆபிரிக்க அமெரிக்கரின் ஆட்சிக்குப் பின் வெள்ளையரின் பேரினவாதத்தை ஆதரிக்கும் கே.கே.கேயின் ஆசீர்வாதத்துடன் பதவிக்கு வருவது, ஒபாமாவின் தேர்வு உருவாக்கியதாகச் சொல்லப்படும் பின்-இனஞ் சார்ந்த (post racial) சமுதாயம் வெறும் கற்பிதம் என்பதை உணர்த்துகிறது. ''மீண்டும் அமெரிக்காவை மகத்தான நாடாக்குவோம்'' என்ற இவரின் தேர்தல் பிரசாரத்தில் பொதிந்து கிடக்கும் உபபிரதி: அமெரிக்காவை மறுபடியும் வெள்ளையர் கைக்குக் கொண்டு வருவதே.

ட்ரம்ப் ஏற்படுத்திய நவீன கட்டுக்கதைகளில் ஒன்று, இவர் தன்னை உழைக்கும் வர்க்கத்தினரின் வேட்பாளராகவும், ஹிலாரியை தற்போதைய ஆதிக்கத்தரப்பின் (The Establishment) வேட்பாளராகவும் சித்திரித்தமையே. குடியேறிகள், அரசின் நல உதவிபெறுகிறவர்கள், பிரத்தியேகமான சலுகைகளை அனுபவிக்கும் சிறுபான்மையினர், கூட்டு நிறுவனங்கள் அமெரிக்காவுக்குப் பாதகமாகத் திணித்த ஒப்பந்தங்களுக்கு எதிரான வேட்பாளராகவும், கடினமாக வேலைசெய்யும் அமெரிக்க உழைப்பாளிகளைப் பாதுகாக்கும் நாட்டுப்பற்று மிக்க வேட்பாளராகவும், அவர்களில் ஒருவராகவும் தன்னை ட்ரம்ப் அடையாளப்படுத்திக்கொண்டார். இது உண்மையல்ல. இவரும் ஆதிக்கத் தரப்பைச் சேர்ந்தவர். துருப்பிடித்த பகுதி (Rust Belt) என்று அழைக்கப்படும் ஊர்களிலிருக்கும் ட்ரம்பின் ஆதரவாளர்கள் இவர் நடத்தும் உண்டுறை விடுதியில் ஒரு நாள் தங்க இவர்களின் ஒரு மாதச் சம்பளம் போதாது. இந்தத் தொழிலாளர்களுக்கும் ட்ரம்புக்கும் இடையே காணப்படும் வர்க்க இடைவெளி, தலைமன்னாரையும் இராமேஸ்வரத்தையும் பிரிக்கும் பாக்கு நீரிணையை விட விரிவானது; ஆழமானது. இவர் அமைச்சரவையில் நியமனமாகப்போகும் பெயர்களைப் பாருங்கள். எந்த சகதியை வடிகட்டவேண்டும் (drain the swamp) என்று சொன்னாரோ அதே வாஷிங்டன் என்ற சகதியில் இருந்து வந்தவர்கள்தாம்.

ட்ரம்ப் பற்றிய இன்னுமொரு கட்டுக்கதை: வெள்ளை இன உழைப்பாளர் வர்க்கத்தின் கோபமே இவரின் வெற்றிக்குக் காரணம் என்பது. புள்ளிவிவரங்களைச் சற்று ஊன்றிப் படித்தால் கிடைக்கும் செய்தி சற்று வேறானது. இது தொழிலாள வர்க்கம் கொதித்து எழும்பி நடத்திய புரட்சி அல்ல. ஆண்டுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் டொலருக்கு மேலாகச் சம்பளம் வாங்குவோரில் 48 வீதத்தினரும் ட்ரம்புக்கு வாக்களித்திருக்கிறார்கள். அதே போல் வருடத்துக்கு 30 ஆயிரம் டொலருக்கு கீழ் ஊதியம் பெறுகிறவர்களில் 53 வீதம் ஹிலாரி கிளிண்டனுக்குத் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்திருந்தார்கள். மற்றும் 49 வீத வெள்ளைப் பட்டதாரிகள் வாக்கு ட்ரம்புக்குச் சென்றிருக்கிறது. இந்தப் புள்ளிவிவரம் தரும் இன்னும் ஒரு விநோதமான செய்தி, பெண்ணின வெறுப்பைத் தன் வாழ்நாள் சாதனையாக்கிய ட்ரம்புக்கு வெள்ளைப் பெண்களில் 53 வீதம் வாக்கைப் போட்டார்கள். வெள்ளையர்களின் சிறப்புரிமை, அந்த இனத்தின் தனிச் சலுகைகள் இந்த வெள்ளைப் பெண்களுக்கு முக்கியமாகப்பட்டது பெண்ணிய உரிமைகள் அல்ல. கருக்கலைப்புப் பற்றிய ட்ரம்பின் ''கல் தோன்றா மண் தோன்றாக் காலத்துப்'' பிற்போக்கான கருத்துகளைப் பற்றி இவர்கள் கவலைப்பட்டவர்களாகத் தெரியவில்லை. மக்கள் கணிப்பியலில் ஆயிரம் ஆண்டு காலத்தினர் (millennial) என்று அழைக்கப்படும் இளம் வயதினர்களில் பெரும்பான்மையினர் ட்ரம்புக்கு எதிராக வாக்களித்தமை இந்தப் புள்ளி விவரம் தரும் ஆறுதலளிக்கக்கூடிய வாசிப்புகளில் ஒன்று.



ட்ரம்பின் சாதனைகளில் ஒன்று, பின்-உண்மை அரசியலை (post-truth politics) பொதுச் சொல்லாடலில் புகுத்தியமை. இந்த அரசியல் தகைமையற்ற கூற்றின் ஆக்கியோன் ட்ரம்ப் அல்லன். ஆனால், இந்தக் கருத்தாடலைத் தீவிரப்படுத்தியவர்களில் இவரும் ஒருவர். உண்மைகள், சான்றுகள், உறுதி செய்யக்கூடிய நிகழ்பாடுகள் ஒன்றுமே இப்போது முக்கியமல்ல. வாய்க்கு வந்தபடி சொல்லவேண்டியது, அது உண்மையா பொய்யா என்ற கவலை இல்லை. ஹிலாரி பொய் பேசுகிறவர், தார்மீகக் கோணலானவர் என்றார். இவைகளுக்கான ஆதாரங்கள் ஒன்றுமே தரவில்லை.

''செய்யுளில் பிரசாரம் செய்யுங்கள், உரைநடையில் ஆட்சியை நடத்துங்கள்'' என்று படிப்பதற்குப் புத்திசாலித்தனமான ஆனால், நடைமுறைக்கு அறவே உதவாத வசனங்களை நியூயோர்க் ஆளுநர் Mario Cuomo சொன்னார் எனக் கூறப்படுகிறது. ட்ரம்ப் தன்னுடைய பிரசாரத்தை வசையில் தான் நடத்தினார். ட்ரம்ப் ஒரு சமவாய்ப்பு (equal opportunity) வசவாளர். பெண்கள் முதல் வலுதளர்ந்தோர் வரை இழிவாகப் பேசினார். அவருடைய வசைமொழிக்கு முன் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் திருவள்ளுவர் போல் தெரிகிறார்கள். இந்தக் கீழ்த்தரமான, கடுங்காரமான, பிறிதானவர்களை (the other) குற்றம் சாட்டும் அரசியல் பிரசாரம் ட்ரம்பின் தனி குத்தகை அல்ல. இதற்கு முன்பும் அமெரிக்கத் தலைவர் தேர்தலில் காரசாரமான இன, மத வெறி பரப்புரை செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பெருமை 1850 முதல் 1853 வரை குடியரசு அல்லது ஜனநாயகக் கட்சியைச் சேராத அமெரிக்க தலைவராயிருந்த Millard Fillmore ஐச் சேரும். இவர் அங்கம் வகித்த கட்சியின் பெயர் கூட The Know Nothing Party. இவர்கள் இன்றைய கே.கே.கேயின் முன்னோடிகள் என்று வைத்துக்கொள்ளுங்கள். இவரின் கட்சியின் ஆதாரவாளர்கள் கிறிஸ்தவ சீர்திருத்தச் சபையைச் சேர்ந்தவர்கள். ட்ரம்பைப் போலவே இவர்கள், குடியேறிகள். அமெரிக்க கலாசாரத்தை தீட்டுப்படுத்துகிறார்கள் என்ற விஷத்தைப் பரப்பினார்கள். ட்ரம்புக்கு முஸ்லிம்கள் போல் இவர்களுக்கு கத்தோலிக்கர். பாப்பாண்டவர் அமெரிக்காவை ஆட்கொண்டுவிடுவார் என்று பயம் இருந்தது. இன்று ட்ரம்பின் சொல்லாடலில் காணப்படும் எல்லா அவதூறுகளும் இவர்களின் பிரசாரத்திலும் காணலாம். ''எல்லா மனிதர்களும் சமமானவர்கள்'' என்று எங்கள் அரசியல் சாசனம் கூறுகிறது. இவர்களுடைய பார்வையில் ''எல்லா மனிதர்களும் சமமானவர்கள், ஆனால் கறுப்பர்கள், கத்தோலிக்கர்கள், அந்நியர்கள் தவிர'' என்று ஆபிரகாம் லிங்கன் இவர்களின் மனப்போக்கை அங்கலாய்த்திருந்தார்.

இலக்கியத்தில் எதிர்காலம் பற்றி தீர்க்கதரிசனமான எழுத்துக்கள் உள்ளன. Franz Kafka நாஜிகளின் வாயு கூடங்கள் (Gas chambers) பற்றி முன் எச்சரிகை செய்தார். Orwell அவருடைய 1894 இல் மக்கள் வாழ்வில் எங்கும் வியாபித்திருக்கிற சர்வாதிகார ஆட்சி எவ்வாறு ஒரு தனிமனிதனின் ஆளுமையையும், சுதந்திரத்தையும் ஒரு நாள் வன்முறையில் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரும் என்று கற்பனை செய்தார். Philip Roth அவருடைய Plot Against America வில் யூத எதிர்ப்பாளர்கள் அமெரிக்க ஆட்சிக்கு வந்தால் எற்படும் விபரீதங்களைப் புனைகதையாக எழுதினார். ஆனால் ட்ரம்பைப் போல் அதி தீவிர தனித் தன்னாட்சியாளர் ஒருவர் உருவாகலாம் என்று முன்னுணர்வுடன் சொன்ன நாவல் Sinclair Lewis வின் It Can't Happen Here (1935). இந்த நாவலில் ஒரு வல்லாண்மையாளர் (fascist) அமெரிக்க ஆட்சியைக் கைப்பற்றினால் விளையும் தாற்பரியங்களைக் கதையாகச் சொன்னார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)



மில்லார்ட் பில்மோர் (Millard Fillmore)

# தடை செய்யப்பட்ட 500, 1000 ரூபா தாள்களை வைப்பிலிடும்போது 50 சதவீதம் வரி விதிப்பு

## வைப்பிலிடப்பட்ட தொகை 6 இலட்சம் கோடியாக அதிகரித்ததை அடுத்த மத்திய அரசு அதிரடி

புதுடில்லி, நவ.27

தடை செய்யப்பட்ட 500, 1000 ரூபா தாள்களை வங்கியில் வைப்பிலிடும்போது, பணம் தொடர்பில் கணங்குக் காட்டப்படாவிட்டால் 50 சதவீதம் வரி வசூலிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

டில்லியில் கடந்த வியாழக்கிழமை இரவு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கறுப்புப் பணத்தை ஒழிக்கும் முயற்சியில் முக்கிய நடவடிக்கையாக கடந்த 8 ஆம் திகதி, 500, 1000 ரூபா தாள்கள் செல்லாது என்ற அறிவிப்பை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார். பொதுமக்கள் தங்களிடம் உள்ள செல்லாத 500,



1000 ரூபா நோட்டுகளை வங்கிகளில் கொடுத்து புதிய தாள்களைப் (ஒரு நாளுக்கு 2000 ரூபா) பெற்றுக் கொள்ளலாம் என்றும், வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, கடந்த இருவாரங்களாக பொதுமக்கள் வங்கி வாயில்களில் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களிடம் உள்ள பழைய 500, 1000 ரூபா தாள்களுக்குப் பதிலாக, புதிய தாள்களை மாற்றிக் கொண்டனர். இதற்கான காலக்கெடு கடந்த வியாழக்கிழமையுடன் முடிவடைந்தது. (க)

எனினும், பழைய தாள்களை வைப்பிலிட டிசம்பர் 30 ஆம் திதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

500, 1000 ரூபா தாள்கள் செல்லாது என்று அறிவிக்கப்பட்ட பின்னர் வங்கிகளில் வைப்பிலிடப்பட்ட பணம் 6 இலட்சம் கோடியாக அதிகரித் துள்ளது.

பழைய தாள்களை வைப்பிலிடுவதற்கு இன்னும் ஒரு மாதத்துக்கு மேல் கால அவகாசம் இருப்பதால் வங்கிகளின் வைப்பிலிடப்படும் தொகை மேலும் பல இலட்சம் கோடிகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இதனிடையே மத்திய அரசின் 'ஜன் தன்' திட்டத்தின்கீழ் தொடங்கிய வங்கிக் கணக்குகளில் மட்டும், கடந்த 15 நாள்களில் 64,250 கோடி ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

வங்கிக் கணக்கு இல்லாத ஏழை, எளிய மக்களுக்காக மத்திய அரசு தொடங்கிய இந்த வங்கிக் கணக்குகளில், பெரும் பணக்காரர்களின் கறுப்புப் பணம் வைப்பிலிடப்படுகிறதா என்று சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பாகவும், வங்கிகளில் வைப்பிலிடப்பட்ட கணக்கில் வராத பணம் தொடர்பாகவும் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த விவாதத்தின் முடிவில், டிசம்பர் 30 ஆம் திகதி வரை பழைய 500, 1,000 ரூபா தாள்களை வங்கிகளில் வைப்பிலிடும்போது உரிய கணக்கு காட்டாவிட்டால் குறைந்த பட்சம் 50 சதவீத வரி விதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

## பாம்பன் கடற்கரையில் இலங்கை மீனவர்களின் வலைகள் மீட்பு



இராமநாதபுரம், நவ.27

பாம்பன் கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்களின் வலைகளை தமிழக கடலோரக் காவல் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

பாம்பன் குந்துகால் கடற்கரைப் பகுதியில் மண்டபம் கடலோரக்காவல் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது கடற்கரையோரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா மதிப்பிலான மீன்பிடி வலைகளை மீட்டுள்ளனர்.

அந்த வலைகள் இலங்கை மீனவர்களின் வலைகள் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இலங்கை மீனவர்கள் பயன்படுத்தும் வலைகள் இந்திய கடல்பகுதிக்குள் எப்படி வந்தன என்பது தெரியவில்லை என்றும், வலைகள் சேதமடைந்து காணப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால், இலங்கை கடல் பகுதியில் அந்நாட்டு மீனவர்கள் விரித்து வைத்திருந்த வலைகளை தமிழக மீனவர்கள் அறுத்து எடுத்து வந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த உகந்த சூழல் ஏற்படவில்லை

### இந்திய மத்திய அரசு தெரிவிப்பு

டில்லி, நவ.27

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதியிலிருந்து எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் அண்மையில் பயங்கர வாதத் தாக்குதல் நடத்தப்பட்டதால், இரு நாடுகளுக்கு இடையே பேச்சு நடத்துவதற்கான உகந்த சூழல் ஏற்படவில்லை என்று மத்திய அரசு தெரிவித்தது.

இதுதொடர்பாக மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை எழுத்துப்பூர்வமாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.கே.சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்



மேலும் தெரிவிக்கையில்,

பஞ்சாப் மாநிலம், பதான் கோட்டில் உள்ள விமானப் படைத் தளத்தில் கடந்த ஜனவரி 2 ஆம் திகதி பயங்கர வாதத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து, பூஞ்ச் மாவட்டத்தில் நடத்தப் பட்ட தாக்குதல், ஜம்மு- காஷ்மீர் மாநிலம், உரி பகுதியில் நடத்தப்பட்ட பயங்கர வாதத் தாக்குதல் போன்றவை இரு நாடுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்கான உகந்த சூழலை ஏற்படுத்தவில்லை என்று தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம், அமிருதசரஸ் நகரில் அடுத்த வாரம் நடைபெற உள்ள ஆசிய மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமருக்கான வெளியுறவுத் துறை ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் பங்கேற்கப் போகிறார் என்று அறிவித்துள்ளார்.

அவருடன் மத்திய அரசு பேச்சு நடத்தத் திட்டமிடவில்லை என்பது வி.கே.சிங் கூறிய பதிலில் இருந்து தெரிகிறது. (க)

## தமிழகத்தில் இந்த ஆண்டும் ஜல்லிக்கட்டு நடத்தாவிட்டால் மாபெரும் போராட்டம்

### - தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.27

தமிழகத்தில் இந்த ஆண்டும் ஜல்லிக் கட்டு நடத்த மத்திய அரசு ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்றால் தி.மு.க. சார்பில் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 10 க்கும் அதிகமான விவ



சாயிகள் இறந்துள்ளனர்.

ஆனால், அதிமுக அரசு நிர்வாக ரீதியாக முடங்கியுள்ளதால் விவசாயிகள் தொடர்ந்து தற்கொலை செய்து கொள்கின்றனர். அப்படி இறந்த விவசாயிகளின் குடும்பங்களை நேரில் சந்தித்து ஆறுதல் சொல்வதற்காகவே நான் வெவ்வேறு ஊர்களுக்குப் பயணிக்கவுள்ளேன்.

அத்துடன், இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான சூழ்நிலையை மத்திய அரசும், மாநில அரசும் உருவாக்கவில்லை என்றால் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் அனுமதியோடு, தி.மு.க. சார்பில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (க)




இந்தியாவில் 500, 1000 ரூபா தாள்கள் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், வங்கிகளுக்கு தொடர்ந்து இரண்டு நாள்கள் விடுமுறை என்பதால் அன்றாடச் செலவுக்கு பணம் எடுக்க மக்கள் ஏ.டி.எம். நிலையங்களில் அலைமோதினர்.

# மறைந்தார் பிடல் காஸ்ட்ரோ

காஸ்ட்ரோ 1945 ஹவானா பல் கலைக் கழகத்தில் தான் கம்யூனிச வாதி யாகப் பரிமாணம் பெற்றார். கியூபாவைச் சேர்ந்த பொதுவுடைமைப் புரட்சியாளரும் பொதுவுடைமை அரசியல்வாதியுமானார். கியூபாவில் 1959 இல் புரட்சியை வழிநடத்தி புல்ஜென் சியோ பாட்டிஸ்ட்டாவின் அரசை வீழ்த்தி தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்ற காஸ்ட்ரோ. 1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதம ராகவும், 1976 முதல் 2008 வரை ஜனாதிபதியாகவும் பொறுப்பு வகித்தார். கியூபாவை ஒரு சோசலிச நாடாகப் பேணிய பெருமை இவரைச் சாரும்.



கியூபாவின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ரோ நேற்றுச் சனிக்கிழமை காலமானார். 2008 ஆம் ஆண்டு உடல் நலக் குறைவால் பாதிக்கப் பட்டிருந்த அவர், நேற்று உயிரிழந்துள்ளார். 1926 ஓகஸ்ட் 13 ஆம் திகதி கியூபாவில் பிரான் அருகில் ஒரு கரும்புத் தோட்டத்தில் பிடல் அய்ஜாந்தி ரோ காஸ்ட்ரோ பிறந்தார்.

காஸ்ட்ரோவின் தந்தை ஏன்ஜல் காஸ்ட்ரோ. காஸ்ட்ரோ குடும்பம் மிகவும் நடுத்தரக் குடும்பம்.

ஏன்ஜல் காஸ்ட்ரோ ஒரு பண்ணையாளர். ஏன்ஜல் ரஸ் காஸ்ட்ரோ ஸ்பெய்னில் இருந்து கியூபாவுக்கு பிழைக்க வந்தவர் என்கிறார்கள். கியூபாவின் ஓரி யண்ட் மாகாணத்தில் குடியேறினார். ஏன்ஜல் காஸ் ட்ரோ கடுமையாக உழைத்து ஒரு பண்ணையாளர் ஆனார்.

அவரின் கீழ் ஆயிரக்கணக்கான கியூபர்கள் வேலை பார்த்தார்கள். 1940 ஏக்கர் நிலத்துக்கு உரி மையாளர் ஆனார் ஏன்ஜல். பிடலின் தாய் லினா, இவர் ஒரு கியூபப் பெண்மணி. ஏழை விவசாயின் மகள்.


இத்தம்பதிக்கு முதல் குழந்தையாக காஸ்ட்ரோ பிறந்தார். மேலும் காஸ்ட்ரோ பிறந்த பின்னரே இத்தம்பதியினர் திருமணம் செய்து கொண்டிருந்தனர்.

அதனால் சிறுவன் காஸ்ட்ரோவுக்கு அவனது பெற்றோரின் திருமணத்தை நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது. பிடல் இயற்கையாகவே ஏழைகளின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.

1930 இல் கியூபாவில் பொருளாதார நெருக் கடி காரணமாக காஸ்ட்ரோ தமது ஐந்து வய தில், சான்டியாகோ டி கியூபாவுக்குச் சென்றார்.

ஏஞ்சலின் குடும்ப நண்பர் வீட்டுக்கு காஸ்ட்ரோவும் அவரது சகோதர சகோதரிகளும் அனுப்பி வைக்கப்பட்டனர். ஏஞ்சலின் குடும்ப நண் பர் ஓர் ஆசிரியர்.

ஆனால் மிகவும் ஏழை. அதனால் ஏஞ்சல் குழந்தை களுக்கு அனுப்பும் பணத்தை அந்த முழுக் குடும்பமும் பகிர்ந்துகொண்டது. இதனால் காஸ்ட்ரோவின் சகோதரிகள் அனைவரும் வீடு திரும்பி விட்டனர்.



ஆனால், காஸ்ட்ரோ மட் டும் அங்கேயே தங்கி தன் னுடைய படிப்பை தொடங் கினார். சான்டியாகோ டி கியூ பாவில் லா சேல் எனும் பள்ளி யில் காஸ்ரோ படித்தார். பின் காஸ்ட்ரோ டோலோரஸ் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

1941 இல் காஸ்ட்ரோ பெலன் கல்லூரியில் சேர்ந் தார். இங்கு படிக்கும்போதே காஸ்ட்ரோவுக்கு கம்யூனிசம் எனும் பெயர் தெரியவந்தது. 1945 இல் இரண்டாம் உல கப்போர் முடிவுக்கு வந்த போது காஸ்ட்ரோ உயர் கல்வியை முடித்திருந்தார்.

ஸ்பானிய உள்நாட்டுப் போரும் முடிவுக்கு வந்தது. காஸ்ட்ரோவுக்கு அப்போது கம்யூனிசம் பற்றி எதுவும் தெரியாது.

ஆனால், அவர்களை எல்லோரும் ஒதுக்கி வைத் தார்கள் என்பது மட்டும் அவருக்கு தெரியும். நாள்கள் செல்லச் செல்ல காஸ்ட்ரோவும் கம்யூனிசத்தை மறந்து போனார். பின் காஸ்ட்ரோ 1945 இல் ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். இங்குதான் காஸ்ட்ரோ கம்யூனிசவாதியாகப் பரிமாணம் பெற்றார்.

கியூபாவைச் சேர்ந்த பொதுவுடைமைப் புரட்சி யாளரும் பொதுவுடைமை அரசியல்வாதியுமானார்.

கியூபாவில் 1959 இல் புரட்சியை வழிநடத்தி புல் ஜென்சியோ பாட்டிஸ்ட்டாவின் அரசை வீழ்த்தி தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்ற காஸ்ட்ரோ, 1959 முதல் 1976 வரை கியூபா வின் பிரதமராகவும், 1976 முதல் 2008 வரை ஜனாதிபதி யாகவும் பொறுப்பு வகித்தார்.

கியூபாவின் பொதுவுடை மைக் கட்சியின் முதல் செயலா ளராக 1965 இல் பதவியேற்ற இவர் கியூபாவை ஒற்றைக் கட்சி சமூகவுடைமைக் குடியரசாக் கினார்.

49 ஆண்டுகள் கியூபாவை ஆண்ட காஸ்ட்ரோ, 2008 பெப் ரவரி 24 அன்று பதவியிலிருந்து விலகினார். உலகத்தில் நீண்ட காலத்துக்குத் தலைமைப் பொறுப்பில் இருந்த தலைவர் காஸ்ட்ரோ மட்டுமே.

சர்வதேச அளவில், காஸ்ட்ரோ 1979 இல் இருந்து 1983 வரை மற்றும் 2006 முதல் 2008 வரை, அணி சேரா இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந் துள்ளார். அமெரிக்காவில் இருந்து 93 மைல் தூரத்தில் இருந்தாலும் கியூபாவை ஒரு சோசலிச நாடாகப் பேணிய பெருமை இவரையே சாரும். இதைவிட ரஷ்ய- அமெரிக்க பனிப்போர் நடந்த வேளையில் இவர் ரஷ்யாவுக்குச் சாதகமாகப் பல பணிகளைச் செய்தார்.

இவர், ஹவானா பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பிறகு சிறிது சிறிதாக அரசியலால் ஈர்க்கப்பட்டார். கல்லூரி அரசியலில் பங்கு கொண்டார். அப்போது இரண்டு முக்கிய கட்சிகள் மாணவர்கள் மத்தியில் இயங்கிக் கொண்டிருந்தன. ஒன்று 1925 இல் தொடங் கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி, மற்றொன்று ஜோஸ் மார்த் தியை மானசீகக் குருவாக ஏற்றுக்கொண்ட ஆர்த்தோடாச்சோ கட்சி. காஸ்ட்ரோ கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். முதல் வருடமே பிரசாரத் தில் ஈடுபட்டு வெற்றி பெற்றார்.

1953 ஜூலை 26 இல் மொன்காடாத் இராணுவ முகாமின் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார் காஸ்ட்ரோ. நன்றாக திட்டமிடப்பட்டிருந்தும் பிடெ லின் வாகனக் கோளாறு காரணமாகவும், இருட்டில் மற்ற வீரர்கள் வழி தவறியதாலும் அந்தத் தாக்குதல் தோல்வியைத் தழுவியிருந்தது. காஸ்ட்ரோவும் மாட்டிக்கொண்டார். 1953 இல் காஸ்ட்ரோவின் வழக்கு நீதி விசாரணைக்கு வந்தது. காஸ்ட்ரோ புரட்சிக்கு திட்டம் தீட்டியதை ஒப்புக் கொண்டார்.

இதேவேளை, பாடிஸ்டாவின் அரசையும் தோலு ரித்துக்காட்டினார்; அமெரிக்காவைக் கடுமையாக சாடினார். நீதி மன்றத்தில் பிடெல் நிகழ்த்திய இந்த உரையே பின்னாளில் வரலாறு என்னை விடுதலை செய்யும் என்ற நூலாக வெளிவந்தது. பின்னர், 1955 மே 15 இல் காஸ்ட்ரோ விடுதலை செய்யப்பட்டார். இதனையடுத்து மெக்சிக்கோ சென்ற காஸ்ட்ரோ கொரில்லா முறைத் தாக்குதல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

கியூபாவில் அனைவருக்கும் இலவசக் கல்வியை காஸ்ட்ரோ அறிமுகப்படுத்தினார். 1995 ஆம் ஆண்டின் யுனெஸ்கோ ஆய்வின்படி கியூபாவில் படிப்பறிவு சதவீதம் 96 ஆகும். கியூபாவின் தொழில் நுட்பத்துறையில் பணி புரிபவர்களில் 60 சத வீதத்தினர் பெண்கள் ஆவர். மருத்துவத் துறையிலும் கியூபர்கள் சிறந்து விளங் கினர். மகப்பேற்றின் போது தாய்மார்களின் இறப்பு வீதம் உலகிலேயே மிகக் குறைவாக உள்ள நாடு கியூபாவே.

உணவு செரிமானமின்மையால் பிடெல் 2008 ஆம் ஆண்டில் பதவி விலகினார். அவருக்கு பின் அவரின் சகோதரரான ராவுல் காஸ்ட்ரோ அதிபராக பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நோர்வேயில் நிதி மோசடி: 76 இலங்கைத் தமிழர் கைது!

நோர்வேயில் பெரிய நிதி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் 76 இலங்கை தமிழர் களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். நோர்வேயில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழர்களின் அடையாளத்தை பயன்படுத்தி இவர்கள் நிதி மோசடியில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நோர்வே அதி காரிகள் தெரிவித்துள்ளதாவது:-

துப்பரவு தொழில் செய்யும் 34 வயதுடைய பிரதான சந் தேக நபர் கடுமையாக உழைத்து முன்னேறிவரும் ஒருவராகத் தன்னை அடையாளம் காட்டி வந்துள்ளார். அந்த நபர் 6 பேருடன் இணைந்து நோர் வேயில் வாழும் இலங்கை தமிழர்களின் அடையாளத்தை பயன்படுத்தி சுமார் 160 - 200 கோடி ரூபா வரையில் மோசடி செய்துள்ளார்.

தலைநகர் ஒஸ்லோவுக்கு அருகில் துப்பரவு தொழில் நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் இலங்கை தமிழ் ஒருவ ரின் ஆண்டு வருமானம் குறித்து 2014 ஆம் ஆண்டு வருமான வரி திணைக்களத் தால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து கடந்த 2 ஆண்டுகளாக கண்காணித்து வந்துள்ளனர்.

இவர்களைக் கண்காணித்து வந்ததில் முக்கிய 6 நபர்கள் மற்றும் பல தமிழர்களின் பெய ரில் இவ்வாறு மோசடிகளைச் செய்து சொகுசாக வாழ்வதும், இதன் பின்னால் உள்ள மோச டியும் கண்டு பிடிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தச் சம்ப வத்தை அடுத்து 7 இளைஞர்கள் தற்காலிக வேலை அனுமதியை இழந்துள்ளனர். புகலிடக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் படும் முன் இந்த மோசடி நிறுவ னங்களில் வேலை செய்த பலரது அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என் றும் தகவல்கள் வெளியா கியுள்ளன. (ஐ)

# ஜேர்மனியில் பறவைக் காய்ச்சல்

பெர்லின், நவ.27

ஜேர்மனியின் பல மாகாணங் களில் பறவைக் காய்ச்சல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை யில் தற்போது பெர்லினில் கடற் பறவைகளிடம் நோய் தொற்று இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

ஜேர்மனியின் பல்வேறு மாகா ணங்களில் ஒருவகைப் பற வைக் காய்ச்சல் அதி தீவிரமாகப் பரவி வருகின்றது. தற்போது தலைநகர் பெர்லின் உள்ளிட்ட சில பகுதிகளிலும் குறித்த நோய்த் தொற்று பரவி வருகிறது என்று ஆய்வாளர்கள் கண் டறிந்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள கடற்பறவைகளில் குறித்த நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. கடந்த சிலவாரங்களாக ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜேர்மனியின் முக்கிய மாகாணங்களில் குறித்த நோய்த் தொற்று பரவி வந்துள்ளது.

பெர்லினில் காணப்படும் அன்னப் பறவைகளும் குறித்த நோயால் தாக்கப்பட்டுள்ளன என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் இன்னும் குறித்த தகவல் உறுதிப்படுத்தப்பட வில்லை. (ஐ)

# ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் கற்க வேண்டும்

## மஸ்தான் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.27

ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும். இதையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

அரசு கல்வியில் பெரிய பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் முகமாக பல சவால்மிகு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதையிட்டு பெருமிதம் கொள்கின்றேன்.

வட மாகாணத்தின் வன்னி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஆரம்ப காலங்களில் முழு இலங்கையினதும் கல்வி முன்னேற்றத்தில் முன்னோடியாக இருந்த மாவட்டங்களில் ஒன்றாக இருந்தாலும், தொடர்ச்சியான 30 வருட யுத்தத்தின் காரணமாக இன்று ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது.

எனவே இப்பிரதேச சமூக மேம்பாட்டின் அடித்தளமாக அனைத்துப் பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது.

இங்கு முக்கியமாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் போன்ற விடயங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. விளையாட்டு மைதானம், விஞ்ஞான ஆய்வு கூடம், வாசிகசாலை வசதிகள், கணனி அறைகள் மற்றும் உபகரணங்கள் உடனடினாக வழங்கப்பட வேண்டும்.

பொதுவாக ஆசிரியர் பற்றாக்குறை சமத்துவமற்ற தன்மையின் வெளிப்பாடாகும். அதாவது தேசிய பாடசாலைகளில் மிகையாக உள்ள ஆசிரியர்கள் கிராமியப் பாடசாலைகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

நீண்ட காலமாக பதில் அதிபர்களாகக் கடமை பார்க்கும் வன்னியில் சில பாடசாலைகளின் அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். மேலும் வலயக் கல்விப் பணிப்பாளர்களது வசதிகளும் அதிகரிக்கப்பட வேண்டும்.

கல்வியே ஒரு சமூகத்தின் உயிர் நாடி, கற்றவனும் கற்காதவனும் சமமற்றவர்கள் என இஸ்லாம் கூறுகின்றதே அன்றி பெண்கள் கல்வி கற்கக் கூடாது என்று எங்கும் கூறவில்லை.

கல்வி அமைச்சின் வரவு செலவுத் திட்ட விவாதத்தை ஆரம்பித்து வைத்த ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக இஸ்லாமிய கலாசாரம் மற்றும் தனியார் சட்டம் முஸ்லிம் பெண்களின் கல்விக்குத் தடையாக உள்ளது என்ற ஒரு தவறான கருத்தை முன்வைத்தார்.

அதனை நான் முற்றாக மறுக்கிறேன். ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என்பதையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது. பாகிஸ்தான் முஸ்லிம்கள் பற்றிய அறிக்கைகளை இலங்கை முஸ்லிம் பெண்களுடன் தொடர்புபடுத்த அவர் எடுத்த முயற்சி பொருத்தமற்றதாகும்.

முஸ்லிம்களின் முக்கிய கல்வி நிறுவனங்கள் அமையப் பெற்றுள்ள பேருவளை, கல் எலியா, கல்முனை, குருநாகல் போன்ற பகுதிகளில் உல்லாச பயணி விசாவில் வெளிநாடுகளிலிருந்து வருகை தருவோர் அடிப்படை வாதத்தைப் போதிக்கின்றனர் என்பது மிகவும் மோசமான குற்றச்சாட்டாகும்.

இன்று அனைத்து இஸ்லாமிய அமைப்புக்களும் பல ஆயிரம் சிறந்த மேதைகளை உருவாக்கி அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கும் மேம்பாட்டுக்கும் சேவையாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், உருவாக்கப்பட்ட ஒரு தீவிரவாதியை பெயரிட முடியுமா. முடிந்தால் கூறுங்கள்.-என்றார்.(ஐ-100)

# திருட்டுச் சந்தேகநபர்களுக்கு டிசெ.8 வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ.27

கோப்பாய் பொலிஸ் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெற்ற திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களை டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகப் பொலிஸார் தெரிவித்துள்ளவை வருமாறு:

இந்த வருடத்தில் இடம்பெற்ற ஏழு பாரதூரமான குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட நபர்ளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி எஸ்.ஸ்ரீகஜன் தலைமையிலான பொலிஸ் குழு மேற்கொண்ட தொடர் நடவடிக்கையின் மூலம் நான்கு சந்தேகநபர்களைக் கைது செய்ய முடிந்தது.

கண்ணாபுரம் - நாவாந்துறை, யாழ்ப்பாணம் - கந்தர்மடம் பகுதிகளை சேர்ந்த 21 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்ட நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 21 பவுண் நகைகள், ஒரு மடிக் கணினி, இரண்டு கைபேசிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இதில் சில நகைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வங்கிகளில் அடைவு வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இவர்களை யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 08 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.- என்று கூறினர். (ஐ-9)

# மாற்றுவலுவுடையோர் தின விழா

சுன்னாகம், நவ.27

யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் சர்வதேச மாற்று வலுவுடையோர் தின விழா எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள (ரி.சி.ரி.) சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸ் கலந்து கொள்வார். (ஐ-54)

## ஓ... அமெரிக்கா...

(12 ஆம் பக்க தொடர்ச்சி)

சுவிற்சர்லாந்தில் செயிண்ட் காலென் இல் சர்வதேச அரசியல் கற்பிப்பவரும் மற்றும் ஹிலாரி கிளிண்டனின் ஆலோசனைக் குழு அங்கத்தவருமான ஜேம்ஸ் டபிள்யு. டேவிஸ் எழுதிய ஒரு கருத்துரையை அதே பத்திரிகை பதிப்பித்தது. அவர் ஐரோப்பாவில் நிலவும் கொந்தளிப்பான அச்சத்தை வர்ணிக்கையில், ஏற்கனவே பலவீனமாகக் கருதப்படும் உலக ஒழுங்கிலிருந்து அடிப்படையான ஏதோவொன்று உடைந்து கொண்டிருக்கிறது, என்றார். கடந்த காலத்தில், சகல அமெரிக்க "அரசாங்கங்களும், அது ஜனநாயகக் கட்சி தலைமையில் ஆகட்டும் அல்லது குடியரசுக் கட்சி தலைமையில் ஆகட்டும், சுதந்திர சந்தைகள் மற்றும் கூட்டுப் பாதுகாப்பின் அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்திருந்தன". வெள்ளை மாளிகையின் ஒரு ஜனாதிபதி ஒருபோதும் "அமெரிக்க தலைமையிலான ஒழுங்கமைப்பின் அடிப்படைத் தூண்களைக் குறித்து பகிரங்கமாக கேள்வி எழுப்பியதில்லை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் அதைச் செய்துள்ளார்".

அவர்களது கூட்டு பத்திரிகையாளர் சந்திப்பில், ஒபாமாவும் மேர்க்கெலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கியத்துவத்தையும் உறுதிப்படுத்தினர். ட்ரம்ப் வெற்றியால் இதன் உடைவு தீவிர மடையக் கூடும். பிரிட்டன் வெளியேறுவதற்கான வெகுஜன வாக்கெடுப்பின் வெற்றியைக் கொண்டாடிய வலதுசாரி தேசியவாத சக்திகள், ஐரோப்பா எங்கிலும் வளர்ந்து வருகின்றன.

இத்தாலியில், மரியோ ரென்சி அரசாங்கம் டிசம்பர் தொடக்கத்தில் ஓர் அரசியலமைப்பு வெகுஜனவாக்கெடுப்பு வரவிருக்கின்ற நிலையில் இப்போது உயிர்பிழைப்பிற்கான போராட்டத்தில் உள்ளது.

புதிய தேர்தல்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டால், ஐரோப்பிய ஒன்றியத்தை எதிர்ப்பவர்கள் ஜெயிப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது. அதே நேரத்தில் ஆஸ்திரியாவிலும் ஜனாதிபதி தேர்தல் நடக்கும், அதில் தீவிர வலது FPO வேட்பாளர் நோர்பேர்ட் ஹோபர் ஜெயிப்பதற்கான பலமான சாத்தியக்கூறுகள் உள்ளன.

பிரான்ஸில், அடுத்தாண்டு வசந்தத்தின் தொடக் கத்தில் வரவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தேசிய முன்னணியின் மரீன் லு பென் பெரிதும் மேலுயரலாம்.

அமெரிக்காவில் போலவே, இத்தகைய வலதுசாரி வெகுஜனவாத சக்திகளின் வளர்ச்சியானது ஒருபுறம் ஸ்தாபக கட்சிகள் மீது அதிகரித்துவரும் கோபம், மற்றும் மறுபுறம் ஒரு முற்போக்கான மாற்றீடு இல்லாததன் விளைவாகும்.

ஆளும் உயரடுக்குகள், சமூக கோபத்தை ஒரு பிற்போக்குத்தனமான முட்டுச்சந்துக்குள் திருப்பி விடக்கூடிய தீவிர வலது கட்சிகளைக் கண்டு அஞ்சுவதை விட ஒரு சுயாதீனமான, முதலாளித்துவ-எதிர்ப்புத் திசையில் அபிவிருத்தி அடைந்து வரும் சமூக எதிர்ப்புக்கு மிகவும் அதிகமாக அஞ்சுகின்றன. அவை அவற்றிற்குள் வெறுமனே தந்திரோபாய கருத்து வேறுபாடுகளை மட்டுமே கொண்டுள்ளன. இதனால் தான் ஐரோப்பாவில் ட்ரம்ப் உடனான கூட்டுறவுக்கு ஒபாமா ஆலோசனை வழங்குகிறார்.

(கேள்வி தொடரும்)

## அமெரிக்க அதிபர்....

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கிட்டத்தட்ட எண்பது ஆண்டுகளுக்கு முன் நாவலில் பதிவு செய்தமை இன்று நிறைவேறியிருக்கிறது. இந்த நாவலின் கதாநாயகன் வின்ரிப்புக்கும் ட்ரம்புக்கும் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. இருவருமே ஆண வப் போக்குடையவர்கள். இரண்டு பேருக்கும் மெக்சிக்கர்களே எதிரி. வின்ரிப்பு அந்த நாட்டு மீது போர் தொடுத்தார். ட்ரம்ப் அந்த வேலையை இன்னும் செய்யவில்லை. நாலாண்டு காலம் இருக்கிறது. இவர்கள் பார்வையில் பெண்கள் இருக்கவேண்டிய இடம் அடுப்படி. இந்த நாவல் பற்றி இன்னோர் இதழில் விரிவாக எழுதியிருக்கிறேன். இந்த நாவல் தரும் மறைமுகமான செய்தி: வல்லாண்மை அமெரிக்காவில் அமுலானால் அது அமெரிக்கத் தன்மையானது என்று அழைக்கப்படும் When fascism comes to America, they will call it Americanism.


"மெக்சிக்கோ-அமெரிக்க எல்லையில் மதில் எழுப்புவேன், முஸ்லிம்கள் அமெரிக்காவுக்கு வருவதைத் தடைசெய்வேன்" என்றெல்லாம் ட்ரம்ப் அவருடைய பிரசாரத்தில் கூறிய அடாத வாக்குறுதிகளை நிறைவேற்றுவாரா என்று பதற்றத்துடன் இருப்பவர்கள் இரண்டு வார்த்தைகளை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள் : ஒன்று ஒபாமா மற்றது குவாந்தானமோ பே (Guantanamo Bay), ஆட்சிக்கு வந்த அடுத்த நாள் இந்தத் தடுப்புக் காவல் நிலையத்தை இழுத்து மூடுவேன் என்றார் ஒபாமா. எட்டு வருடங்கள் கழித்து இன்னும் கைதிகள் அங்கே இருக்கிறார்கள்!

மக்கள் தேசிய விருப்பு வாதம் உலகு எங்கும் காணப்படுகிறது. இன்று ஆட்சி நடத்தும் அரசியல் தலைவர்களைப் பார்க்கும் போது எமக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அமெரிக்காவில் ட்ரம்ப், துருக்கியில் Tayyip Erdoğan, பிலிப்பைன்ஸ் தீவுகளில் Rodrigo Duterte, செக் குடியரசில் Milos Zeman, ஹாங்கேரியில் Viktor Orban... அதே போல் ஐரோப்பாவில் ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கும் எதிர்க் கட்சிகளைப் பாருங்கள்; அச்சம் இன்னும் அதிகமாகும். பிரான்ஸில் Marine Le Pen, ஒல்லாந்தில் Geert Wilders, ஆஸ்திரியாவில் Norbert Hofer. இவர்கள் பரப்புரைக்கும் அதீத தேசியவாதம் தங்களுடைய நாடுகளுக்கேற்ற தன்மைகளைக் கொண்டிருந்தாலும் இந்தத் தலைவர்களை ஒன்றிணைக்கும் சமாசாரங்கள் உள்ளன. குடியேறிகளைக் கட்டுப்படுத்த வேண்டும், அவர்கள் தூய தேசிய அடையாளத்தைக் கறைபடுத்துகிறவர்கள்; இஸ்லாமியர்கள் பயங்கரவாதிகள், ஆகையால் அவர்களைக் கண்காணிக்க வேண்டும்; உலகமயமாக்கல் தேசிய அரசுகளின் இறையாண்மையைச் சிதைத்துவிடுகிறது, எனவே, சுதந்திரச் சந்தையைக் கட்டுப்படுத்த வேண்டும்... இவர்களின் ஒரே நோக்கம் அந்நிய தீய சக்திகளிடமிருந்து பழைய வாழ்க்கை முறைகளைப் பாதுகாப்பதே. சமத்துவ சர்வதேச, பன்முக ஒழுங்கை உருவாக்குவதைவிட, தத்தம் நாட்டுக் குடிமக்களின் தனிநிலைகளைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டுகிறார்கள். பிறநாடுகளுடன் தொடர்பைத் துண்டித்து ஓர் ஒதுக்குநிலையை விரும்புகிறார்கள். எதிர் உலகமயமாக்குதலுக்கு இவர்கள் தரும் விடை பொருளாதாரத் தேசியம்.

கடைசியாக, இதேபோன்று தாராளவாதம் மங்கி, இருள் ஓங்கிய நாஜி நாள்களில் Bertolt Brecht எழுதிய கவிதை நினைவுக்கு வருகிறது. அவரின் கவிதையை உரை நடையில் தந்திருக்கிறேன். இவை நல்லுணர்ச்சி தரும் வாக்கியங்கள் அல்ல. ஆனாலும் வாசித்துப் பாருங்கள்:

இந்த இருண்ட நாள்களில் பாட்டுப் பாடலாமா? ஆம், பாடலாம். பாடல்கள் ஒலித்துக் கொண்டேயிருக்கும், இருண்ட நாள்கள் பற்றி.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்: பதிலடி கொடுத்தது ஆஸ்திரேலியா



அடிலெய்ட், நவ.27

தென்பிரிக்காவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 2 ஆவது நாள் ஆட்டத்தில் 6 விக்கெட்டு இழப்புக்கு 307 ஓட்டங்களை குவித்தது. உஸ்மான் கவாஜா 138 ஓட்டங்களை விளாசினார்.

அடிலெய்டில் பகலிரவாக நடைபெற்று வரும் இந்த டெஸ்ட்டில் தென்னா பிரிக்கா முதல் இன்னிங்ஸில் 76 ஓவர்களில் 9 விக்கெட்டு இழப்புக்கு 259 ஓட்டங்களை எடுத்து டிக்ளேர் செய்தது. டு பிளெஸ்ஸிஸ் 118, ஸ்டீபன் குக் 40 ஓட்டங்களை எடுத்தனர்.


முதல் இன்னிங்ஸை விளையாடிய ஆஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 12 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 14 ஓட்டங்களை எடுத்தது. உஸ்மான் கவாஜா 3, ரென்ஷா 8 ஓட்டங்களுடன் நேற்று முன்தினம் 2 ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்தனர். ரென் ஷா 10, டேவிட் வோர்னர் 11, கேப்டன் ஸ்மித் 59, ஹென்ட்ஸ்கோம்ப் 54, மெடின்சன் 0, மேத்யூவ் வேட் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

நிலைத்து நின்று விளையாடிய உஸ்மான் கவாஜா 197 பந்துகளில், 14 பவுண்டரிகளுடன் 5 ஆவது சதத்தை நிறைவு செய்தார். நேற்றைய ஆட்டத்தின் முடிவில் ஆஸ்திரேலிய அணி 102 ஓவர்களில் 6 விக்கெட்டு இழப்புக்கு 307 ஓட்டங்கள் எடுத்தது. கவாஜா 138, மிட்செல் ஸ்டார்க் 16 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

தென்னாபிரிக்க அணி தரப்பில் கைல் அபோட் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி னார். ஆஸ்திரேலிய அணி 48 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ள நிலையில் கைவசம் 4 விக்கெட்கள் இருக்க நேற்று 3 ஆவது நாள் ஆட்டத்தை தொடர்கிறது. நேற்றைய ஆட்டநேர முடிவில் 383 ஓட்டங்களைச் சேர்த்து தென்னாபிரிக்காவுக்கு பதிலடி கொடுத்தது.

# பந்தை பளபளப்பு செய்வதில் ஐ.சி.சி.யின் தெளிவு தேவை

## இங்கிலாந்து அணித் தலைவர் குக் வலியுறுத்தல்



மொகாலி, நவ.27

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஹோபார்ட் டெஸ்ட்டில் பந்தை சேதப் படுத்தியதாக தென்னா பிரிக்க தலைவர் டு பிளெஸ்ஸிஸுக்கு போட்டியின் ஊதியத்தில் 100 சதவீதத்தை அபராதமாக விதித்து ஐ.சி.சி. உத்தரவிட்டது. இதை எதிர்த்து டு பிளெஸ்ஸிஸ் மேல்முறை யீடு செய்துள்ளார்.

இதற்கிடையே இங்கிலாந்து அணிக்கு எதிராக ராஜ்கோட்டில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி, சுயிங்கத்தை பயன்படுத்தி பந்தை பளபளப்பு செய்த காட்சி களை இங்கிலாந்து ஊடகம் ஒன்று வெளியிட்டது. இது கடந்த சில நாள்களாக பலரது மத்தியில் விவாத பொருளாக மாறி உள்ளது.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக இங்கிலாந்து அணியின் தலைவர் அலாஸ்டர் குக் கூறும்போது;

ஐ.சி.சி. இந்த விவகாரத்தை தெளிவு படுத்த வேண்டுமென வீரர்கள் நினைப்பதாக நான் கருதுகிறேன். எது ஏற்புடை யது, ஏற்புடைய்து அல்ல என்பதை ஐ.சி.சி. தெளிவு படுத்த வேண்டும். வீரர் ஒருவர் சுயிங்கத்தையோ அல்லது ஜெலி போன்ற திரவத்தையோ மென்று விட்டு அதன் பின்னர் உமிழ் நீரால் பந்தை பளபளப்பு செய்வார்.

இதன் காரணமாக பந்தின் தன்மை மாற்றம் அடையும். இனிப்பான திரவத்தில் கை வைத்து விட்டு அதனை பந்தின் மீது தேய்க்கக் கூடாது என்பதை ஐ.சி.சி. தான் கட்டாயப்படுத்த வேண்டும்.

இது நேர்மை யாக நடந்து கொள்ள கை கொடுக்குமா, இல்லையா என்பது எனக்கு தெரியாது'' என்று தெரிவித்துள்ளார்.

# ஆசியக் கிண்ணம் முதல் போட்டியில் இந்தியாவிடம் தோற்றது பங்களாதேஷ்

பாங்கொக், நவ.27

மகளிர் ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நேற்று பாங்கொக்கில் ஆரம்பமாகின.

நேற்று இடம்பெற்ற முதல் போட்டியில் இந்தியா- பங்களாதேஷ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத் தாடிய இந்தியா 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 118 ஓட்டங்கள் எடுத்தது.

மிதாலி ராஜ் ஆட்டமிழக் காமல் 49 ஓட்டங்களும், மந்தனா 41 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதன் பின்னர் துடுப்பெடுத்தாடியபங் களாதேஷ் மகளிர் அணி திணறியது. வீராங்கனைகள் அடுத்தடுத்து ஒன்றை ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அந்த அணி 18.2 ஓவரில் 54 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனால் 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி 2 புள்ளிகள் பெற்றுள்ளது.

இந்திய அணி சார்பில், பூணம் யாதவ் 3 விக்கெட் டும், அஞ்ஜா படேல், கோஸ்வமி தலா 2 விக்கெட் டும் வீழ்த்தினார்கள்.

இதைத் தொடர்ந்து நடந்த 2வது போட்டியில் பாகிஸ்தான் அணி, நேபாள அணியை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

# ஆசிரியர்களுக்கிடையில் தேசிய ரீதியில் போட்டிகள்

சுன்னாகம், நவ.27

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆசிரியர்களுக் கிடையில் தேசிய ரீதியில் மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், கரம், சதுரங்கம் ஆகிய தொடர் களை நடாத்த தீர்மானித் துள்ளது.


கல்லூரியின் உள்ளக அரங்கிலேயே தொடர்கள் அனைத்தும் இடம்பெற வுள்ளன.

மேசைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதியும், பூப்பந்தாட்டத் தொடர் டிசம்பர் மாதம் 3 ஆம் 4ஆம் திகதிகளிலும், கரம் தொடர் டிசம்பர் மாதம் 10 ஆம் 11 ஆம் திகதிக ளிலும், சதுரங்கத் தொடர் டிசெம்பர் மாதம் 17 ஆம் 18ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன என்று கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில் வேந்தன் அறிவித் துள்ளார்.

(க-54)

# தேசிய ரீதியான பளு தூக்கல்; வட மாகாண மாணவி சாதனை

வடமாகண வரலாற்றிலே முதன் முறையாக வட மாகாண மாணவிகள் பங்கு பற்றிய தேசிய ரீதியிலான



பளு தூக்குதல் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆஷிகா ஒட்டு மொத்தமாக 285 கிலோ தூக்கி தங்க பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இப் போட்டியானது அரநாயக்காவில் நடை பெற்றது.


வடமாகாண வரலாற்றிலே முதன் முறையாக வடமா காண மாணவிகள் பங்கு பற்றிய தேசிய ரீதியிலான பளு தூக்குதல் போட்டியில் வயாவிளான் மத்திய கல்லூரி மாணவி தே. லயன்சிகா ஒட்டு மொத்தமாக 175 கிலோ தூக்கி தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத் துள்ளார்.

# இந்தியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட்: சரிவிலிருந்து மீண்டது இங்கிலாந்து அணி!

மொஹாலி, நவ.27

இந்தியா-இங்கிலாந்து இடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் 3 ஆவது போட்டி மொஹாலியில் நேற்றுத் தொடங்கியது.

2 ஆவது டெஸ்ட் போட்டியில் 246 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டதன் மூலம் இந்தத் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ள கோஹ்லி தலைமையிலான இந்திய அணி, வெற்றியைத் தொடரும் முனைப்பில் இந்தப் போட்டியில் களம் காணுகிறது. அதேநேரத்தில் இங்கிலாந்து அணி வெற்றிப் பாதைக்கு திரும்பும் முனைப்பில் களமிறங்கியது.



கடந்த போட்டியில் விளையாடிய இந்திய விக்கெட் காப்பாளர் ரித்திமான் சஹா காயம் காரணமாக விலகியிருப்பதால் பார்த்திவ் பட்டேல் சேர்க்கப்பட்டுள்ளார். இவர், 8 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறார். அதேபோல காயம் காரணமாக ராகுல் இந்த டெஸ்ட் போட்டியிலிருந்து விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக கருண் நாயர் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றைய போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. இந்திய அணி இரண்டு சுலபமான பிடியெடுப்புகளை கோட்டை விட்டதால் இங்கிலாந்து அணிக்கு நல்ல தொடக்கம் கிடைத்தது.

ஜடேஜா, அஸ்வின் ஆகிய இருவருமே சுலபமான பிடியெடுப்புகளை கோட்டை விட்டார்கள். ஹமீது, 9 ஓட்டங்களில் உமேஷ் யாதவ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

முதல் ஒரு மணி நேரம் இந்திய அணிக்கு நெருக்கடியாக அமைந்தாலும் அடுத்த ஒரு மணி நேரத்தில் இந்திய பந்து வீச்சாளர்கள் அசத்தினார்கள். இடைவேளைக்குப் பிறகு ஜெயந்த் யாத்வ் வீசிய முதல் பந்தில் 15 ஓட்டங்களில் ரூட் வீழ்ந்தார்.

அதேபோல அஸ்வின் வீசிய முதல் பந்தில் 27 ஓட்டங்களில் குக் ஆட்டமிழந்தார். பின்னர் மொயீன் அலியின் விக்கெட்டை ஷமி வீழ்த்தினார். மொயீன் 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மதிய உணவு இடைவேளையின்போது இங்கிலாந்து அணி 29 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 92 ஓட்டங்களை எடுத்தது.

இதன்பிறகு இங்கிலாந்து துடுப்பாட்டக்காரர்கள் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தேநீர் இடைவேளை வரை ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 103 ஓட்டங்கள் சேர்த்தார்கள். ஸ்டோக்ஸ், ஜடேஜா பந்துவீச்சில் 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் பேர்ஸ்டோவும் பட்லரும் பொறுப்பாக ஆடினார்கள். தேநீர் இடைவேளையின் போது இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 205 ஓட்டங்களை எடுத்துள்ளது. பேர்ஸ்டோவ் 66, பட்லர் 38 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணி 85 ஆவது ஓவரில் 260 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 268 ஓட்டங்களைச் சேர்த்து சரிவிலிருந்து மீண்டுள்ளது என்றே கருத முடிகிறது.

# நியூசிலாந்திற்கு எதிரான 2 ஆவது டெஸ்ட்: பாகிஸ்தான் 5 விக்கெட்டை இழந்து திணறல்

ஹமில்டன், நவ.27


நியூசிலாந்திற்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 76 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து திணறி வருகிறது.

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹமில்டனில் நேற்று முன்தினம் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது. அந்த அணி 39 ஓட்டங்கள் எடுப்பதற்குள் இரண்டு விக்கெட்டுக்களை இழந்தது. 3 ஆவது விக்கெட்டுக்கு ராவல் உடன் ரோஸ் டெய்லர் ஜோடி சேர்ந்தார்.

நியூசிலாந்து அணி 21 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 77 ஓட்டங்கள் எடுத்திருக்கும் போது மழை பெய்தது. இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

மழை தொடர்ந்து பெய்ததால் அத்துடன் முதல் நாள் ஆட்டம் முடித்துக் கொள்ளப்பட்டதாக நடுவர்கள் அறிவித்தனர். ஆகவே 21 ஓவர்களுடன் முதல்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ராவல் 35 ஓட்டங்களுடனும், டெய்லர் 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.



நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. ராவல், டெய்லர் தொடர்ந்து ஆட்டத்தை தொடங்கினார்கள். ராவல் அரைசதம் அடித்து 55 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். டெய்லர் 37 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார்.

அதன்பின் வந்த கிராண்ட்ஹோமே 37 ஓட்டங்களுடனும், வாட்லிங் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களும் எடுக்க நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 271 ஓட்டங்கள் சேர்த்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

பாகிஸ்தான் அணி சார்பில் சோஹைல் கான் 4 விக்கெட்டும், இம்ரான் கான் 3 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது. நியூசிலாந்து அணியின் சவுத்தி மற்றும் வாக்னர் ஆகியோரின் வேகத்தில் பாகிஸ்தான் வீரர்கள் நிலைகுலைந்தனர். அந்த அணியின் சமி அஸ்லாம் (5), அசார் அலி (1), யூனிஸ்கான் (2) அடுத்தடுத்து சவுத்தி பந்தில் ஆட்டம் இழந்தனர். ஆசாத் ஷபிக் (23), மொகமது ரிஸ்வான் (0) வாக்னர் பந்தில் ஆட்டம் இழந்தனர்.

பாபர் ஆசம் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களை எடுக்க, பாகிஸ்தான் 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 76 ஓட்டங்களை எடுத்திருந்தது. பாபர் ஆசம் 34 ஓட்டங்களுடனும், சர்பிராஸ் அகமது 9 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

## இலங்கையில்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரதி புதுவையில் சந்தித்த சாமி யாழ்ப்பாணம் அல்வாய் அருளம்பலம் சாமி என்ற வரலாற்று தகவலும், அந்தச் சாமிக்கு வடமராட்சி வியாபாரி மூலையில் ஒரு சமாதியும் கோயிலும் இருக்கையில், செங்கை ஆழியான், எதற்காக பாரதியின் ஞானகுரு ஆறுமுக சாமி என்று நிறுவ முயன்றார்?

செங்கை ஆழியானின் குறிப்பிட்ட நூல் *2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம்* கொழும்பில் யூனி ஆர்ட்ஸ் அச்சகத்தில் அச்சசாகி வெளியாகியிருக்கிறது.

செங்கைஆழியான், குறிப்பிடும் ஆறுமுகசாமி, யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கிழக்கில் கலட்டி அம்மன் கோயிலடியில் வசித்த கதிரவேலு - தையலாச்சி தம்பதியருக்கு 1863ஆம் ஆண்டு ஒரு மழைக்கால அதிகாலை வேளையில் பிறந்திருக்கிறார்.

தமிழ்நாடு ஸ்ரீவல்லிபுத்தூர் - சாத்தூர் சாலையில் வரும் புளி யந்தோப்பு என்னும் இடத்தில் செங்கை ஆழியான் சொல்லும் அந்த ஆறுமுக சாமியின் சமாதிக்கோயில் இருக்கிறது என்பதற்கு ஆதாரமான தகவல்களுடனும் அவர் தனது முந்தாதையர் என்றும் நிரூபித்து, எட்டயபுரத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் நடத்திய பாரதி விழாவில் பங்கேற்று, பகிரங்கமாக தான்தான் பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணம் ஆறுமுகசாமியின் பேரன் எனவும் தெரிவித்திருக்கிறார்.

செங்கைஆழியான், இலங்கையில் 1956 ஆம் ஆண்டில் நாடுதழுவிய ரீதியில் பாரதி நினைவு கூரப்பட்டபோதும், அதன்பின்னர் 1982 - 1983 பாரதி நூற்றாண்டு காலப் பகுதியிலும் இந்தத் தகவல்களை வெளி யிடாமலிருந்தமைக்கு காரணம் என்ன..? என்பது தெரிய வில்லை.

பேராசிரியர்கள் பொன். பூலோகசிங்கம், கைலாசபதி, சி.தில்லைநாதன், மற்றும் ச.அம்பிகைபாகன், அ.ந.கந்தசாமி, சோமகாந்தன் ஆகியோர் 'பாரதியின் ஞானகுரு அல்வாய் அருளம்பலம் சாமியார் தான்' என்று நிரூபித்திருக்கையில் - அவருக்கு வியாபாரி மூலையில் ஒரு சமாதிக் கோயில் இருக்கையில் - செங்கை ஆழியான் எதற்காக மற்றும் ஒரு சாமியாரை பாரதியின் ஞானகுருவாக நிரூபிக்க முயன்றார்...?

அவர் சொல்வது போன்று ஒரு சாமியார் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அவருடைய வம்சத்தில் தோன்றியிருக்கலாம்.

அதனை அவர் வரலாற்றின் பதிவாக எழுதுவதிலும் தவறில்லை.

ஆனால், ஏன் உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை புனை வாக்கினார்...?

புனைகதையாளரின் மற்றும் ஒரு புனைவு என்றே இது பற்றி இணையத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆதாரத்திற்கு சில இணைப்புகளை இங்கு தருகின்றோம்.

www.ourjaffna.com

www.srinoolakam.blogspot.com

www.noolaham.org

செங்கைஆழியான் நாடறிந்த எழுத்தாளர். அவரைக் குறைகூறும் எண்ணத்தில் இதனை இங்கு எழுதவில்லை. இலங்கையில் பாரதியின் தாக்கத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்பொழுது மேற்குறிப்பிட்ட தகவல்களையும் கடந்து செல்ல முடியவில்லை.

இலங்கையில் பாரதி இயல் ஆய்வாளர்கள் இதுகுறித்து எதிர்வினையாற்றலாம்.

# அரசியல் கைதிகளை விடுவித்தால்தான் பட்ஜெட்டுக்கு ஆதரவு என நிபந்தனை

### *அரசுக்கு விதிக்கும்படி கூட்டமைப்பிடம் கோரிக்கை*

2017 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அச்சமயம் அதற்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தமிழ்க்கூட்டமைப்பு நிபந்தனை ஒன்றை அரசுக்கு விதிக்கவேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய்தால் தான் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டை கூட்டமைப்பு எடுக்க வேண்டும்.

–அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு இவ்வாறு கோரியுள்ளது.

அரசியல் கைதிகளை எதுவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்யும் அரசின் தீர்மானத்தை அரசு எடுக்க வேண்டும் எனக்கோரும் மகஜர் ஒன்றையும் அவ்வமைப்பு ஜனாதிபதியிடம் கையளித்திருக்கின்றது.

அத்துடன் அரசியல் கைதிகளிற்கு இழைக்கப்படும் அநீதிகள், அவர்களிற்கு எதிராக புரியப்பட்ட மனித உரிம மீறல்கள் ஆகியன சமந்தமான அறிக்கையொன்றையும் அவ்வமைப்பு ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளது.

இது தொடர்பாக அவ்வமைப்பின் செயற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் ஊடகங்களிற்கு இன்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

நீதிமன்ற நடவடிக்கை களின் ஊடாக அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் நடவடிக்கை இழுபறி நிலையிலையிலேயே இருந்துவருகின்றது. அதனூடாக உரிய நிவாரணம் விரைந்து கிடைக்குமென நாம் நம்பவில்லை. ஆகவே சகல அரசியல் கைதிகளையும் எதுவித நிபந்தனையும் இன்றி அரசு உடன் விடுதலை செய்யவேண்டும். இதை வலியுறுத்தும் மகஜர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசியல் கைதிகளாகவுள்ளோர் கடத்தப்பட்டு, கைதுசெய்யப்பட்ட அல்லது கைது செய்யப்பட்ட நாளிலிருந்து நீதிமன்ற சட்ட நடவடிக்கைகள் தொடர்கின்ற காலப்பகுதியினுள் அவர்களிற்கு எதிராக புரியப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் அநீதிகள் தொடர்பான அறிக்கயும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசுக்கு நல்லிணக்கம் மீது உண்மையாகவே அக்கறையிருந்தால் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னர் நல்லிணக்க நடவடிக்கையின் ஓர் அடையாளமாக தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ)

# ராஜீவ் கொலை, மறைக்கப்பட்ட உண்மைகளும் பிரியங்கா நளினி சந்திப்பும்

### *நளியின் நூல் சென்னையில் வெளியீடு*

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் நளினியின் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கிய 'ராஜீவ் கொலை: மறைக்கப்பட்ட உண்மைகளும்; பிரியங்கா, நளினி சந்திப்பும்' என்ற நூல் சென்னையில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு கடந்த 25 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர் நளினி.

ராஜீவ் கொலையின் பின்னணி, வழக்கு விசாரணை, வேலூர் சிறையில் நடைபெற்ற நளினி–பிரியங்கா காந்தி சந்திப்பு உள்ளிட்ட பரபரப்பான தகவல்கள் 'ராஜீவ் கொலை: மறைக்கப்பட்ட உண்மைகளும்; பிரியங்கா, நளினி சந்திப்பும்' என்ற நளினியின் சுயசரிதை நூலில் விபரிக்கப்பட்டுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் பா. ஏகலைவன் தொகுத்துள்ள இந்த நூலில், பல்வேறு பரபரப்பு தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

யாழ். பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ள இந்த நூலின் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் மாலை சென்னை வடபழனியில் நடந்தது.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ நூலை வெளியிட்டுவைக்க முதல் பிரதியை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் பெற்றுக்கொண்டார்.

இந்த விழாவில் நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்சி வேலுச்சாமி, முன்னாள் நீதிபதி ஹரி பரந்தாமன், நளினியின் தாயார் பத்மாவதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். (ம)

## காஸ்ட்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காஸ்ட்ரோவின் மரணத்தை ஒட்டி கியூபாவில் ஒன்பது நாள்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கடற்கரை பகுதியில் இருந்து மிக அருகில் உள்ள ஒரு தீவு நாடான கியூபாவில், உலகின் நீண்ட கால ஆட்சி செய்த கம்யூனிச ஆட்சியாளர் பிடல் காஸ்ட்ரோ.

கியூபா தலைவரின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

"சீன மக்கள் ஓர் உண்மையான தோழனை இழந்துவிட்டனர். காஸ்ட்ரோவின் சாதனைகள்: என்றும் நிலைத்திருக்கும்" என சீன அதிபர் ஷி ஜின்பிங் தெரிவித்தார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், "காஸ்ட்ரோ ஒரு சகாப்தத் தின் சின்னம்" என்றார்.

புனித யாகப்பர் பிரான்சிஸ் "அவரது மரணம் ஒரு சோகச் செய்தி. அதற்காகப் பிரார்த்தனை நடத்தப்பட்டது" -என்று கூறினார்.

இந்திய பிரதமர் மோடி, "இருபதாம் நூற்றாண்டின் மிக சின்னமான நபர்களில் ஒருவர் காஸ்ட்ரோ" என விவரித்தார்.

காஸ்ட்ரோவின் வாழ்வு குறித்து பி.பி.ஸி. தெரிவித்த விவரணம் வருமாறு:–

பிடல் காஸ்ட்ரோ உலகில் மிக நீண்ட காலம் ஆட்சி செய்த ஒரு சர்வாதிகாரி.

அவரை ஒழித்துக் கட்ட அமெரிக்கா பலமுறை முயன்ற போதும், காஸ்ட்ரோ ஒன்பது அமெரிக்க அதிபர்களைப் பார்த்துவிட்டார். அவர் அமெரிக்காவுக்கு தொடர்ந்து முள்ளாகவே இருந் தார். அமெரிக்காவின் கொல்லைப்புறத்தில் ஒரு கம்யூனிஸ்ட் தலைவர் ஆவார்.

அமெரிக்காவின் ஆதரவு பெற்ற ஊழல் மிகுந்த பட்டிஸ்டா அரசை அகற்றவேண்டும் என்று காஸ்ட்ரோ திடமாக இருந் தார்.

காஸ்ட்ரோவும், அவரது சக புரட்சியாளர்களும் அவர்கள் ஒளிந்திருந்த மலைப் பகுதியிலிருந்து ஒரு இலக்கண சுத்தமான கெரில்லாப் போரை தொடங்கினர்.

1959இல் வெற்றி நாயகனாக காஸ்ட்ரோ தலைமையிலான படைகள் தலைநகர் ஹவானாவுக்குள் நுழைந்தன. பட்டிஸ்டா தப்பியோடினார். கியூபாவில் புதிய அரசு அமைந்தது. அதில் புகழ் பெற்ற செகுவெராவும் பதவி வகித்தார்.

அது மக்களுக்கு அவர்களின் நிலங்களை திரும்பத் தருவதாக வாக்களித்தது. ஏழை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் உறுதியளித்தது.

அதன் பிறகு காஸ்ட்ரோ, கியூபாவின் சக்திமிக்க அண்டை நாடான அமெரிக்காவுக்குச் சென்று, நேசக்கரம் நீட்டினார்.

ஆனால் அமெரிக்க அதிபர் ஐஸன்ஹோவர் அவரை சந்திக்க மறுத்த நிலையில், தான் நிராகரிக்கப்பட்டமை போல் காஸ்ட்ரோ உணர்ந்தார்.

அமெரிக்காவால் மூக்குடைபட்டதால், தான் சோவியத் ஒன்றியம் மற்றும் அதன் தலைவர் நிக்கிட்டா குருசேவின் செல்வாக்குவளையத்துக்குள் செல்ல நேரிட்டதாக அவர் கூறி னார்.

கியூபா அந்தக் கட்டத்தில் சோவியத் ஒன்றியத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நிலவிய பனிப்போரின் ஒரு யுத்தகளமாக மாறியது.

ஏப்ரல் 1961இல் பன்றிகள் குடா யுத்தம். இது கியூபா புலம்பெயர்ந்த மக்களில் சிலரை ஒரு தனி ராணுவமாக ஆட்சேர்ப்பு செய்து, அவர்களை கியூபாவிற்குள் ஊடுருவ வைத்து, காஸ்ட்ரோவை அகற்ற அமெரிக்கா எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

ஆனால், இளம் புரட்சியாளரான காஸ்ட்ரோ அந்த முயற்சியை முறியடித்தார்.

அதற்கு ஒரு ஆண்டுக்குப் பின்னால் மேலும் பெரிய நெருக்கடி. சோவியத் ஒன்றிய ஏவுகணைகள் கியூபாவை நோக்கி கொண்டு செல்லப்படுவதை அமெரிக்காவின் வேவு பார்க்கும் விமானங்கள் கண்டன. உலகம் ஓர் அணு ஆயுதப் போரின் விளிம்பில் நின்றது.

இரு வல்லரசுகளும் நேருக்கு நேர் மோதல் நிலையில்.

ஆனால் இறுதியில் சோவியத் ஒன்றியத் தலைவர் குருசேவ் தான் முதலில் பணிந்தார். கியூபாவில் உள்ள ஏவுகணைகளை அங்கிருந்து அகற்றினார். அதற்கு மாறாக, துருக்கியில் வைக்கப்பட்டிருந்த அமெரிக்க ஆயுதங்களை விலக்கிக் கொள்ள அமெரிக்கா ரகசியமாக ஒப்புக்கொண்டது.

ஆனால் இதன் விளைவு, காஸ்ட்ரோ அமெரிக்காவின் முதல் விரோதியானார். பல முறை அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. அவரைப் படுகொலை செய்ய முயன்றது.

அவர் சுருட்டுப் புகைக்கும் பழக்கம் உள்ளவர் என்பதால், ஒருமுறை அவர் புகைக்கும் சுருட்டில் கூட வெடிமருந்துகளை நிரப்பி அவரைக் கொல்ல முயன்றது சி.ஐ.ஏ. வேறு பல சதித்திட்டங்கள் இன்னும் விநோதமானவை.

ஒரு பவுடரைத் தயாரித்து அவரது முகத்தில் தடவி, அவர் தாடி முடி கொட்டிவிடுமாறு ஒரு திட்டம். இது நடந்தால் மக்கள் அவரை நோக்கி சிரிப்பார்கள் என்பது திட்டம்.

ஆனால் அமெரிக்கா கியூபாவுக்கு எதிரான சதியில் ஈடுபட்டிருந்த வேளையில், சோவியத் ஒன்றியம் கியூபாவிற்கு பண உதவியைக் கொட்டியது. கியூபாவில் கரும்பில் உற்பத்தியாகும் சர்க்கரையை சோவியத் ஒன்றியம் இறக்குமதி செய்தது. சோவியத் ஒன்றியக் கப்பல்கள் ஹவானா துறைமுகத்தில் நங்கூரமிட்டபடியே இருந்தன. அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளால் கியூபா பாதிக்கப்படாமல் இருக்க , சோவியத் ஒன்றியம் அக்கப்பல்களில் பொருள்களை வழங்கி வந்தது.

ஆனால் சோவியத் கம்யூனிசம் வீழ்ந்த போது கியூபாப் பொருளாதாரமும் வீழ்ந்தது.

இந்த சின்னஞ்சிறு நாடு பொருளாதார சரிவை எதிர்நோக்கியது. உணவுக்காக மக்கள் வரிசையில் நிற்க நேரிட்ட நிலையில், அவர்களின் கோபம் அதிகமானது.

1990களில் கியூபா மக்கள் பலருக்கு காஸ்ட்ரோவின் கம்யூனிச ஆட்சி போதும் போதுமென்றாகிவிட்டது.

பல ஆயிரக்கணக்கான கியூபர்கள் ஆபத்தான படகுகளில் கடல் மூலம் அமெரிக்காவின் ப்ளோரிடா மாநிலத்துக்கு தப்பியோடினர்.

அது பிடல் காஸ்ட்ரோ மீது மக்கள்காட்டிய அவநம்பிக்கையின் அப்பட்டமான வெளிப்பாடு.

அந்த கியூபா புலம்பெயர் மக்கள், காஸ்ட்ரோவின் ஆட்சியைக் குலைக்க பெரும் பிரயத்தனம் எடுத்தனர். ஆனாலும், கியூபாவில் தான் செய்த சாதனைகள் சிலவற்றுக்காக காஸ்ட்ரோ பெருமைப்படலாம்.

அனைவருக்கும் இலவசமாக கிடைத்த உயர்தர மருத்துவ சேவைகள் , தொழில் வளம் பெற்ற நாடுகளுக்கு சமமாக எட்டப்பட்ட எழுத்தறிவு போன்றவை அவரது சாதனைகள்.

ஆனால் 2006ஆம் ஆண்டு, உடல்நலக்குறைவால் காஸ்ட்ரோ தனது சகோதரர் ரவூலுக்கு அதிகாரத்தைக் கையளிக்க நேர்ந்தது.

ரவூல், அவரது அண்ணனின் சாதனைகளை கைவிடாமல், பல புதிய சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

அதிகாரத்தில் இல்லாத காஸ்ட்ரோ, உடல் ரீதியாக பல வீனமடைந்து, பொது வெளியில் அபூர்வமாகவே காணப்பட்டார்.

அதன்பின்னர் அந்த ஆண்டு, அமெரிக்காவும் கியூபாவும் தங்கள் உறவுகளில் சுமுக நிலையை எட்ட முயற்சிகளைத் தொடங்கின.

பிடல் காஸ்ட்ரோ 20 ஆம் நூற்றாண்டின் ஒரு மாபெரும் தலைவராக விளங்கினார். அவரது தாக்கம் மெல்ல மெல்லத்தான் மறையும்.

பல கியூபா பிரஜைகள் அவரை வெறுத்தாலும், பலர் அவரை மிகவும் நேசித்தனர். அமெரிக்கா என்ற கொலையாத்தை எதிர்த்த டேவிட் என்று அவரை அவர்கள் பார்த்தனர்.

அவர்களுக்கு காஸ்ட்ரோதான் கியூபா; கியூபாதான் காஸ்ட்ரோ.

காலைக்கதிர்
Kalaikkathir

# இராணுவத்தின் களியாட்ட நிகழ்வு திடீரென ரத்து

மாவீரர்களின் நினைவு தினத்துக்கு இடைஞ்சல்தரும்வகையில் வவுனியாவில் இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களியாட்ட நிகழ்வு திடீரென இரத்து செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் அமைந்துள்ள வன்னி படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் வவுனியா வைரவப் புளியங்குளம் சிறுவர் பூங்காவில் நேற்று குறித்த இசை நிகழ்ச்சியை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன.

இராணுவத்தினரின் இந்த செயற்பாடு குறித்து தமிழ் மக்கள் பலரும் அதிருப்தி வெளியிட்டு வந்த அதேவேளை, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்தி ஆனந்தனும் இதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்திருந்திருந்தார்.

ஊடகங்களிலும் இது குறித்து பிரசாரம் செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக நிகழ்வுக்கான ஏற்பாடுகளை செய்துவந்த இராணுவம், நேற்று முன்தினம் பிற்பகல் நிகழ்வை ரத்து செய்வதாகத் தெரிவித்து நிகழ்வுக்காக அமைக்கப்பட்டிருந்த கொட்டகைகளை அகற்றியது.

## யாழ்.உடுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கை ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் ஏற்பாடு செய்துள்ளனர்.கட்சியின்தலைவர் வேந்தன், செயலாளர் கதிர் ஆகியோர் தலைமையில் நேற்று அங்கு சென்ற கட்சி உறுப்பினர்களும், பொது மக்களும் அந்த மாவீரர் துயிலும் இல்லம் இருந்த பகுதியை வெட்டி துப்புரவு செய்வதில் ஈடுபட்டனர்.

இந்தச் சிரமதானப் பணிகளையும் சிவில் உடையில் வந்த பொலிஸார் நேற்று சிறிது நேரம் நோட்டமிட்டுச் சென்றனர் எனத் தெரியவந்தது.

யாழ்.மாவட்டத்தில் சாட்டிப் பகுதியில் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த பிரதேசத்தில் இருந்த இராணுவம் விலகிவிட்டது. எனினும் அங்கு இம்முறை நினை வேந்தல் நிகழ்வு நடத்துவதற்கான ஏற்பாடு ஏதும் நடைபெற்றதாகத் தெரியவரவில்லை.

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்து கொள்வர்.

மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அப்பால் பொது இடங்களில் இன்று மாலை நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரில் ஆள்காட்டிவெளி, ஆண்டான்குளம் ஆகிய பகுதிகளில் மாவீரர் துயிலும் இல்லங்கள் இருந்த இடங்களை விட்டு இராணுவம் வெளியேறிவிட்டது.

எனினும், பரந்தவெளிகளுக்கு மத்தியில் ஏகாந்தமான இடத்தில் இந்தத் துயிலும் இல்லங்கள் அமைந்திருந்த பகுதியில் இன்று நினைவேந்தல் நிகழ்வு ஏதும் நடைபெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை.

எனினும் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் மண்டபத்தில் இன்று மாலை நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவிருக்கின்றது.

அதேசமயம், வவுனியா, யாழ்ப் பாணம் – குறிப்பாக யாழ். பல்கலைக்கழகம் – பகுதிகளில் நினை வேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என அறிய முடிந்தது.

## வன்னிவிளாங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்த ராஜா வழிப்படுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படியும் ஒத்திப்போடுவது என்ற தீர்மானத்தில் அரசின் உயர்மட்டம் இருப்பதாகவும் கூறப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பான புதிய சட்டங்களின் படி, அத்தேர்தல்களை நடத்துவதற்கு முன்னால் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரப் பகுதிகளின் எல்லை மீள்நிர்ணயம் நடைபெற்று முடிய வேண்டும். அதனைக் காரணம் காட்டியே தற்போது அத்தேர்தல்களை அரசு இழுத்தடித்து வருகின்றது.

இவ்வருட இறுதிக்குள் எல்லை நிர்ணயப் பணி பூர்த்தியாகும் என்றும் –

அது பூர்த்தியானாலும், உரிய தேர்தல் அறிவிப்புக்களை விடுத்து, சட்டப்படி தேவையான கால அவகாசத்தை வழங்கி, அடுத்த மார்ச் மாதமளவில் அதனை நடத்த முடியும் என அண்மைக் காலத்தில் அரசுத் தரப்பு தகவல்கள் வெளியிட்டு வந்தது.

எனினும் தனது புதிய உத்தேச அரசமைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரத்தைப் பெறவேண்டிய கட்டாயத்தில் இருக்கும் அரசுத் தரப்பு, அந்த முயற்சியை சர்வஜன வாக்கெடுப்பில் வைத்து முறியடிப்பதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் மஹிந்த அணிக்கு உள்ளூராட்சித் தேர்தல் மூலம் பலம் பெறும் வாய்ப்பை அளிக்காது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆகவே, அடுத்த ஆண்டில் முதலில் – பெரும்பாலும் மார்ச்சில் – சர்வஜன வாக்கெடுப்பு நடக்கும்.

அதற்கு முன்னர், உத்தேச புதிய அரசமைப்பின் நகல் வடிவத்துக்கான இணக்கத்தைக் காண, அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மூலம் அங்கீகாரத்தைப் பெறவும் அரசுதரப்பு முயற்சிக்கும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சித்தேர்தல் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில்தான் நடக்கும் என்பதை நேற்றுக் காலியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (உ)



உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த பிரதேசத்தில் நேற்று ஜனநாயகப் போராளிகள் கட்சியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சிரமதானப் பணிகளில் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.

# வடக்கு, கிழக்கில் தமிழ் மொழிமூல ஊழியர்களுக்கு பெரும் பற்றாக்குறை

### நிவர்த்திக்க வலியுறுத்துகிறார் தினேஷ்

கொழும்பு நவ.27

வடக்கு, கிழக்கு உட்பட பல்வேறு இடங்களில் நிலவும் தமிழ் மொழிமூல ஊழியர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது எதிரணி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன எம்.பி . சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

தற்போது தொழில் திணைக்களத்தில் 239 வெற்றிடங்கள் உள்ளன. அவற்றில் 202பேரை இணைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ் மொழி மூலமான ஊழியர்களுக்கான வெற்றிடமும் உள்ளது.

அதன் பிரகாரம் தற்போது நிலவும் ஊழியர்கள் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். குறிப்பாக வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் தமிழ் மொழி மூலமான வெற்றிடங்கள் அதிகமாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.–என்றார். (ம)

## காஸ்ட்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்துக்கும் இடையிலான மரணம் வரையிலானபோராட்டமே புரட்சியாகும் – பிடெல் காஸ்ட்ரோ.

தங்களது மாபெரும் தலைவரை இழந்து நிற்கும் கியூபாவின் மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். தனது கொள்கைகள் மற்றும் நம்பிக்கைகளில் உறுதியாக நின்ற பிடல் காஸ்ட்ரோ 50 வருடங்களுக்கும் மேலாக கியூபா மக்களுக்கு தலைமை தாங்கினது மட்டுமல்லாது கியூபாவின் புரட்சிகர இயக்கத்திற்கு 1959இல் தலைமைத்துவம் தாங்கி, கியூபா மக்களின் நம்பிக்கைக்குரிய ஸ்திரமான தலைவராக விளங்கினார்.

தன்னுடைய ஆட்சிக் காலத்தில் கியூபா மக்களின் வாழ்க்கையில் ஒருமாற்றத்தை கொண்டுவந்த பிடல் காஸ்ட்ரோ விசேடமாக மிக வறுமையில் வாழ்ந்த கியூபா மக்களின் நலம் குறித்து அதிக கவனம் செலுத்தினார்.

தன்னுடைய நாட்டு மக்களின் நல்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்திய அதேவேளை காஸ்ட்ரோ மிக வறுமையில் இருந்த சில ஆபிரிக்க நாடுகளுக்கு காட்டிய அக்கறைக்காக அவர்களால் ஒருபோதும் மறக்கப்படமாட்டார்.

உலகம்முழுவதிலும் பல்வேறு இயக்கங்கள் தனி நபர்கள் மற்றும் பிடல் காஸ்ட்ரோவின் சிந்தனைகளை ஏற்காதவர்கள் உட்பட எனஅவரது தலைமைத்துவத்தினால் ஈர்க்கப்பட்டவர்கள் அநேகர்.

அநேகமான கியூப மக்களின் வாழ்க்கையில் பிடல் காஸ்ட்ரோ ஒரு மிகச் சிறந்த தலைவராக தனி இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்த துக்ககரமான சந்தர்ப்பத்தில் கியூபாவிற்கும்அதன் மக்களுக்குமானபிடல்காஸ்ட்ரோவின் கனவானது நனவாக வேண்டுமெனநான்பிரார்த்திக்கிறேன். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

16 எம்.பிக்களையும் கடந்த வியாழனன்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துப்பேசினார் .

அச்சமயமே மேற்படி விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்துமாறு தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கேட்கவிருக்கின்றார் என்ற தகவலை கூட்டமைப்பு தரப்பினருக்கு ஜனாதிபதி தெரியப்படுத்தினார் என செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது. (உ–9)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்வர் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்த நிகழ்வுக்கான முன்னேற்பாடாக கடந்த இரண்டு நாள்களாக இந்தத் துயிலும் இல்லம் இருந்த பிரதேசம் பொது மக்களின் பங்களிப்புடன் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இன்றைய நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக நேற்றும் முன்தினம் இரவு வரை அப்பகுதியில் பொதுமக்கள் திரண்டிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் அங்கு நின்றிருந்தார்.

அச்சமயம் அப்பகுதிக்குப் பொலிஸ் வாகனம் ஒன்றில் சிவில் உடையில் வந்து நின்று நோட்டமிட்டுச் சென்றனர் எனக் கூறப்பட்டது. (உ)

## முழங்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரியவந்தது.

இன்றைய நிகழ்வுக்கு முன்னேற்பாடாக நேற்றும், நேற்று முன்தினமும் இந்தத் துயிலும் இல்லம்இருந்த பிரதேசம் பொது மக்களினால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

## மீள்குடியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவை.சோ.சேனாதிராசா நேற்று சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். 2017ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டத்தின் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செலவுத் தலைப்புகள் மீதான குழு நிலைவிவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்–

2.1 மில்லியன் (21 இலட்சம்) ரூபாவில் பொருத்து வீடுகளை அமைக்கும் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமி நாதனின் யோசனையை நாம் எதிர்க்கிறோம். அந்த வீடுகளுக்கு முறையான அடித்தளமொன்று கூடக் கிடையாது. பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் சமச்சீரான, ஒரேமாதிரியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

எமது மக்கள் மூன்று தசாப்த கால யுத்தத்தால் சொந்த இடங்களை இழந்து முகாம்களிலும் நண்பர்களின் வீடுகளிலும் வாழ்கின்றார்கள். அவர்களின் எதிர்பார்ப்பைப்புரிந்துகொள்ளுங்கள். மீள்குடியேற்றத்தைப் பூரணப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அந்தப் பிரதேச மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து முன்னெடுங்கள். –என்றார். (ம)







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.